கல்கி




KALKI 20-7-1958 30 நயாபை

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



0724



மலர் 17 இதழ் 51

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி௵ ஆடிமீ 5௳

நிலச் சீர்திருத்தம்

"'நிலச் சீர்திருத்தத்தைச் செய்தே தீருவோம். பெரும் குடியைப் பிரித்து நிலமின்றி உழைப்பவர்களுக்குக் கொடுப்போம். நடுவே நிற்பவரைத் தொலைப்போம்' என்று ஜனங்களுக்குக் கொடுத்த வாக்கை நாம் காப்பாற்றவில்லை. சொன்னதைச் செய்யவாவது வேண்டும், இல்லையேல் நாம் பதவியை விட்டுக் கீழ் இறங்கவாவது வேண்டும்" என்று நேருஜி சினத்துடன் சீற, உடனே காங்கிரஸ் செயற்குழு மூர்த்திகளுக்கு வழி தேட உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

சிறு குடியானவர்களைப் போஷிப்பது அரசாங்கத்தின் கடமை. நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையுமாகும். தம் வயலைத் தாமே உழுது பயிர் செய்யும் குடியானவர்களே நாட்டின் செல்வம். நிலத்தை உழுது பயிர் செய்வது சிறு குடியானவர்களுடைய வாழ்க்கை முறை. அது முதல் போட்டுச் செய்யும் வெறும் வியாபாரம் அல்ல. ஒரு வியாபாரத்தை லாப நஷ்டம் பார்த்து நஷ்டமாயின் கடையை மூடிவிடலாம். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களைச் சர்க்கார் அப்படிக் கடையை மூடச் செய்ய இயலாது.

நம் நாட்டில் நிலவுடைமையின் நிலை எப்படியிருக்கிறது என்று பார்ப்போம். ஆந்திர தேசத்தில் 67 சத விகிதம் 5 ஏக்கருக்குக் கீழும், 16 சத விகிதம் 10 ஏக்கருக்குக் கீழும், பம்பாயில் 52 சத விகிதம் 5 ஏக்கருக்குக் கீழும், 20 சத விகிதம் 10 ஏக்கருக்குக் கீழும், மத்தியப் பிரதேசத்தில் 60 சத விகிதம் 5 ஏக்கருக்குக் கீழும், 19 சத விகிதம் 10 ஏக்கருக்குக் கீழும், சென்னையில் 68 சத விகிதம் 5 ஏக்கருக்குக் கீழும், 17 சத விகிதம் 10 ஏக்கருக்குக் கீழுமாக இருக்கின்றன. மொத்தத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் சின்னப் பண்ணையே பிரதானமாக இருந்து வருகிறது.


நீர்ப்பாசன வசதியுள்ள நிலங்களை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த நிலை இன்னும் ஊர்ஜிதப்படுகிறது. பண்ணைகள் இன்னும் குறுகுகின்றன. நிலவுடைமை இதைவிடக் குறைவாகவே இருக்கிறது.

காவிரியாற்றுப் பாசனத்தில் ஒரு ஏக்கரில் சுமார் 15 லிருந்து 20 மூட்டை நெல் விளைகிறது என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுதிருக்கும் விலையில் இந்த விளைவு ரூ. 300 லிருந்து ரூ. 350 வரையாகிறது. உழவுக்கும், விதைக்கும், நடவுக்கும், உரத்துக்கும், வரிக்கும் அறுவடைச் செலவுக்குமாக இந்த வருமானத்தில் பாதிக்குமேல் செலவு ஆகிவிடுகிறது. ஆகவே, ஒரு ஏக்கருக்கு ரூ. 150 வீதம் 10 ஏக்கரா பண்ணைக் குடியானவனுக்கு மாதம் ரூ. 100 அல்லது 125 ரூபாய் வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஆண் பெண் வயதான குழந்தைகள் அனைவரும் சேர்ந்து உழைத்து இந்த நிலைமை.

விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயியை விட்டு நகரத்தில் வேலை செய்யும் ஆலைத் தொழிலாளியை எடுத்துக் கொள்வோம். சாதாரண வேலை செய்பவனுக்குத் தொழிற்சாலையில் நாளுக்கு ஒன்றரை ரூபாய் கூலி கொடுக்கிறார்கள். ஒரு தொழிலாளி குடும்பத்தில் இருவராவது வேலை செய்வது இயல்பு. அதாவது ஆலையில் வேலை செய்யும் கீழ்த்தரத் தொழிலாளி இருவர் அடங்கிய குடும்பத்துக்கு மாதம் சுமார் ரூ. 100 கிடைக்கிறது. இதுவுமல்லாமல் இலவசப் படிப்பு, நோய் வந்தால் வைத்திய உதவி, விடுமுறைகள், போனஸ் இவை அனைத்தையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் காவேரி பாசனம் பெற்ற பத்து ஏக்கர் நன்செய் நிலத்தை அனுபவிக்கும் குடும்பத்துக்கு மேல் தொழிலாளியின் வாழ்வு விளங்குகிறது.

ஆலைத்தொழிலாளியை விடக் குடியானவனைக் கீழ் நிலையில் வாழவிடுவது சமூகத்துக்கு நலமா என்பதைத்தான் நாம் முதலில் கவனிக்க வேண்டும்.

சுமை இறுத்துகிறது!



மண்டலக் காங்கிரஸ் கமிட்டிகளை உருவாக்க வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் தேபர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நாட்டில் பெரும்பாலோர் சிறு குடியானவர்கள்தான். உணவை உண்டாக்கி நகர மக்களுக்கு ஊட்டுபவரும் அவர்களே.

ஆலைகளில் செய்யும் பண்டங்கள் யாருக்கு விற்று வியாபாரம் நடக்கிறது? அந்தச் சிறு விவசாயிகளுக்குத்தான் விற்க வேண்டியதாகிறது. ஆகையால் பிரிக்கும் நிலங்களை முதலில் சிறு குடியானவர்களுக்குக் கொடுத்து, 10 ஏக்கர் நன்செய் நிலத்துக்குக் குறைவாக எந்தப் பண்ணையும் இல்லாமற்படி செய்ய வேண்டும். பெரிய மிராசுகளை உடைத்து நிலத்தைச் சின்னக் குடியானவர்களுக்குக் கொடுத்து, போதாப் பண்ணைகளைச் சரியான அளவுக்கு நிறைவுபடுத்த வேண்டும். இது தான் நிலச் சீர்திருத்தத்தின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். மக்கள் அனைவருக்கும் சின்னஞ் சிறு அளவில் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்து வறுமையைப் பரப்புவதில் என்ன பயன்? விவசாயம் சரியாக நடைபெறுவதற்குப் போதிய அளவு பண்ணை விஸ்தீரணம் இருக்க வேண்டும். நாட்டின் பண்ணைகளைச் சுக்கு நூறாக்குவது கூடாது.

இந்த முறையில் சீர்திருத்தம் நடைபெற்றால் அதைக் கண்டு பெரிய மிராசுதார்கள் பயப்பட வேண்டியது ஒன்றுமில்லை. பிறருக்குப் பிரித்துக் கொடுப்பதற்காகச் சொத்தை எடுத்துக் கொள்ளும்போது சர்க்கார் நிலத்துக்குரிய நியாய விலையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்க அவர்களுக்கு உரிமையுண்டு. அப்படிப் பெற்றுக் கொண்ட பணத்தை வேறு துறையில் போட்டு நாட்டின் நலத்தைப் பெருக்கலாம்.

நிலத்தைக் குடிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறோம் என்று மிராசுதார்கள் தாமாகவே முன்வர வேண்டும். நிலத்தைப் பங்கிட்டுக் கொடுத்தும், போதாப் பண்ணைகளுக்கு நிரவிக் கொடுத்தும் செய்யும் திட்டத்தைச் சர்க்காரிடம் விலை பெறுவதற்குப் பதிலாகக் குடியானவர்களுக்கே விலை பேசித் தந்து சமாதானத்தில் நிறைவேற்ற முடியும். அதற்கு வேண்டிய சௌகரியத்துக்காகச் சர்க்கார் ஓரளவு சட்டமும் செய்யலாம். மிராசுதார்களை யெல்லாம் சுக்கு நூறாக்கும் அவசரச் சட்டம் வேண்டியதில்லை. மிராசுதார்களும் விவசாயத்தில் ஈடுபட்டச் சிறு பண்ணைக் குடிகளும் ஒருவரோடு ஒருவர் கலந்து ஒப்புக் கொண்ட பிரிவினைகளை அரசாங்கத்தார் அங்கீகரித்தால் மட்டும் போதுமானது. ஆனால், பெரிய மிராசுதார்களிடம் வாங்கிய நிலத்துக்கு விலை கொடுக்கவுடனே சக்தியிராது. அந்த விதத்தில் செலுத்த வேண்டிய தொகையைச் சிறிது சிறிதாகக் கொடுப்பதற்கு அரசாங்கத்தார் உதவி செய்ய வேண்டும். இதுவும்கூடத் தேவைப்பட்ட அளவு உதவி செய்தால் போதும்.

மேற்கூறியவாறு, குடிகளும் பெரிய மிராசுதார்களும் தாங்களே கலந்து கொண்டு ஆங்காங்கு ஒற்றுமையுடன் நிலச் சீர்திருத்தத்தை

அமுல் செய்வதுதான் நாட்டுக்கு நலம். இதற்கு வேண்டிய திட்டமும் சட்டமும் சர்க்கார் செய்ய வேண்டும்.

காலச் சக்கரம் பின்னேக்கிச் சுழலாது என்பது உண்மை. ஆனல் முற்போக்கில் யாரையும் கொல்ல வேண்டும் என்பதும் இல்லை. பண்ணைகளைப் பிரித்துப் பிரித்துச் சரியான விவசாயத்துக்குத் தகுதியாகாமல் செய்வதும் சீர்திருத்தமாகாது.

ஒற்றுமையுடன் வாழ்ந்த நாட்டு மக்களை, குடியானவன் என்றும், மிராசுதார் என்றும், நிலமில்லாதவன் என்றும் பலவாறுகப் பிரித்து விட்டோம். பிரிந்தவர்களைச் சேர்த்து, காலத்தின் போக்கை ஒட்டி நிலச் சீர்திருத்தங்களைக் கைப்பற்றினல் கிராம வாழ்வில் அமைதி ஏற்படும். உணவு உற்பத்தியும் பெருகும். இல்லையேல், முன்னேற்றப் படகானது சச்சரவு என்னும் பாறையில் மோதிச் சிதறிப்போய்விடும்!

சிறுகதைப் போட்டியை நிறுத்துகிறேம்!

சிறுகதை எழுதும் துறையில் இளம் எழுத்தாளர்கள் பலர் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகிறார்கள். அற்புதமான சிறுகதைகள் எழுதும் புதிய எழுத்தாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

சிறுகதை எழுதும் துறையில் புதிதாக ஈடுபடும் ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதில் நம் 'கல்கி'ப் பத்திரிகை எப்போதும் ஆர்வம் காட்டி வந்திருக்கிறது. இந்த ஆர்வம் காரணமாகத்தான் சென்ற 25 மாதங்களாக மாதச் சிறுகதைப் போட்டியை நடத்தி வந்தோம். பெரும்பாலும் ஆரம்ப எழுத்தாளர்களே இதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்கள். இந்தப் போட்டியின் மூலம் எழுத்துலகில் பிரவேசித்த பலர் இன்று நல்ல புகழுடன் விளங்கி வருகின்றனர்.

இனிமேல் மாதச் சிறுகதைப் போட்டி என்று இல்லாமல் நமக்கு வரும் எல்லாச் சிறுகதைகளையும் போட்டிக் கதைகளைப் போலவே பரிசிலனை செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளுக்குத் தகுந்த சன்மானம் அளிக்க முடிவு செய்திருக்கிறேம். ஆகையால் இந்த ஜூலை மாதத்துடன் மாதச் சிறுகதைப் போட்டி முடிவடைகிறது.

இதுவரையில் மாதச் சிறுகதைப் போட்டி என்ற தலைப்பில் கதைகள் எழுதி அனுப்பி வந்த எழுத்தாளர்கள் இனிமேல் அந்தத் தலைப்பு இல்லாமலேயே சிறுகதைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேம்.

சர்க்காருக்கு நன்றி!



மாதிரிக்கு ஒரு அட்டூழியம்!

இலங்கையிலிருந்து பல கடிதங்கள் வந்திருக்கின்றன. எல்லாமே பரிதவிக்க வேண்டிய செய்திகள். கீழே ஒரு கடிதத்தைத் தருகிறோம்.

நான் ஒரு இந்தியப் பிரஜை. ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த கூத்தாஞூர்வாசி. தாற்காலிகமாக இலங்கையில் தங்கியிருக்கிறேன். இந்திய அனுமதிச் சீட்டு எண் A. 140066 வைத்திருக்கிறேன். காவஞ்சென்ற பீ.ஆர். எஸ்டி. சிதம்பரம் செட்டியாரின் மனைவியார் பீ.ஆர். எஸ்டி. சிகப்பி ஆச்சியின் ஏஜண்டாக அன்னாருடைய வியாபாரத்தைக் கவனித்து வருகிறேன்.

இலங்கையில் சென்ற மே மாதத்தில் வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்தன. மே மாதம் 26-ம் தேதி யன்று மட்டாராவில் மெயின் தெரு, 149 எண் வீட்டிலுள்ள என்னுடைய எஜமானி அம்மாளின் வட்டிக் கடை தாக்கப்பட்டது. கலகக்காரர்களின் கூட்டம் கடையைச் சூறையாடித் தீர்த்தது.

ரொக்கப் பணமும், அடகு வைக்கப்பட்ட நகைகளும், தஸ்தாவேஜுகளும் இதர சாமான்களும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ளவை பறி போயின. கலகங்களின் விளைவாக ஏற்பட்ட நஷ்டம் இது.

கொள்ளை நடந்த அன்றிரவு என்னைக் காப்பாற்றிக் கொள்ள மட்டாரா போலீஸ் ஸ்டேஷனுக்குத் தப்பிச் சென்றேன். அங்கிருந்து கொழும்பிலுள்ள அடைக்கல முகாமுக்கு நான் அனுப்பப்பட்டேன்.

113, வீஸ்ட்ரீட் இங்ஙனம்,
கொழும்பு, சிலோன் [அ. சந்தனம் பிள்ளை

இம்மாதிரி நூற்றுக்கணக்கான அட்டூழியங்களை விசாரணை செய்து இந்தியப் பிரஜைகளுக்கு நஷ்ட ஈடு வாங்கித் தர இந்திய சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது நம்மவர்கள் நிராசையுடன் இருக்க வேண்டியதுதானா? —ஆசிரியர்

விவசாயக் குடும்பம்

இதோ இவ்வார அட்டையில் நிலத்தில் பாடுபட்டு வேலை செய்யும் ஒரு விவசாயக் குடும்பத்தைக் காண்கிறோம். அவர்கள் முகத்தில்தான் எவ்வளவு மகிழ்ச்சி.

வயல் வரப்பிலே, வானமே கூரையாகவும் கையே தட்டாகவும் கொண்டு அவன் தனது மத்தியான உணவை உண்கிறான். தனது இல்லாள் கன்னலன்ன இன் சொற்களுடன் அள்ளியிடும் அன்னம் அவனுக்கு அமுதமாக இருக்கிறது! இவ்வளவு எளிய வாழ்வு வாழும் கோடானு கோடி மக்கள் கொண்ட நாடே உண்மை பாரத நாடு!

இவர்கள் வாழ்வு எளிய வாழ்வு ஆயினும் அவர்கள் வாழ்விலுள்ள இன்பம் இவ்வளவு அவ்வளவல்ல. கோடி ரூபாய் வருமான முள்ளவனும் பெறக்கூடியதல்ல!

இதற்குச் சான்று நம் நாட்டுப்புறங்களில் வழங்கும் நாடோடிப் பாடல்களே.

எத்தனை விதச் சந்தங்களில் எத்தனை வகைப் பாடல்கள். ஹாஸ்யம், கோபம், ஆனந்தம், காதல் ஆகிய எல்லா ரஸங்களும் பரிமளிக்கும் எளிய பாடல்களைப் பார்க்கிறோம்.

எளிமையில் இன்பங்காணும் இவர்கள் வாழ்வு, சிறிது நாட்களாக அரசியல் கட்சிகளின் காரணமாகச் சின்னாபின்னப்பட்டு வருகிறது! இது நிற்க வேண்டும். இவர்கள் வாழ்வு சிறக்க வேண்டும். இவர்கள் வாழ்வு சிறந்தால்தான் பாரதமே சிறக்கும்!

பாரத நாட்டின் இன்றையப் பொருள் நிலையும்

அதன் முக்கிய அம்சமாகிய

அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவும்

என்ற விஷயம் பற்றிய இந்த ஆராய்ச்சி அரங்கத்தில்

அடுத்த வாரம்

டாக்டர் சிந்தாமணி டி. தேஷ்முக். (பாரதத்தின் முன்னாள் நிதிமந்திரி, பல்கலைக்கழக மான்யக் கமிஷன் தலைவர்)

திரு எஸ். என். ஹாஜி, திரு ஆர். வி. மூர்த்தி

ஆகிய மூன்று அறிஞர்களும் கலந்து கொள்கிறார்கள்

அருள் வாக்கு

திருஷ்டா என்றும் திருச்யம் என்றும் இரண்டு உண்டு. திருஷ்டா என்றால் பார்ப்பவன் என்று பொருள். திருச்யம் என்றால் பார்க்கப்படுபவை. பரமாத்மா பரம திருஷ்டா; மற்றவை யெல்லாம் பார்க்கப்படுபவை. இதேமாதிரி ஒவ்வொரு மனிதனிலும் 'த்ருஷ்டா' பார்ப்பவன் இருக்கிறான். அவனைத் தவிர்த்து மற்றவை அவனுக்கு திருச்யம். அதாவது அவனால் பார்க்கப்படுபவை. 'த்ருக்' என்பது ஞானம். அந்த ஞானம் பரமாத்மா. அவனைத் தவிர பார்ப்பவர் யாரும் இல்லை.

இந்த த்ருஷ்டா எனப்படும் ஆத்மா தேகத்தோடு சேர்ந்த இந்திரியங்களாகிற உபாதிகளுடன் சம்பந்தப்படுகிறது. இந்த இந்திரியங்கள் எல்லாவற்றையும் விலக்கிப் பார்த்தால், சுத்தஞான ஸ்வரூபம்தான் மிஞ்சுகிறது. ஒன்றைப் பார்க்கும்போது, உண்மையில் பார்ப்பது இந்திரியங்கள் அல்ல. பார்ப்பது 'த்ருஷ்டா' தான். வாணலி சுடுகிறது என்று சொன்னால் அதில் சம்பந்தப்பட்ட அக்னிதான் அதற்குக் காரணம். வாணலியே சூடு என்பது இல்லை. அதேமாதிரி 'த்ருஷ்டா' சேர்ந்தால்தான் இந்திரியங்களால் பார்க்க முடிகிறது.

த்ருஷ்டா ஞான ஸ்வரூபம். ஞானம் செய்கை ஆகாது. கை கால் போன்ற கரணங்கள்தான் க்ரியைக்குச் சாதனம். ஞான ஸ்வரூபமான த்ருஷ்டாவுக்கு, செயல்புரிவது, அனுபவிப்பதுஎன்ற தன்மைகிடையாது.

பரமாத்மா போல் ஜீவாத்மாவும் எதையும் செய்கிறதில்லை. எதனாலும் பாதிக்கப்படுவதுமில்லை. ஆத்மா செயல் புரிவதாகக் கூறுவதெல்லாம் வ்யாவஹாரிக தசையில்தான். சுத்த சித்தான ஆத்மா எப்போதும் செயல் புரிவதில்லை என்று கீதையில் நெடுகிலும் எடுத்துக் காட்டப்படுகிறது. ஆத்மா கர்த்தாவும் இல்லை. போக்தாவும் இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறப்படுவதிலிருந்து கீதையை 'அத்வைதா மிருதவர்ஷிணி' என்று வர்ணிக்கப்படுகிறது.

ஒரே பரமாத்மா ஒரே சித்து பலவேறு ஜீவன்களாகப் பலவேறு தேகங்களிலும் காணப்படுகிறது, ஒரே மின்சார விசை பல்வேறு பல்புகளிலும் காணப்படுவது போல். இந்த சித்து அகண்டமானது; அனந்தமானது. பூரணமாக இருப்பது. எங்கும் நிறைந்துள்ள இந்த ஒரே பூரணமான வஸ்து இந்திரியங்களோடு சம்பந்தப்படும் போது இரண்டாகத் (த்வைதமாகத்) தோற்றுகிறது. உபாதி இல்லா விட்டால் அத்வைதம். உபாதிக்குள்ளான சித்தும் அகண்டமான சித்தைப்போல் த்ருஷ்டா. ஆகாயத்தில் இருக்கும் சந்திரனும் ஒரு பாத்திர ஜலத்தில் பிரதிபலிக்கும் சந்திரனும் போல.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

★★★ நடிகக் கலை பெருங்கலை. போற்றிப் பேண வேண்டிய கலை. மக்களின் பாராட்டைப் பெற்ற நடிகர்களும் திறமை வாய்ந்த பிறவிக் கலைஞர்களே. நாடகங்களையும் படங்களையும் பார்த்துப் பார்த்து, காவியங்களைப் படிக்கும் பழக்கத்தையும் ருசியையும் இழந்து விடலாகாது.

நடிகக் கலை

ராஜாஜி

"நல்ல படம். நீங்கள் வெறுக்கும் கள்ளக் காதலுமில்லை, கொலையும் திருட்டும் இல்லை, பிரகலாதன் கதை, ராமாயணக் கதை, வந்து பார்க்கலாமே!" இவ்வாறு சிலர் வற்புறுத்தி அழைத்தபோதிலும் எனக்குப் படங்களும் நாடகங்களும் பார்க்கப் பிடிக்கவில்லை. ஏன் என்பதைச் சொல்ல இது எழுதுகிறேன்.

மகா காவியங்களிலுள்ள பாத்திரங்கள் திவ்விய சிருஷ்டிகள். நூலைப் படித்து, பாத்திரங்களின் உள்ளங்கள் கொதித்தும் துள்ளித் துடித்தும் எப்படிப் பரிமளிக்கின்றன வென்பதை அனுபவித்து உயர்தரமான மகிழ்ச்சியை அடைகிறோம். கவிஞர்கள் அவர்களுடைய மானஸக்கோயில்களை நமக்குத் திறந்து காட்டுகிறார்கள். தெய்வீக சக்தியைக் கொண்டு மகா கவிகள் காவியங்களைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். அவற்றைப் படித்தும் பாடியும் செய்யும் போது அந்த மேதாவிகளின் உள்ளங்களோடு நாமும் கலந்து ஆனந்தம் அடைகிறோம்.

ஆனால் நாடக மேடையில் என்ன பார்க்க முடிகிறது? அழுவதும் சிரிப்பதும் கோபங்கொண்டு சீறுவதும் ஆகிய வெளிச் சின்னங்களை மட்டும்தான் நடிகன் காட்டமுடியும்; நாமும் பார்க்க முடியும். மிகச் சிறந்த நடிகனுக்கும் இதுதான் செய்ய முடியும்.

காவியத்தை இருந்து அமைதியுடன் படித்து உணர்வதையெல்லாம் மேடையில் பேசிக் காட்ட முடியாது. மகா கவிகள் சொற்களை வீணாக வளர்ப்பவர்களல்ல. அவர்கள் பொருட்செறிவுடன் எழுதியிருக்கிற நூல்களை இன்னும் சுருக்கித்தான் மேடையில் நடித்துக் காட்ட இயலும். அவ்வாறு நான்கு மணி நேரத்துக்குள் அடக்கி, சகுந்தலை நாடகத்தையும், ராமன் காட்டுக்கு அனுப்பப்படுவதும் பரதன் சென்று அவனைச் சந்திப்பதையும், கோவலன் கண்ணகியின் பெருங் காதையையும் காட்ட வேண்டியதாகிறது. இந்த நான்கு மணி வரம்புக்குள் மகாகவியின் அற்புதக் கருத்துக்கள் எவ்வாறு அடங்கும்? சீறுவதும் அழுவதும்தான் வேஷம் போட்டவர்கள் காட்டமுடியும். வெளித் தோற்றங்கள் மட்டும் காட்டுவது குழந்தைகளுக்குப் போதும்; ரசிகர்களுக்குப் போதாது.

யார் பேரிலும் நான் குற்றம் சொல்லவில்லை. நான் எடுத்துக் காட்ட முயல்வது நடிகக் கலையின் குறையேயொழிய நடிகர்களுடைய குறையல்ல.

திரைப் படக் கலை நடிகக் கலையைத் தொடர்ந்து செல்லுகிறது. நாடகமாவது கொஞ்சம் தாமதிக்கும். திரை வெகு வேகமாக ஓடவேண்டும். படத்தில் சம்பாஷணை என்பது இலேசாகத்தான் இருக்கும். நடிகர்கள் நாடக மேடையில் காட்டுவது குறைவென்றால் படத்தில் அதைவிடக் குறைவு. கோசலையின் உள்ளமும், லக்ஷ்மணன் உள்ளமும், ராமன் உள்ளமும், பரதன் உள்ளமும், ஏன் அம்மை கைகேயியின் மனமாற்றமும், மந்தரையின் தாஸ பக்தியுமே வெறும் அழுவதும் சீறுவதும் சிரிப்பதும் மட்டுமல்ல.

நூலாசிரியர்கள் சிருஷ்டித்திருக்கும் தெய்வீகப் பொருட்செல்வங்களை நாடக மேடையிலும் படத்திலும் அடக்க முடியாது. அதை எதிர்பார்க்கவும் கூடாது.


ஆயினும் யுகம் மாறிவிட்டது. சிறுவர் சிறுமிகள் திரைப்பட வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறார்கள். மகா காவியங்களின் பாத்திரங்களை மறந்துவிட்டு அந்தப் பாத்திரங்களாக மேடையிலும் படத்திலும் நடிக்கும் சாமர்த்திய "நக்ஷத்திரங்களை" அந்தப் பாத்திரங்களாகவே பாவித்துவிடத் தோன்றும். உதாரணம் நம் டி. கே. ஷண்முகத்தையும் சுந்தராம்பாளையும் அவ்வையேஎன்றும், கண்ணாம்பாளே கண்ணகி என்றும் சிவாஜி கணேசனே பரதன் என்றும் எண்ணி எண்ணி, பரதனையும் அவ்வையையும் கண்ணகியையும் மறந்து விடலாகாது. நாடகங்களையும் படங்களையும் பார்த்துப் பார்த்து, காவியங்களைப் படிக்கும் பழக்கத்தையும் ருசியையும் இழந்து விடலாகாது.

நடிகக் கலை பெருங்கலை. போற்றிப் பேணவேண்டிய கலை. மக்களின் பாராட்டைப் பெற்ற நடிகர்களும் திறமை வாய்ந்த பிறவிக் கலைஞர்களே. ஆனால் படிப்பதை விட்டு விடலாகாது.


TRAVEL AGENCY
VISIT AGRA
SCISSORS
அவருடைய சிகரெட்
சிஸர்ஸ்
Issued by The Imperial Tobacco Company of India Limited



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



KE
MOTORS upto 200 H. P.
KIRLOSKAR ELECTRIC CO. LTD.
BANGALORE-2.
KE
Sole Agents
PARRY & CO. LIMITED
MADRAS, BOMBAY,
CALCUTTA, NEW DELHI.

இக்கட்டுரையை எழுதிய டாக்டர் பிரபுல்லசந்திர ரகுநாத் ஷெனாய் பொருளாதாரத்தில் முன்னணியில் நிற்கும் அறிஞர்களுள் ஒருவர். இலங்கை சர்வகலாசாலையிலும், அகமதாபாத எல். டி. ஆர்ட்ஸ் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர். 'ரிஸர்வ் பாங்கி'யில் கிராமப் பொருளாதாரப் பகுதிக்குத் தலைவராகவும், திட்டக் கமிஷனின் பொருளாதாரக் குழுவின் அங்கத்தினராகவும், சென்னை சர்வகலாசாலைக்கு 'ஆர். வில்லியம் மேயர்' சொற்பொழிவாளராகவும் முன்னாட்களில் சேவை செய்துள்ளார். பல நூல்களை இயற்றியுள்ளார். நாணயம், செலாவணி, பாங்குகள், வியாபார மந்தம், முன்னேற்றத் திட்டங்கள் முதலிய பகுதிகளில் சிறப்பாக ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். தற்போது அகமதாபாதிலுள்ள குஜராத் சர்வகலாசாலையில் சமூக இயல் பிரிவின் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். இந்தியச் செலாவணி நெருக்கடி அவரது தீவிர ஆராய்ச்சி விஷயங்களில் ஒன்று. இந்தப் பிரச்னையை ஒரு புதுக் கோணத்திலிருந்து ஆராய்கிறார்.

—ஆசிரியர்

அன்னியச் செலாவணி நெருக்கடியும் அயல் நாட்டு உதவியும்

டாக்டர் பி. ஆர் ஷெனாய்

நமது நாட்டுப் பொருளாதாரம் இப்போது ஒரு நெருக்கடியான கட்டத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடி பல கோணங்களைக் கொண்டது. பண வீக்கத்தினால் ஏற்பட்ட விலை உயர்வு ஒன்று. இது 1955-ம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்தது. உணவுப் பண்டங்களின் பற்றாக்குறை மற்றொன்று. அடிக்கடி கூடிக் குறையும் உணவுப் பொருள் விலைகளின் மூலம் இந்தப் பற்றாக்குறை புலனாகின்றது. இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றி வைக்கப் போதிய உள்நாட்டு மூலதனம் இல்லாமை மற்றும் ஒன்று. அன்னியச் செலாவணியிலும் பற்று ஏற்பட்டு நமது கையிருப்பு நிதி குறைந்து வருவது நான்காவது. இது இரண்டாவது திட்டகாலத் துவக்கத்திலேயே 1956-ம் ஆண்டு ஏப்ரலிலிருந்தே ஏற்பட்டது.

இந்த நெருக்கடி நாமே உண்டாக்கிக் கொண்டது. சமீப காலத்தில் நாம் அனுசரித்த கொள்கைகளின் விளைவால்தான் இது நேர்ந்தது.

பொருளாதார நிலை விரிவடைந்து வருவதால் இந்த நெருக்கடி எதிர்பார்க்கக் கூடியதே என்று அரசாங்கம் இதற்கு விளக்கம் தருகிறது. இது முற்றிலும் தவறு. நாட்டுப்பொருளாதாரம் விரிவு அடைந்தால் இம்மாதிரி அபாயகரமான நெருக்கடி ஏற்படவேண்டும் என்று எவ்வித நியதியுமில்லை. தொழில் அபிவிருத்தி விரிவடைந்த மற்ற நாடுகளின் அனுபவமும் அப்படித்தான் இருக்கிறது. நமது நாட்டின் உதாரணத்தையே எடுத்துக் கொள்ளலாமே. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் நமது தேசிய வருமானம் வருஷத்துக்கு 3·5 சத விகிதத்தில் உயர்ந்து கொண்டு சென்றது. மற்ற ஜனநாயக நாடுகளின் முன்னேற்றத்துடன் ஒப்பிட்டால் இந்த உயர்வு விகிதம் மிகவும் அதிகமானதுதான். அந்தக் காலத்தில் நாம் இப்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் எதையும் அனுபவிக்கும்படி நேரவில்லை. இதற்குக் காரணம் நாம் இந்த ஐந்தாண்டில் முதலீடு செய்த 3100 கோடி ரூபாய்க்கு ஈடாக வெளிநாட்டுக் கடன் உதவியும் உள்நாட்டுச் சேமிப்பும் கிடைத்தன. இவ்வகையில் மொத்தத் தொகை ரூபாய் 3150 கோடி ஈடு செய்யப்பட்டது.

ஆனால் இரண்டாவது திட்டம் மிதமிஞ்சிய நாணயப் பெருக்கை ஆதாரமாகக் கொண்டிருந்ததால், இவ்வித நெருக்கடிகள் தோன்றின. இது நமது பொருளாதாரம் விரிவடைந்ததால் அல்ல. பணவீக்கத்தின் உதவியைக்கொண்டு பொருளாதார விஸ்தரிப்பை உண்டாக்கிவிடலாம் என்ற அசட்டுத்தனமான முயற்சிகளினால் நேர்ந்த விளைவு. இதுதான் நமது இன்னல்களுக்குக் காரணம்.



டாக்டர் பி. ஆர். ஷெனாய்

'நமது இன்னல்கள் தீர்ந்து கொண்டு வருகின்றன. நமது நிலையில் சுமுகமான திருப்பம் கண்டு விட்டது' என்று சொல்லுகிறார்கள். 1957-58ஆம் ஆண்டில் நாணய அதிகரிப்பு விகிதத்தில் சிறிது தயக்கம் ஏற்பட்டதையும், 1957

ஆகஸ்டிலிருந்து விலைவாசிகள் ஏற்றத்தில் மந்தம் காணப்பட்டதையும் கொண்டு இவ்விதம் அபிப்பிராயப்படுகிறார்கள். விலைகள் மறுபடியும் சமீபகாலத்தில் உயர ஆரம்பித்து விட்டன. பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி நாம் வெகுவாகப் பேசிக் கொண்டாலும் பட்ஜெட் மூலம் ஏற்படும் பணப் பெருக்கு அதிகரித்துக் கொண்டுதான் போகிறது. 1956-57-ம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் பற்றுக்குறை மொத்தம் ரூ. 186 கோடி. 1957-58-ம் ஆண்டில் இது ரூ. 380 கோடிக்கு அதிகரித்தது. 1958-59-ம் ஆண்டாகிய நடப்பு வருஷத்தில் இதன் தொகை ரூ. 199 கோடியாக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இந்த வருஷத்துப் பற்றுக்குறையும் 1957-58-ம் ஆண்டு விகிதத்திலேயே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஏனெனில் நாணயப் பெருக்க மில்லாமல் எதிர்பார்க்கக் கூடிய மூலதனம் (அன்னிய உதவி உள்பட) பட்ஜெட்டில் அதிகமாகவே மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. பண சப்ளையிலும் விலைவாசியிலும் இடைக்காலத்தில் காணப்பட்ட மந்தம், அரசாங்கத்தின் ரிஸர்வ் பாங்கி இரண்டு வருஷங்களாக அனுஷ்டித்த கண்டிப்பான நடவடிக்கைகளால் உண்டானது. பட்ஜெட் மூலம் மார்க்கட்டுக்கு அதிகமாக வழங்கப்பட்ட நாணயம் ரிஸர்வ் பாங்கிக்குத் திருப்பப்பட்டது. அங்கே நாணயக் காப்பு நிதித் தொகையில் இவை அனைத்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டு, அயல் நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட செலாவணிப் பற்றுக்குறையை நிவர்த்திக்க உபயோகப்படுத்தப்பட்டது.

இந்த நிலைமை நீடித்துக்கொண்டே போக முடியாது. நாணயக் காப்பு நிதியிலிருந்து பணத்தை உறிஞ்சும் இந்த 'பம்பு' நீண்ட காலம் வேலை செய்யாது. ஏனெனில் இந்தப் பம்பை இயக்கும் சக்திக்கு வேண்டிய மின்சார சப்ளை குறைந்து கொண்டே வருகிறது. நமது நாணயக் காப்பு நிதியைத்தான் இதற்கு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டது. அதிலிருக்கும் கையிருப்புத்தான் மின்சார வேகம். இந்தக் கையிருப்பு சட்டப்படி இருக்க வேண்டிய வெளிநாட்டுச் செலாவணி அளவுக்கு மேல் 180 கோடி ரூபாய்தான் இப்போது இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வாரத்துக்கு 5·4 கோடி ரூபாய் வீதம் இந்த நிதியை நாம் கரைத்துக்கொண்டு வருகிறோம். இதே விகிதத்தில் இதை மேலும் கரைத்துக் கொண்டே போனால் இன்னும் சுமார் எட்டு மாத காலத்தில் சட்டப்படி இருக்க வேண்டிய மட்டத்துக்கு இது வந்துவிடும். இந்த வருஷம் முதல் இரண்டரை மாத காலத்தில் இந்த நிதியிலிருந்து வாரத்துக்கு 1·4 கோடி ரூபாயாகத்தான் கரைந்தது. இதைச் சிலர் எடுத்துக் காட்டி நமது அன்னியச் செலாவணி நெருக்கடி இப்போது முன்னிருந்ததைப்போல் கவலை தரும்படியாக இல்லை என்று கருதலாம். ஆனால் இந்தக் குறைவுக்குக் காரணம் சாதாரணமாக ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டாவது ஆறு மாத காலத்தில் (அதாவது செப்டம்பர் — மார்ச்சு) நமது ஏற்றுமதிகள் அதிகமாகவே இருக்கும் என்பதே. ஏற்றுமதிக்கு வசதியான காலம் என்று இந்த ஆறு மாத காலத்தைச் சொல்லலாம். எனவே, மாமூலாகவே நாம் அன்னியச் செலாவணி கொடுக்க வேண்டியது இந்த மாதங்களில் குறைந்திருக்கும். சென்ற மார்ச் மாத மத்தியிலிருந்து இந்த வாராந்திரப் பட்டுவாடா சராசரி ரூ. 6·1 கோடியாக ஏறி விட்டதிலிருந்து இந்த உண்மை விளங்கும். எனவே, நமது நாணயக் காப்பு நிதிக்கு எப்போதும் தொல்லைதான்.

பணவீக்கத்தின் காரணம்

இரண்டாவது உலக மகாயுத்தத்துக்கும் பிற்கால ஆண்டுகளில் பணப்பெருக்கம் காரணமாகச் சாதாரணமாகவே நமது அயல்நாட்டு வரவு செலவுக் கணக்கில் நிர்ப்பந்தம் இருந்து கொண்டே வந்திருக்கிறது. இந்தப் பண வீக்கத்துக்குக் காரணம் என்ன? முதலில் யுத்த காலத்தில் அடக்கி அமுக்கிக் கிடந்த தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் என்று மக்களிடையே எழுந்த வேகமே முக்கிய காரணம். கண்ட சாமான்களையும் மக்கள் வாங்கினர். புதுப்புது தொழில்களிலும் முதலீடு செய்தனர். பின்னால் கொரியா யுத்தம் காரணமாகப் பண வீக்கம் அதிகமாயிற்று. முதல் திட்டத்தில் முதல் நான்கு வருஷங்கள் வரையில் இதன் வேகம் குறைந்திருந்தது. அன்னிய நாட்டு வர்த்தக வரவு செலவுக் கணக்கில் நமக்கு அதிகமாகத் துண்டு விழவுமில்லை. ஆனால் 1955-56-ம் ஆண்டில் பண வீக்கம் மறுபடியும் தலை தூக்கியது. முன்னர் நமது செலாவணி சாதாரணமாக இருந்த நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறி இறுதியாக 1956-57ல் செலாவணி செலுத்த வேண்டியதில் நெருக்கடியே உண்டாகி விட்டது.

நமது அயல் நாட்டுச் செலாவணி நெருக்கடியின் தன்மையை நன்கு உணர வேண்டுமானால் பின்வரும் விஷயங்களைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் :-

1. ரூபாயின் ஸ்திரமான நாணய மாற்று விகிதம் ;
2. இறக்குமதி, அன்னியச் செலாவணி விநியோகம் இவற்றின் மீதுள்ள கட்டுப்பாடு ;
3. பணப் பெருக்கத்தின் வேகம் ;
4. இவற்றால் நமது உற்பத்தியிலும் வெளி நாட்டு வியாபாரத்திலும் ஏற்பட்ட மாறுபாடுகள்.

இவற்றைத் தனித்தனியாகக் கவனிப்போம். ரூபாயின் மாற்று விகிதம் ஸ்திரமாக இருந்தால் பணப்பெருக்கத்தின் விளைவாக உற்பத்திச் செலவுகளும் விலைகளும் உயர்ந்து உள்நாட்டு வியாபாரம் லாபகரமாகவும் ஏற்றுமதி வர்த்தகம் லாபமில்லாமலும் ஆகிவிட்டன. அதே போல் நடைமுறை உபயோகத்துக்கும் முதலீட்டுக்கும் பல்வேறு சாமான்களில் உள்நாட்டுத் தேவைகள் அதிகரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகக் கூடிய பொருட்களின் அளவும் குறைந்தது.

1937-ஆம் ஆண்டில் மக்களிடையே வழங்கிய நோட்டுச் செலாவணி 307 கோடி ரூபாயாக இருந்தது. 1956-57 ஆண்டில் இது

2300 கோடியாகப் பெருகி விட்டது. இதிலிருந்து பணப் பெருக்கு எவ்வளவு அதிகமாகி விட்டது என்பது தெரிகிறது. இதன் விளைவாக, நமது தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் 85 சதவிகிதமும் விவசாயப் பொருள்கள் 30 சதவிகிதமும் அதிகரித்த போதிலும் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்து விட்டது. 1952-53ஆம் ஆண்டின் ஏற்றுமதி குறியீட்டு எண் 100 என்று ஆதாரமாக வைத்துக் கொண்டு கவனித்தால் 1937-38 ஆம் ஆண்டின் ஏற்றுமதி 161 என்று இருந்தது. ஆனால் 1956-ஆம் ஆண்டில் இது 110க்குக் குறைந்து விட்டது. அதாவது இந்திய ஏற்றுமதி வர்த்தகம் அளவில் 51 சதம் குறைந்து போயிற்று. இதே காலத்தில் உலகத்தின் ஏற்றுமதி வர்த்தகம் அளவில் 71 சதவிகிதம் அதிகரித்திருந்தது. இம்மாதிரி ஏற்றுமதிக் குறைவு ஏற்பட்டது உலகத்திலேயே இந்தியா ஒரு நாட்டுக்குத்தான்.

கள்ளமார்க்கெட் தங்கம்

இரண்டாவதாக, தங்கத்தின் உள்நாட்டு வெளி நாட்டு விலைகளிலும், இறக்குமதிப் பொருள்களின் உள்நாட்டு இறக்குமதி விலைகளிலும், தாரதம்மியங்கள் காணப்பட்டன. இந்தத் தாரதம்மியங்கள் பணப் பெருக்கத்துடன் அதிகரித்துக் கொண்டே வந்தன. இந்தத் தாரதம்மியத்துக்கு இறக்குமதி லைசென்ஸுகளுக்குக் கள்ள மார்க்கெட்டில் இருந்த கிராக்கியும், அதற்குக் கொடுக்கப்பட்ட அதிக விலையும் ஒரு அறிகுறி. அதே போல் தங்கத்தின் உள்நாட்டு விலை தோலா ரூ 111 ஆக இருக்க, அதன் வெளிநாட்டு விலை தோலாவுக்கு ரூ 68.50 ஆக இருந்தது. இதனால் கள்ள மார்க்கெட்டில் தங்கம் இறக்குமதி செய்வது லாபகரமாக ஆகிவிட்டது. இறக்குமதியை அதிகரிக்கவும் அவைகளுக்கு அன்னியச் செலாவணி வழங்கவும் சாத்தியமில்லாமல் தடுத்தது இந்த இரு இனங்களில் காணப்பட்ட விலை வித்தியாசங்களே.

மூன்றாவதாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இறக்குமதி அதிகரிக்க வகையின்றிச் செய்து விட்டன. 1937—38ம் ஆண்டில் இருந்த இறக்குமதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1955—56ம் ஆண்டுடன் முடிவுற்ற ஐந்தாண்டுகளில் இறக்குமதி 85 சத விகிதத்துக்கு இறங்கி விட்டது. உலக இறக்குமதிப் போக்கு 1956—ஆம் ஆண்டில் 1937லிருந்ததைக் காட்டிலும் 76 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

இம்மாதிரி ஒழுங்கீனங்கள் எதனால் ஏற்பட்டன? இதற்கு ஒரு பதில்தான் சொல்ல வேண்டும். நமது ரூபாயின் நாணயமாற்று விகிதம் ஸ்திரமாக வைக்கப்பட்டிருப்பது தான் காரணம். இதைப் பொருளாதார நியதிகளின்படி மாற விட்டிருந்தால், பண வீக்கம் வெளிநாட்டு ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்வதைக் காட்டிலும் உள்நாட்டுத் தேவைக்காக உற்பத்தி செய்வதை லாபகரமாக ஆக்கி இருக்காது. மேலே குறிப்பிட்ட விலைவாசி வித்தியாசங்களும் ஏற்பட்டிருக்காது. இந்த உண்மை பிரஞ்சு நாட்டின் அனுபவத்தில் நன்றாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பணப்புழக்கம் முப்பத்தைந்து மடங்கு அதிகரித்த போதிலும் பிரஞ்சு தேசத்தின் ஏற்றுமதிச் சாமான்கள் 1937-ம் வருஷத்திலிருந்ததை விட 1956-ல் 207 சதவிகிதம் அதிகரித்திருந்தன. இதே காலத்தில் தொழில் உற்பத்தி 85 சத விகிதம்தான் உயர்ந்திருந்தது. அதாவது, உற்பத்தி அதிகரிக்கவில்லை என்றாலும், பணவீக்கம் மிகுதியாக இருப்பினும், ஏற்றுமதி அதிகரிக்கவே செய்தது. ஏனெனில் பிரான்ஸின் பண வீக்கத்தின் பாதகங்களை ப்ராங்க் நாணயத்தின் மாற்றுச் செலாவணி விகிதம் ஏற்றுக் கொண்டு விட்டது. ப்ராங்கின் தற்போதைய டாலர் செலாவணி மதிப்பு 1937-ல் இருந்ததைவிட 17-ல் ஒரு பாகமே. இந்தியாவிலோ ரூபாயின் மாற்றுச் செலாவணி விகிதம் ஸ்திரமாக இருப்பதால் பண வீக்கத்தின் பலாபலன்களை ஏற்றுமதி வர்த்தகம் தாங்க நேர்ந்தது.

அன்னிய உதவி ஆற்றில் போகிறது

இந்த நிலைமையை அன்னியக் கடன் கொண்டு சமாளித்துவிட முடியாது. நமது பொருளாதார முன்னேற்றத்துக்கும் வேகமான அபிவிருத்திக்கும் கடன்கள் அவசியந்தான். ஆனால் ஏற்றுமதியைப் பெருக்க அவை பயன்படா. முதல் திட்ட காலத்தில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைச் சேர்த்துப் பார்த்தால், அன்னிய உதவியாகக் கிடைத்த ரூபாய் 204 கோடியும், அயல் நாட்டினர் இந்தியாவில் முதலீடு செய்திருந்த மூலதனத்தில் ரூபாய் 37 கோடியைத் திருப்பி அனுப்புவதிலும், சட்ட விரோதமாக நாட்டில் வந்து குவிந்த சுமார் ரூபாய் 160 கோடி கள்ளத் தங்கத்துக்காகவும்தான் செலவழிக்கப்பட்டன. உள்நாட்டுச் சேமிப்பு மூலம் கிடைத்த 3100 கோடி ரூபாய்தான் திட்ட முன்னேற்ற அம்சங்களில் முதலீடு செய்யப்பட்டன. இதையே வேறுவிதமாகச் சொன்னால், அன்னிய உதவி முழுவதும் லாபகரமாக உபயோகப்படுத்த முடியாத தங்கக் கட்டிகளாகவும் அன்னிய முதலாளிகளின் முதலீடுகளை உள்நாட்டு முதலாளிகளுக்கு மாற்றவும் பயன்பட்டன. தேசிய உற்பத்தியைப் பெருக்கப் பயன்படவில்லை. ஆனால் இக் கடன்களுக்கு வட்டியும் தவணைகளும் நமது தேசிய வருமானத்திலிருந்துதான் செலுத்தப்படுகின்றன.

இதேமாதிரி இரண்டாவது திட்டத்திலும் அன்னிய உதவியால் அபிவிருத்தி அம்சங்களுக்குப் பயன்படாத செலவினங்கள் அதிகரித்திருக்கின்றன. மேலே சொன்ன கள்ளத் தங்கமும், அயல் நாட்டினரின் முதலீடு மாற்றமும் இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றுக்கு அடிப்படையாக, பண வீக்கத்தின் சுமையும் இப்போது சேர்ந்திருக்கிறது. லாபகரமான முதலீடு செய்யப்படாததால் ஏற்பட்ட விளைவுகள் இவை. குறுகிய காலத்தில்கூட, பணவீக்கத்தின் மூலம் நூற்றுக்கு நூறு விகிதம் மூலதனத்தை உற்பத்தி செய்யவோ அபிவிருத்திகளை உண்டாக்கவோ முடியாது. பணவீக்கம் மக்களைச் செலவு செய்யத் தூண்டுமே தவிர சேமித்து வைக்கத் தூண்டாது. நமது நாட்டு உற்பத்தி முறைகூட உள் நாட்டுத் தேவைப்

பொருள்களை உற்பத்தி செய்வதிலேயே கவனம் செலுத்துவதிலிருந்து இது தெரிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி 21 சத விகிதமும், வனஸ்பதி உற்பத்தி 16 சத விகிதமும், சோப் 12 சத விகிதமும், சிகரெட் 22 சத விகிதமும் அதிகரித்திருக்கின்றன. இவை அனைத்தும் நேரடி உபயோகப் பொருள்கள். ஆனால் இரும்பும் எஃகும் 1 சத வீதமும், இரும்புக் கனிப் பொருள் 0·7 சத வீதமும், நிலக்கரி 14 சத வீதமும்தான் அதிகரித்தன. மேலும் தேவைப் பொருள்களின் உற்பத்திப் பெருக்குக்காக இறக்குமதி செய்யப்பட்ட 103 கோடி ரூபாய் சாமான்களும் (இது 2.9 மடங்கு அதிகம்) இதே நிலைமையைத்தான் விளக்குகின்றன. எனவே, நாம் எல்லோரும் வீரர்கள் பேசும் பாஷையிலே பேசிக் கொண்டிருந்தாலும், புள்ளி விவரங்களைப் பார்த்தால் கஷ்டப்படாமல் ஊதாரித்தனமான சுக வாழ்க்கை நடத்துவதிலேதான் மனம் செல்லுகிறது என்பது விளங்கும். அன்னியக் கடன் உதவியும் நாட்டுச் சேமிப்பும் இரண்டுமே ஓரே ஓட்டைப் பாத்திரத்தில்தான் வைக்கப்படுகின்றன. அதனால் அன்னியக் கடன்களும், நாட்டுச் சேமிப்பும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நாட்டில் அதிகரித்துள்ள நமது தேவைகளைப் பூர்த்தி செய்யத்தான் பயனுகின்றன; உற்பத்தியைப் பெருக்க உபயோகப்படவில்லை;

பண வீக்கத்தைக் குறைக்கவும்

மேலே சொன்ன விளக்கத்திலிருந்து அன்னியக்கடன்கள் தங்கப்புதுக்களிலும், ஊதாரிச் செலவுகளிலும் போகாமல், முழுதும் லாபகரமான மூலதனமாகவே மாற்றப்பட வேண்டுமானால், நமது நாட்டுப் பொருளாதாரமும் நாணய மதிப்பும் சீரான வகையில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பது புரியும். இத்தச் சீரான நிலை ஏற்பட வேண்டுமானால் இரண்டு சீர்திருத்தங்கள் செய்யாமல் முடியாது. முதலாவது, பணப் புழக்கத்தை அதிகரிக்கும் நிதி நிர்வாகம் நீங்க வேண்டும். இதனால் முதல் திட்ட காலத்தில் ஏற்பட்டதைப் போல நமது நாணயநிதி கரைவதைத் தற்காலிகமாவது தடுக்கலாம். இரண்டாவதாக, நமது இறக்குமதி அளவுக்கு ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும். இதனுடன் சேர்ந்தது தங்கத்தின் உள் நாட்டுமதிப்புக்கும் வெளிநாட்டு மதிப்புக்குமுள்ள வித்தியாசத்தை அகற்ற வேண்டிய நடவடிக்கை. ஏற்றுமதிப் பொருள்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன; ஏற்றுமதி விஸ்தரிப்புக் கமிட்டி இதற்காகப் பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. எனினும் இவைமுற்றிலும்பயன் அளிக்காது. தங்கத்தின் விலை வித்தியாசத்தையும் இவை குறைக்காது;

'ரூபாய் மிதக்கட்டுமே!'

உள்நாட்டுப் பொருளாதார நிலைமையில் ஒரு நிரந்தரமான ஸ்திரத்தன்மை ஏற்பட வேண்டுமானால் பணவீக்கத்தை நிறுத்துவதுடன் ரூபாயின் மாற்றுச் செலாவணியின் விகிதத்தில் தேவையான மாறுதலும் செய்ய வேண்டும். ரூபாயை அதற்குள்ள செலாவணி மதிப்பைத் தானே அடைந்து கொள்ளட்டும் என்று 'மிதக்கும்படி' அதை விடவும் செய்யலாம். இதன் மூலம் இதுவரையில் பணவீக்கத்தினால்ரூபாய்க்கு ஏற்பட்ட அதிகப்படி மதிப்பைக் குறைக்கலாம். இதனால் உள்நாட்டில் தேவைப் பண்டங்களுக்கு ஏற்பட்ட கிராக்கி குறைந்து ஏற்றுமதிக்காக உற்பத்தி பெருக வகையுண்டு. இப்படியே சென்றால் காலப் போக்கில் வர்த்தகமும் விரிவடைந்து நமது அயல் நாட்டு வரவு செலவுக் கணக்கிலும் சகஜ நிலை ஏற்படும். இந்த ஸ்திரத்தன்மை ஏற்படுவதின் விளைவால் நமக்குக் கிடைக்கும் அன்னிய உதவியைப் பூரணமாக மூலதனத்தைப் பெருக்க உபயோகப்படுத்திக் கொள்ள முடிவதுடன், அன்னிய உதவி மேலும் மேலும் தானாகவே வந்து குவிய வகையும் ஏற்படும். நமது நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியடையும்.

தென்னிந்திய வர்த்தக சபையின் புதிய தலைவர்



தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் 41வது வருஷாந்திரக் கூட்டத்தில் ஸ்ரீ கே. வி. சீனிவாசன் சங்கத்தின் புது வருஷத் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்கிறோம். யூனியன் மோட்டார் கம்பெனியின் டைரக்டராகவும் ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனியின் டைரக்டராகவும் பணியாற்றி வருகிறார். ஸ்டாண்டர்ட் மோட்டார்த் தொழிற்சாலை, வேகமாக விரிவடைந்து வரும் சென்னை வட்டாரத்துக்கு ஒரு அணிகலன் என்பது யாவரும் அறிந்ததே. இத்தொழிற்சாலை மோட்டார் வண்டி பாகங்கள் ஏறக் குறைய 50 சதவீதம் உற்பத்தி செய்து, படிப்படியாக முழு மோட்டாரையே உள் நாட்டில் செய்யும்படியாக விரிவடைந்து வருகிறது. இத்தொழில் வளர்ச்சியில் ஸ்ரீ கே. வி. சீனிவாசனுக்கும் பங்கு உண்டு. அவரது தலைமையில் தென்னிந்திய வர்த்தகச் சங்கம் மேன்மேலும் புகழும் செல்வாக்கும் அடையுமென்று நம்புகிறோம்.



வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்..என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்கால
மின் புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.
Cashmere Bouquet
காஷ்மீர் பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்



கால்கேட் குளோரோபில் டூத் பவுடர்
வெளியிடுகிறது
வீரிய குளோரோபிலின
பூரண நன்மைகளை
COLGATE
CHLOROPHYLL
TOOTH POWDER
ஜயண்ட் சைஸ் லாபகரம்
வீரிய குளோரோபில்தான் உங்களுக்கு நன்மை தரவல்லது!
வாயில் தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது.
அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது!
வாய்க்குப் புதிய நறுமணத்தைத் தருகிறது!
பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தை யாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப் படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!
ஈறுகளை பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப் பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.
* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

நாகிக்கும் மலேட்டருக்கும் வணக்கம்

யார் குற்றவாளிகள்?

"ஹங்கேரியுடன் ஒற்றுமைக்காக" திருவப்பட்ட இந்தியக் குழு நாகி, பால்மலேட்டர் இன்னும் அவர்களுடைய இரு கூட்டாளிகளுக்கும் வணக்கம் செலுத்தி அவர்களைப் புகழ்கிறது. இவர்கள் கடந்த ஒன்றே முக்கால் வருடங்களாக அநேக சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் தாங்கள் செய்யாத குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள். இத் தீரமான செயலுக்காக அவர்களுக்கு மிகவும் கொடூரமான தண்டனை அளிக்கப்பட்டது. இவர்களுடைய கொலை ஒரு இரக்கமற்ற செய்கை. இச் செய்கையில் இவர்களுடைய பாதுகாப்புக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டது. இது மனித சமூகத்தின் மனச்சாட்சிக்குப் புறம்பான காரியம்.

இச் செய்கையினால் சர்வதேச பொது உடைமைக் கட்சி தன்னுடைய இயற்கையான ரூபத்தைக் காட்டி விட்டது. இச் செய்கையினால், விரிவான நோக்கு, சமாதான வழிகள் முதலியன அழிக்கப்பட்டு விட்டன. உலகத்தில் பல்வேறு கொள்கைகள் ஒத்து வாழலாம் என்ற நம்பிக்கையும் சிதைந்து விட்டது. சோவியத்து. பொது உடைமைக்காரர்கள் இவர்களுடைய உறுதி மொழிகள் நம்பத் தக்கவை அல்ல என்பதை இச் செய்கை நிரூபிக்கிறது. இவர்களை நம்புகிறவர்கள் மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்தவர்கள் ஆகிறார்கள்.

நாகியையும், பால்மலேட்டரையும் கொன்ற சதிகாரர்கள் யார்? இரண்டாவது ஸ்டாலினாக விளங்கும் குருசேவ்தான் முதல் குற்றவாளி. "மற்றும் நூறு பூக்கள் பூக்கட்டும்" என்று சமீபகாலத்தில் சொன்ன மாசேதுங் இரண்டாவது குற்றவாளி. இவர் தேசத்துப் பத்திரிகைகளும் ஹங்கேரியின் இச் செய்தியை சந்தோஷத்துடன் வரவேற்கின்றன.

இத்துடன் குற்றவாளிகளின் ஜாபிதா முடிந்து விட்டதா? இல்லை. பொது உடைம தத்துவத்தை எப்பொழுதும் புகழ்ந்து அதற்கு நம் மக்களிடையே மிகுந்த மரியாதையை உண்டாக்குபவர்களும் குற்றவாளிகள் இல்லையா? இந்த அநீதியை மூடி மெழுகி விட்டு, இன்னும் பல அக்கிரமங்களை ஊக்கப்படுத்திக் கொண்டே, குருசேவுடன் "உயர்ந்த ஸ்தான" சந்திப்பிற்குக் கூச்சலிடுபவர்களும் குற்றவாளிகள் இல்லையா? பொது உடைமை வாதிகளுடன் "சமாதானம்" "சிநேகம்" "கலாசாரம்" என்று சொல்லிக் கொண்டு உறவாடும் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் குற்றவாளிகள்தான். முடிவாக, பேசாமல் இருப்பதும் ஒரு குற்றமாகும். கொலையைப் பார்த்து விட்டு அதை வெறுக்காமல் பேசாமல் இருப்பவனும் குற்றவாளி ஆகிறான்.

சுதந்திரம் பிரிக்க முடியாதது. இந்தக் கதி நாகிக்கும் மலேட்டருக்கும் மாத்திரம் அல்ல. நம் நாட்டில் கம்யூனிஸம் பரவுவதை எதிர்க்காதவர் எவருக்கும் இந்தக் கதிதான்.

இந்தக் கட்டுரையை எழுதிய திரு எஸ். நாராயணஸ்வாமி சுமார் முப்பது ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரப் பிரச்னைகளை ஆராய்ந்து அனுபவப்பட்டவர். தொழில் முதலீடுகளிலும், நிதி திரட்டுவதிலும், தொழில் அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டவர். பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். இந்தியப் பங்கு மார்க்கெட்டில் ஆழ்ந்த அனுபவ ஞானமுள்ளவர். சென்னை ஒய். எம். ஐ. ஏ. ஸ்தாபனம், மயிலாப்பூர் ராணடே நூல் நிலையம் முதலிய சமூக நல ஸ்தாபனங்களில் முக்கிய அங்கம் வகித்துத் தொண்டாற்றிவருபவர். பிரசித்தி பெற்ற சித்ரா அண்டு கம்பெனியின் ஸ்தாபகர். இந்தப் பிரச்னையைக் கருத்துத் தெளிவுடனும் சிந்தனைச் செறிவுடனும் ஆராய்கிறார்.

—ஆசிரியர்

மேன் மேலும் உயரும் அன்னியக் கடன்கள்

எஸ். நாராயணஸ்வாமி

(சித்ரா அண்டு கம்பெனி, சென்னை)

ஆலைத் தொழில்கள் குறிப்பிட்ட ஒரு உச்ச நிலைக்கு உயரவேண்டும் என்ற நோக்கத்துடனே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்த லட்சியத்தை நிறைவேற்ற இரண்டு காரியங்களைச் செய்தாக வேண்டும். தொழில் அபிவிருத்தி அதிகமாக முன்னேறியுள்ள மேற்கு நாடுகளிலிருந்து ஆலை யந்திரங்களும் யந்திரச் சாதனங்களும் நாம் இறக்குமதி செய்தே ஆக வேண்டும். அவற்றின் விலையை அந்தந்த நாடுகளின் செலாவணியிலோ, அல்லது அவ்வாறு செய்ய முடியவில்லையானால், ஸ்டர்லிங் நாணயத்திலோ கொடுக்க வேண்டும். ஸ்டர்லிங் நாணயத்தில் நாம் செலுத்திவிட்டால் அந்தந்த நாடுகள் அதை அவரவர்கள் நாணயத்தில் மாற்றிக் கொள்ளுவார்கள்.

இவ் விரண்டு காரியங்களையும் நம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே இவ் வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. அதாவது ஒவ்வொரு அன்னிய நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் நம்முடைய சாதாரணத் தினசரி தேவைப் பொருள்களின் மதிப்பை விட, அதிகமான மதிப்புள்ள பண்டங்களை நாம் அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் உபரியாக அந்த நாட்டுச் செலாவணி நமக்குக் கையிருப்பு மிஞ்சும் என்றும், அந்த அளவுக்கு அந்த நாட்டிலிருந்து நமது திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தேவைப்பட்ட யந்திரங்களையும் யந்திர சாதனங்களையும் தருவித்துக் கொள்ள முடியும் என்றும் எதிர்பார்த்து வரம்புகள் நிச்சயிக்கப்பட்டன.

இங்கிலாந்து சம்பந்தப்பட்டவரையில், இரண்டாவது உலகயுத்த காலத்திலிருந்து நமக்குக்கடன் பட்டுள்ள நாடு என்ற நிலைமையிலே அதை நாம் வைத்திருந்தோம்.

யுத்த காலத்தில் அவர்களுடைய தேவைப் பொருள்களை அபரிமிதமாக அவர்களுக்கு அனுப்பி வைத்ததால் இந்த நிலைமை ஏற்பட்டது. நாம் இவ்வாறு ஏற்றுமதி செய்து அனுப்பிய பண்டங்கள் மிகவும் கணிசமாக இருந்ததால் அந் நாட்டின் உயர் அந்தஸ்துள்ள பாங்க் ஆப் இங்கிலாந்தில் நமது கணக்கில் ஏராளமாக ஸ்டர்லிங் தொகை மிச்சப்பட்டுத் தேங்கிக் கிடந்தது. பல வருஷங்களுக்கு இதைப்பற்றி நாம் மிகப் பெருமையுடன் பேசி வந்தோம். "நம்முடைய ஸ்டர்லிங் நிதி" "நம்முடைய ஸ்டர்லிங் நிதி" என்று ஒவ்வொரு இந்தியப் பிரஜையும் தன்னுடைய சொந்தக் கணக்கில் பாங்கியில் கையிருப்பு இருப்பது போலப் பேசிப் பூரித்துப் போனான். நமது திட்டக் கமிஷன் கூட இப்படிப் பெருமைப்பட்டு, நம்முடைய முதலீட்டு யந்திர சாதனங்களின் இறக்குமதிக்கு இந்த ஸ்டர்லிங் நிதியிலிருந்து ஓரளவுக்குப் பணம் கொடுத்து வகை செய்துவிடலாம் என எண்ணித் திட்டங்கள் போட்டது.



திரு எஸ். நாராயணஸ்வாமி

ஆனால் இந்தியாவில் ஏற்பட்ட பல சம்பவங்களால் இவ்வாறு எதிர்பார்த்தவை அனைத்தும் அப்படியே நடக்கவில்லை. முதலில் போட்ட மதிப்பீடுகள் எல்லாம் தலைகவிழ்ந்தன. தொடர்ந்தாற்போல் நம் நாட்டில் பருவ மழை பெய்யாததால், வருஷா வருஷம் 50 லட்சம் வீதத்தில் பெருகிக் கொண்டே போகும் ஜனத்தொகைக்குத் தேவையான உணவு உற்பத்தியில் பற்றுக்குறை ஏற்பட்டது. நமது உள்நாட்டு உற்பத்

இக் குறையைப் பூர்த்தி செய்துகொள்ள அயல் நாடுகளிலிருந்து உணவுப் பண்டங்களை வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதி கிழக்கு நாடுகளும் அதி மேற்கு நாடுகளும் தாராளமாக அரிசியையும் கோதுமையையும் கப்பல் கப்பலாக நமக்கு அனுப்பிக்கொண்டே இருந்தன. இப்படிக் கப்பல் கணக்கில் வந்து குவிந்த உணவுப் பண்டங்களுக்கு அந்தந்த நாட்டுச் செலாவணியில் தானே பணம் கொடுக்க வேண்டும்? இதனால் நமது அன்னியச் செலாவணி நிதியிலிருந்து எதிர்பாராத அளவு பெரிய தொகை இதற்கு வழங்க வேண்டி வந்தது.

மற்றொரு அம்சத்திலும் இது போல் எதிர்பாராதது நடந்தது. நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தருவிக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருந்த யந்திரங்களும், யந்திரச் சாதனங்களும் அந்த நாடுகளில் விலை உயர்ந்து விட்டன. முக்கியமாக, அமெரிக்காவிலிருந்தும் ஜெர்மன் நாட்டிலிருந்தும் வர வேண்டிய யந்திரச் சாமான்களின் விலைகள் முதலில் நாம் கணக்கிட்டதைவிட மிக மிக உயர்ந்து போயின. இதன் விளைவாகத் திட்டக் கமிஷன் முதலில் கணக்கெடுத்து உத்தேச மதிப்பீடு செய்ததைவிட அதிகமான அன்னியச் செலாவணி இதற்காகப் பங்கீடு செய்ய வேண்டியிருந்தது. செலவு அதிகரித்தது.

மேலும் ஒரு இனத்தில் இவ்வாறு நிகழ்ந்தது. நம்முடைய தினசரி உபயோகத்துக்குத் தேவையான இரும்புச் சாமான்களையும் மிகுதியான அளவுக்கு இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. நாட்டில் தற்போது உருக்குச் சாமான்கள் தயாரித்துவழங்கும் தொழிற்சாலைகள் இரண்டு. டாடா உருக்குச்சாலையும், இந்திய இரும்பு உருக்குத் தொழிற்சாலையும். இவை இரண்டிலுமாக உற்பத்தி செய்து அளிக்கப்படும் உருக்குச் சாமான்களைக் காட்டிலும் நமது திட்ட அம்சங்களின் கட்டடங்களுக்கும் ஆலை நிர்மாணங்களுக்கும் அபரிமிதமாக இரும்புச் சாமான்கள் தேவைப்பட்டன. இந்த அம்சத்தில் நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொன்றும் வருஷத்துக்கு 10 லக்ஷம் டன் உருக்குச் சாமான்களைத் தயாரிக்கும் மூன்று பெரிய தொழிற்சாலைகளை ரூர்கேலா, பிலாய், துர்காப்பூர் என்னுமிடங்களில் நிர்மாணம் செய்துத் துரிதமாக வேலை செய்துகொண்டு வருகிறோம். ஆனால் இந்த மூன்று புதுத் தொழிற்சாலைகளும் 1960-ம் ஆண்டிலிருந்துதான் உருக்குச் சாமான்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும். அதுவரையில் நமது இதர ஆலைத் தொழில்களின் வளர்ச்சி தடைப்படக் கூடாதல்லவா? ஆலைகளுக்குக் கட்டடங்கள் அமைத்தாக வேண்டும். யந்திரங்களையும் சாமான்களையும் திறந்த வெளியில் போட்டு வைக்க முடியாதல்லவா? தொழிலாளிகள் வேலை செய்யவும், யந்திரச் சாதனங்களைப் பாதுகாக்கவும், கூரைகள் வேயவும், கட்டடம் எழுப்பவும் ஏராளமான உருக்குச் சாமான்கள் தேவைப்பட்டன. இவற்றை யெல்லாம் இறக்குமதி செய்துதான் பூர்த்தி செய்து கொண்டோம். அப்படிச் செய்தும், இன்னமும் உருக்குச் சாமான்களுக்கு நாட்டில் பஞ்சம்தான் காணப்படுகிறது. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட உருக்குச் சாமான்களுக்காக ஏற்பட்ட செலவு நமது அன்னியச் செலாவணியிலிருந்து சமாளிக்கப்படவேண்டிய திட்டமிடாத, எதிர்பாராத செலவாயிற்று.

கடன் தீர வழிகள்

இவ்வித பல்வேறு காரணங்களினால் நம் நாட்டின் தற்போதைய நிலைமை என்னவென்றால் (1) உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் இறக்குமதியைக் காட்டிலும் அதிகமாக ஏற்றுமதி செய்து அதற்குண்டான அன்னியச் செலாவணியைச் சேமித்து வைத்துக் கொள்ள நம்மால் முடியவில்லை; (2) யந்திரச் சாதனங்களுக்காகவும், உணவுப்பண்டங்களுக்காகவும், அத்தியாவசியமான உருக்குச் சாமான்களுக்காகவும் நாம் நமது லண்டன் பாங்குக் கணக்கில் செக்குகள் வழங்கிக் கொண்டே போனதால், பாங்கிக் கையிருப்பு இந்திய நாணயச் சட்டப்படி இல்லாது பாங்கியில் இருக்க வேண்டிய குறைந்த பக்ஷ அளவுக்கும் கீழே சென்று விட்டது.

இரண்டாவது திட்டத்தில் இன்னமும் மூன்று ஆண்டுகளைக் கடக்க வேண்டியிருக்கையில் இப்படிப்பட்ட ஒரு நிலைமையைத் திருப்திகரமானது என்று எவரும் கருதமாட்டார்கள். ஏனெனில் எஞ்சியுள்ள திட்ட காலத்தில் திட்ட அம்சங்களுக்கு மேலும் மேலும் பெருவாரியாக யந்திரங்களும் யந்திரச் சாமான்களும் இறக்குமதி செய்ய வேண்டும். தனியார்த் தொகுதியில் லைசென்சுகள் வழங்கப்பட்ட தொழில் ஆலைகளுக்கான யந்திரங்கள், சாதனங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்தாக வேண்டும். இப்படித் தருவிக்க வேண்டிய முதலீட்டுச் சாமான்களுக்குப் பணம் கொடுக்க அன்னியச் செலாவணி நமது வசம் கையிருப்பில் இல்லை. ஆகையால், நிலைமையைச் சமாளிக்க நமது அரசாங்கம் தவணைக் கடனில் அவர்களுக்கு வேண்டிய சாமான்களை, அதாவது அரசாங்கத் தொகுதியிலுள்ள தொழிற்சாலைத் தேவைகளுக்கு வேண்டிய சாமான்களை, இறக்குமதி செய்வதென்று தீர்மானித்தனர்.

தவணைக் கடன்கள்

தனியார்த் தொகுதி விஷயத்தில் அவர்களுடைய தேவையின் ஒரு அம்சத்துக்கு மட்டும் உடனடியாகப் பணம் செலுத்தி விட்டு, பாக்கிக்கு நீண்ட வருஷ காலத்தில் பரவலாகப் பணம் செலுத்தும் ஏற்பாட்டுடன் இறக்குமதி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். உடனடியாகச் செலுத்த வேண்டிய அம்சத்துக்கு மட்டும் போதிய அன்னியச் செலாவணியை வழங்க அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. உண்மையைச் சொல்லப் போனால் உடனடியாகப் பணம் செலுத்தாமல், பூரா தொகைக்குமே தவணைக் கடனாக ஏற்பாடு செய்து கொள்ளும்படிக்கும், அதிலும் முதல் தவணையே 1961-ம் ஆண்டில்தான் ஆரம்பிக்க வேண்டுமென்றும், தங்களுக்கு சப்ளை செய்யும் மேல் நாட்டு ஸ்தாபனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும்படிக்கும்,

தனியார்த் தொகுதியிலுள்ள பல தொழிலதிபர்களை அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கிணங்க, அரசாங்கத் தொகுதியும் தனியார்த் தொகுதியும் தங்களுடைய மேல் நாட்டு 'சப்ளை' ஸ்தாபனங்களுடன் தவணைக் கடனில் யந்திரங்களை இறக்குமதி செய்ய ஒப்பந்தங்களும் செய்து கொண்டனர். இது அவர்களுக்கு ஒரு வெற்றிதான். இதனால் முக்கியமான நெருக்கடியைச் சமாளிக்க முடிந்தது. நாட்டின் தொழில் வளர்ச்சி தடைப்படாமல் அபிவிருத்தியடைய வகை செய்யவும் முடிந்தது. இதையே வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய திட்டக் கமிஷன் வகுத்துள்ள உற்பத்தி உச்ச வரம்புகளைத் திட்ட காலத்துக்குள் எட்டிப் பிடிக்க அன்னியச் செலாவணி நெருக்கடியையும் பொருட்படுத்தாமல், நாம் வேகமாக ஓட இது உதவி செய்தது.

இத்தமாதிரி தவணைக் கடன்களைப் பயன்படுத்திக் கொண்டபோதும், நேரடியாகக் கடன்கள் வாங்கிய போதும், வருங்காலத்தில் இப்போதுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடி கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி முற்றிலும் மறைந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன்தான் இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், முதலாவதாக, நம் நாட்டில் விவசாயப் பொருள்களும் ஆலைத் தொழில் பொருள்களும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு அந்த அளவுக்குத் தற்போது உடனடித் தேவைப் பொருள்கள் இறக்குமதி குறைந்து விடும் என்றும், இரண்டாவதாக, நாம் இப்போது ஏற்றுமதி செய்து வரும் பண்டங்களை இன்னும் அதிகமாக ஏற்றுமதி செய்ய முடியும் என்றும், மூன்றாவதாக, நாம் முதன் முதலாக நாட்டில் உற்பத்தி செய்ய முற்பட்டிருக்கும் புது இனங்களையும் ஓரளவுக்காவது ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் நாம் நம்பியிருக்கிறோம். இந்த நம்பிக்கைகள் பலித்து விட்டால் நம்முடைய தவணைக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் காலம் வரும்போது அதற்கு வேண்டிய அன்னியச் செலாவணி கிடைத்து விடும்.

நம்பிக்கை நிறைவேறுமா?

எனவே, இந்த நம்பிக்கைகள் எவ்வளவு தூரம் பலிக்கக் கூடும் என்பதை ஆராய்வது முக்கியமாகிறது. உலகத்தில் தொழில் வளர்ச்சியிலும் வர்த்தகப் பெருக்கிலும் காணப்படும் போக்குகளைக் கொண்டே இதைக் கவனிக்க வேண்டும். ஏனெனில் நமது நம்பிக்கையில் பெரும் பகுதி ஏற்றுமதி வியாபாரத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. முதலாவதாக, அடுத்த பத்து ஆண்டு காலத்தில் உணவுப் பண்டங்கள் சம்பந்தமாக நம்முடைய தேவையை முழுதும் நாம் பூர்த்தி செய்து கொள்ளும் நிலைமையில் இருப்போமா என்பதைக் கவனிப்போம். இதற்கு என்ன வாய்ப்புக்கள் இருக்கின்றன? இவ்விஷயத்தைப் பரிசீலனை செய்த அசோக்மேத்தா கமிட்டி இன்னும் பல ஆண்டுகளுக்கு நாம் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தது. உணவு உற்பத்திப் பெருக்குக்கான முயற்சிகளெல்லாம் அதிகரித்துக் கொண்டே போகும் ஜனப்பெருக்கத்தினால் முறியடிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதைக் காட்டிலும் உற்பத்தி பெருக வேண்டும். புள்ளி விவரங்களுடன் அசோக்மேத்தா கமிட்டி உணர்த்திய உண்மை நிலையைப் பிரதமர் நேரு அவருக்கே உரித்தான உணர்ச்சியுடன், உண்மையென ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். ஆனால் உணவுப் பண்டங்களின் பற்றாக்குறை வெறும் உணர்ச்சியால் நீங்கிவிடாது. நமது பிரச்னையும் தீர்ந்து விடாது. காலவரம்பே இல்லாது அமெரிக்கா பி. எல். 480* திட்டத்தின்கீழ் கோதுமை கடன் வழங்கிக் கொண்டே வந்தாலொழிய, நாம் உணவு இறக்குமதியைத் தவிர்க்கவும் முடியாது. அதற்காக அன்னியச் செலாவணி செலவாவதையும் நிறுத்த முடியாது. கோதுமைக் கடன் மூலம் இந்தியாவில் கோதுமை உண்ணும் பகுதிக்குத்தான் நிவாரணமே தவிர அரிசிஉபயோகிக்கும் பகுதியில் பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும் என்பதையும் கவனத்தில் வைத்துக் கொள்ளுவது அவசியம்.

இறக்குமதி குறையுமா?

அடுத்தபடியாக, உடனடித் தேவைப் பண்டங்கள் இறக்குமதியாவதைத் தடுக்க என்ன வாய்ப்புகள் உள்ளன என்பதைக் கவனிக்கலாம். 1960-ம் ஆண்டுக்குப் பிறகு நாம் ஒருகால் உருக்குச் சாமான்களையும் காகிதத்தையும் இறக்குமதி செய்வதைக் குறைத்துக் கொள்ளலாம். ரயில்வே என்ஜின்கள் இறக்குமதியை முற்றிலும் நிறுத்தி விடக்கூடும். மோட்டார் கார்கள் இறக்குமதியையும் தவிர்க்கலாம். ஆனாலும் முதலீட்டு யந்திரச் சாமான்களும், நுட்பங்கள் நிறைந்த யந்திரங்களைப் புதுப்பிக்கவும், மாற்றவும், உபரி சாமான்களும், கப்பல்களும், ஆகாய விமானங்களும் இறக்குமதி செய்துதானே ஆக வேண்டும்? அடுத்த மூன்று ஆண்டுகளில் நமது இறக்குமதி எவ்வளவு குறையலாம்

* பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள அயல் நாடுகளுக்கு விவசாயப் பொருள்களையும் இதர பண்டங்களையும் அளித்து உதவ அமெரிக்க அரசாங்கம் நிறைவேற்றியுள்ள சட்டத்தான் பி. எல். 480 என்று அடிக்கடி பிரஸ்தாபிக்கப் படுகிறது. இதன் மூலம் அமெரிக்காவின் உள் நாட்டுத் தேவைக்கு உபரியாக இருக்கும் விளைபொருள்களை அயல் நாடுகளுக்கு அனுப்புகிறது. இவ்வுதவியைப் பெற்றுக் கொள்ளும் நாடுகள் டாலர் நாணயம் கொடுக்க முடியாத நிலைமையிலிருப்பதால், அந்தந்த நாட்டு நாணயத்திலேயே இப்பண்டங்களின் மதிப்பைச் செலுத்துகின்றன. அவற்றை அந்தந்த நாடுகளிலேயே அமெரிக்க அரசாங்கக் கணக்கில் முடக்கி வைத்து, நாட்டு அபிவிருத்திக்காக ஒரு அம்சம் கடனாகவும் மற்றொரு அம்சம் மானியமாகவும் செலவு செய்யப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவுக்குக் கிடைக்கும் பொருள்கள் கோதுமை, பால் பவுடர், முதலிய இனங்கள். இவற்றின் மதிப்பு தான் ரூபாயில் கொடுக்கப் பட வேண்டிய பி. எல். 480 கடன்கள் என்று சொல்லப்படுகின்றன. ரிசர்வ் பாங்கி இந்தக் கணக்கைத் தனியாக வைத்துக் கொள்ளுகிறது.

என்பதைப் பற்றி யார் வேண்டுமானாலும் தெளிவாகக் கூறலாம். இறக்குமதி இனங்களில் ஒரு வேளை மாறுதல் இருக்கலாம். ஆனால் நமது அன்னியச் செலாவணி நெருக்கடியில் தீர்வு மட்டும் காண முடியாது. பழைய இனங்களுக்குப் பதிலாகப் புது இனங்களில் இது செலவாகும்.

ஏற்றுமதி வாய்ப்புகள்

இறக்குமதி இவ்வாறு என்றால், தற்போது நாம் ஏற்றுமதி செய்யும் இனங்களில் வர்த்தகத்தை அதிகரிக்கச் செய்ய என்ன வாய்ப்புக்கள் உள்ளன? நம்முடைய ஏற்றுமதி இனங்களில் முதல் இடம் பெறுவது தேயிலை. அதற்கு அடுத்தது சணல் வகைகள். வெளி நாடுகள் பலவற்றில் இந்தியத் தேயிலை வர்த்தகம் சீரழிந்து கொண்டே வருகிறது. நமது உற்பத்தி என்னவோ சிறிதளவு பெருகிக் கொண்டேதான் போகிறது. ஆனால் நமக்குப் போட்டியாக இலங்கையும், கிழக்கு ஆப்பிரிக்காவும், இந்தோனேஷியாவும் பலமாக இருக்கின்றன. அந்த நாடுகளில் தேயிலையின் உற்பத்தி விலைகள் குறைவு. உலக மார்க்கெட்டில் தேயிலை வியாபாரத்தில் இந்தியா தான் முதன்மையானது என்ற பதவி வெகு நாட்கள் நீடிக்காது என்றே எண்ணவேண்டும். எந்தச் சமயத்திலும் இந்த ஸ்தானத்தைக் கைப்பற்ற இதர நாடுகள் முன்னுக்கு வரக் கூடும். இது நிகழாது என்று நினைத்தாலும், நமது தேயிலை ஏற்றுமதி விஸ்தரிக்கக் கூடும் என்பதற்கு அறிகுறிகள் காணவில்லை. விலைவாசிகளும் போட்டியும் ஒருபுறமிருக்க, தேநீருக்கு எதிராகப் பல இதர பானங்கள் மேல் நாடுகளில் வழக்கத்தில் புகுந்து விட்டன.

சணலைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. பல ஆண்டுகளாகவே சணற் பொருள்களின் ஏற்றுமதி திருப்திகரமாக இல்லை. இவற்றுக்குப் போட்டியாக இதர நார் வகைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் இதன் இடத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டன. இருக்கும் வியாபாரத்தைப் பாதுகாத்துக் கொண்டாலே பெரிய சாதனை. இதில் விஸ்தரிப்பு காணலாம் என்று எதிர்பார்ப்பது மடமை யென்றே கொள்ளலாம்.

சரக்குப் பொருள்களுக்குத் தற்போது கிராக்கி இருக்கிறது. ஆனால் வெளிநாட்டு மார்க்கெட்டுகளின் போக்கை நிலையானது என்று நிச்சயமாகக் கொள்ளமுடியாது. இதை நம்பி நமது திட்டங்களை வகுக்க முடியாது. ஆலை நூல் வகைகளுக்கு ஓரளவுக்கு வெளி நாடுகளில் கிராக்கி இருக்கிறது. ஆனால் நம்முடைய உற்பத்தி விலை, அடக்கவிலைகள் உயர்ந்து கொண்டு போகின்றன. ஏறிக் கொண்டே செல்லும் தொழிலாளிகளின் சம்பள விகிதங்கள் ஒன்றே போதும் இவ் விலை உயர்வுக்கு. உலகச் சந்தையிலிருந்து நமது ஆலைத் துணிகள் விலை அதிகம் என்பதனாலேயே படிப்படியாகப் பின்வாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

நாம் முதன் முதலாகப் புதிதாக உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் என்ன வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றன?

இந்தக் கேள்விக்கு விடை காண வேண்டுமானால் நாம் புதிதாக என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்ய முற்பட்டிருக்கிறோம் என்பதை ஆராய வேண்டும். நாம் உற்பத்தி செய்யும் பொருள்களெல்லாம் மேற்கு நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட யந்திரச் சாதனங்களைக் கொண்டேதான் தயாரிக்கப்படுகின்றன. எனவே, தரத்திலும் தன்மையிலும் அந்த நாடுகள் தயாரிக்கும் பொருள்களை விட நம்முடைய தயாரிப்புகள் உயர்வாக இருக்க முடியாது. அதே அளவுக்கு இருந்தாலே அரிது. விவரங்களை ஆராய்ந்தால் நாம் மேல் நாடுகளைவிட, குறைந்த அளவில் தான் உற்பத்தி செய்கிறோம் என்பது விளங்கும்.

உதாரணமாக, மோட்டார் உற்பத்தியில் நம்முடைய உற்பத்தி மிகவும் குறைந்தேதான் இருக்கும். எனவே நம்முடைய உற்பத்தி விலைகள் எல்லாம் எந்த மேல் நாட்டு மார்க்கெட்டுகளை நமது ஏற்றுமதிக்கு நம்பி இருக்கிறோமோ அந்த் நாட்டு உள்ளூர் விலைவாசிகளுக்கு உயர்வாகவே தானிருக்கும். இந்நிலையில் ஏற்றுமதி எவ்வாறு விஸ்தரிக்கும்?

இது சம்பந்தமாக மற்றொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஐரோப்பிய நாடுகள்கூட அந்தந்த நாடுகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதில்தான் நாட்டம் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் வியாபார மந்தம் வளருமோ என்ற பீதி சமீபத்தில் இருந்தது. இது வலுத்தால் ஏற்றுமதிப் போட்டியில் அவர்களும் ஈடுபட நேரும். இந் நாடுகளெல்லாம் தொழில் முன்னேற்றமடைந்த நாடுகள். அவர்களுடன் நமது நாடு வெளிநாட்டு வர்த்தகத்தில் போட்டியிடுவது எவ்வளவு கடினம் என்பது இதனால் விளங்கும். இதைத் தவிர, ஒவ்வொரு நாட்டுடன் நாம் தனித்தனியாக வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்கிறோம். அவற்றிலெல்லாம் வெளிநாடுகள் தங்கள் பொருளாதார நிலைக்குப் பாதகம் ஏற்படாத வகையில்தான் ஷரத்துக்கள் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். நமது உற்பத்தி வகைகள் அவர்களுடைய வெளிநாட்டு வர்த்தகத்தை விரட்டியடிக்காமல் பார்த்துக்கொள்ள வாய்ப்புக்கள் அவர்களுக்குப் பலவிதத்தில் இருக்கின்றன.

சமீபத்தில் ஏற்றுமதியை எவ்விதத்திலும் விஸ்தரிக்க வேண்டும் என்று அரசாங்கம் மும்முரமாக இருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. 50,000 டன் சர்க்கரை இந்திய சர்க்கரை உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் ஏற்றுமதி செய்யவும், அதனால் ஏற்படும் நஷ்டத்தை உள்நாட்டுத் தொழிற்சாலைகள் ஏற்றுக் கொள்ளுவது என்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நமது அனுபவம் எப்படியிருக்கிறதென்பதைப் பொருத்துத்தான் இதர இனங்களிலும் ஏற்றுமதி விஸ்தரிப்பு ஏற்படுமா என்பதைச் சொல்லமுடியும்.

எந்தச் சமயத்திலும் நாம் உபயோகித்து வரும் யந்திர சாதனங்கள் உதவாக்கரை என்ற நிலைமையை அடையலாம். இப்போதே கூடச் சில யந்திரச் சாதனங்கள் அவ்வாறு ஆகியிருக்கக் கூடும். ஆகையால் நாம் ஏற்றுமதி செய்யப் போகும் நாடுகள் காலாவதியான நம்முடைய யந்திரங்களின்

செய்யப்பட்ட சாமான்கள் விலை அதிகமாக இருப்பதால் அவற்றை வாங்க முடியாது என்று கூறிவிடலாம். நமக்கு யந்திரங்களையும் யந்திர சாதனங்களையும் விற்ற மேற்கு நாடுகளில் விஞ்ஞான முன்னேற்றம் காரணமாகவும் நுணுக்கக் கலை உயர்வினாலும் உபரி யந்திரச் சாமான்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் செவ்வனே ஸ்தாபிக்கப்பட்டு, யந்திர உறுப்புக்களை மாற்றி அமைத்து, யந்திரங்களையே புது மாதிரிகளாக மாற்றும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

மேலும் சிறு சிறு தொழிற்சாலைகள் வலைப் பின்னல்போல் நாடெங்கும் பரவிக்கிடக்கின்றன. அவை அனைத்தும் சிறு சிறு உறுப்புக்களைத் தயாரிப்பதில் தனித்திறன் படைத்தவை. ஒரு பெரிய மோட்டார் ஸ்தாபனம் அல்லது ரேடியோ ஸ்தாபனம் என்றால் மேல் நாடுகளில் அவை பெரும்பாலும் சிறு பாகங்களை எல்லாம் இணைத்து ஒன்று சேர்க்கும் தொழிற்கூடங்களே. இவ்வாறு சிறு தொழிற்சாலைகள் நுட்பமான பாகங்களைப் பரவலாகச் செய்வதால் அடக்க விலை அங்கே மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, பலவிதத்திலும் உயர்வான பொருளாதார உற்பத்தி அமைப்பு முறை, குறைந்த அடக்க விலைகள், உயர்ந்த தரம், மாறிக்கொண்டே வரும் தேவைகளுக்கேற்ப உற்பத்திப் பொருள்களை அப்போதைக்கப்போது வேகமாக மாற்றிக் கொள்ளும் முறை முதலியவற்றில் நாம் வெளி நாடுகளில் போட்டி விட வேண்டியது அவசியம். இம்மாதிரி நாடுகளுக்கு நமது புது உற்பத்திச் சாமான்களை அனுப்பி அதன் மூலம் நமது கடன்களை அடைப்பதற்கான செலாவணியை மிச்சப்படுத்தலாம் என்று எண்ணுவது செயல் முறைக்கு ஒவ்வாதது.

கவலையளிக்கும் எதிர்காலம்

நிலைமை இவ்வாறு இருந்தால் எப்படித்தான் நமது கடன்களைத் திருப்பிக் கொடுப்பது? இதைப் பற்றிக் கடன் கொடுத்தவர்களல்லவோ கவலைப்பட வேண்டும். கடன் வாங்கினவர்களுக்கு ஏன் தொல்லை என்று வாய் கூசாமல் சொல்லி விடலாம். கொடுக்கல் வாங்கல் வியவகாரங்களில் இப்படிப் பேசப்படுவதைக் கேட்கிறோம். நம் நாட்டில் மட்டுமல்ல, மேல்நாடுகளிலும் அப்படித்தான். இங்கிலாந்தில் வழங்கும் ஒரு பழைய கதை.

ஒரு பள்ளி ஆசிரியர் தூக்கம் கொள்ளாமல் இரவு முழுதும் படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தாராம். கவலை கொண்ட அவர் மனைவி மனோ வேதனைக்குக் காரணத்தைக் கேட்டாளாம். யாரோ ஒருவனுக்கு நூறு பவுன் கடன் கொடுக்க வேண்டுமென்றும் பாங்குக் கையிருப்பில் பத்து பவுன் மட்டுமே இருந்ததால் மறு நாள் காலை கடன்காரன் வந்தால் என்ன சொல்லுவது என்று கவலைப்படுவதாயும் கணவர் கூறினர். எந்த விஷயத்தையும் தனிக் கோணத்திலிருந்து நோக்கும் பெண்களுக்கே உரித்தான ஆற்றல் வாய்ந்த அவர் மனைவி, "என்ன அசடாக இருக்கிறீர்களே. உங்களுடைய கடனைக் கொடுக்கப் பத்து பவுன் மட்டுமே இருக்கிறதென்றால், கவலைப்பட வேண்டியவன் கடன் கொடுத்தவன்தானே. நீங்களல்லவே" என்று சமாதானம் சொன்னாளாம். கேட்க ருசிகரமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒரு தேசத்தின் அரசாங்கம் இப்படிப்பட்ட பதிலைச் சொல்ல முடியாதே!

அமெரிக்காவைப் போன்ற கடன் கொடுத்த நாடுகள் ஒருகால் இம்மாதிரி நிலைமையைச் சமாளிக்க ஏதாவது வகை செய்யக்கூடும். முன்னேற்றமடையாத நாடுகளுக்கு உதவியளிக்க அமெரிக்கா எப்போதும் தயாராக இருந்து வந்திருக்கிறது. பின்னடைந்துள்ள நாடுகளுக்கு மார்ஷல் திட்டத்தைப் போல் உதவியளிக்க ஏதாவது ஒரு திட்டம் வகுத்து, அதன்படி நம்முடைய உபரி உற்பத்திப் பொருள்களை உலகத்தில் பின்னணி நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்படி நம்மைக் கேட்டுக் கொள்ளலாம். அதனால் கிடைக்கக்கூடிய செலாவணியைத் தனக்குச் சேர வேண்டிய கடனுக்கு ஈடாக வரவு வைத்துக் கொள்ளலாம். இப்படிச் செய்தால் இது நியாயமான ஏற்பாடுதான். இந்தியாவுக்கு உதவியளித்து, அதன் கௌரவத்தை நிலை நிறுத்த வகை செய்ததாக ஆகும். ஆனால் சர்வதேசக் கடன்கள் கணிசமான அளவுக்குப் பெருகி விட்டால் அவற்றைத் திருப்பிக் கொடுத்து அடைக்க வேண்டியதில்லை. யுத்தக் கடனைப் போல ரத்து செய்வதுதான் சம்பிரதாயம் என்று ஒரு கொள்கையும் நிலவுகிறது. ஆனால் இப்படி ஒருகால் நிகழக்கூடுமோ என்று எதிர்பார்த்து இந்தியா தன் பொருளாதார முன்னேற்றத்துக்குத் திட்டம் வகுத்ததென்றால் அது ஏச்சுக்கு இடமளிக்குமல்லவா?

கடன் கொடுக்கும் நாடுகள் கடன் வாங்கிய நாடுகளைக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் நிலையில் வைத்து, அதற்கு வகையும் செய்ய வேண்டியது அவசியமென்பது உண்மைதான். ஒருகால் இன்னும் பத்து வருஷங்கள் அல்லது இருபது வருஷங்களுக்குப் பின் உலகத்தில் எல்லா நாடுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சர்வதேச நாணயம் ஒன்று உருவாகக் கூடும். உலக பாங்கியில் அங்கம் வகிக்கும் நாடுகள் தாங்கள் ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டிய கடன்களை இந்த சர்வதேச நாணய மூலம் தீர்த்துக் கொள்ளக் கூடும். இதெல்லாம் வெறும் கற்பனைதான். இம்மாதிரி ஒரு சம்பவம் எதிர்காலத்தில் நிகழட்டும், அல்லது நிகழாமலே போகட்டும். இந்த இடைக்காலத்தில் சர்வதேச அரங்கில் நாம் ஏற்றுக் கொள்ளும் கடன் வகையில் மிகவும் ஜாக்கிரதையுடனிருப்பது நல்லது, அவசியமும் கூட. வேறெந்தக் காரணத்துக்காக இல்லா விட்டாலும், வருங்காலத் தலைமுறைக்கு இது ஒரு சுமையாகப் போய்விடும் என்பதற்காகவும், உற்பத்தி செய்ய ஏற்றது என்று எண்ணி நாம் குவித்து வைக்கும் மூதலீட்டு யந்திரச் சாமான்களை அவர்களால் லாபகரமாக உபயோகிக்க முடியாமல் போகலாம் என்பதற்காகவும், அதன் விளைவாக இந்தியாவின் நாணயத்துக்கு ஹானி ஏற்பட்டு உலகத்தில் நமக்குள்ள கௌரவம் சீர்ப்படுத்த முடியாத வகையில் சிதைவுறும் என்பதற்காகவும், கண்மூடித்தனமாக அயல்நாட்டுக் கடன்களைச் சுமத்திக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

இக்கட்டுரை ஆசிரியர் திரு பி. வி. நாராயண ரெட்டி 'பாங்க் ஆப் மைசூரி'ன் ஜெனரல் மானேஜராகப் பல ஆண்டுகள் செயல் புரிந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கிறார். அவரது நிர்வாகத்தின் கீழ் மைசூர் பாங்கி மிகுந்த செல்வாக்குள்ள ஒரு ஸ்தாபனமாக வளர்ந்து விட்டது. வியாபாரத்திலும் நிதி விஷயங்களிலும் ஆழ்ந்த அறிவும் பரந்த அனுபவமும் உள்ள திரு நாராயண ரெட்டி ஒரு 'பாங்கர்' என்ற முறையில் இந்தச் செலாவணி நெருக்கடிப் பிரச்னையை ஆராய்ந்து பயனளிக்கக் கூடிய பல ஆலோசனைகளைத் தெரிவிக்கிறார். — ஆசிரியர்

செலாவணி நெருக்கடி தீர வழி

பி. வி. நாராயண ரெட்டி

இரண்டாவது யுத்தம் முடிந்தபோது நமது நாட்டின் ஸ்டர்லிங் நாணயக் கையிருப்பு சுமார் ரூ. 1750 கோடி இருந்தது. இந்தத் தொகை இப்போது ரூ. 200 கோடியாகக் குறைந்து விட்டது. நமது நாணயக் காப்பு நிதிக்கு இது குறைந்த பக்ஷத் தேவை. இதைத் தவிர, அன்னியச் செலாவணி வழங்கவேண்டிய பொறுப்புகள் சுமார் 800 கோடி. ஏற்கனவே வாங்கிய கடன்கள் ரூ. 450 கோடி அளவில் இருக்கின்றன. சென்ற வருஷம் வாராந்திர அன்னியச் செலாவணிச் செலவு சுமார் ஒரு கோடியாக இருந்தது. இப்போது வாரத்துக்கு ஆறுகோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. இந்த விகிதத்தில் மேலும் செலவு செய்து கொண்டே போனால் இந்த வருஷ இறுதிக்குள் நமது ஸ்டர்லிங் நிதி பூராவும் கரைந்துவிடும் நிலைமையை அடைவோம். ஆகவே சுமார் பத்து பன்னிரண்டு வருஷ காலத்துக்குள் நாம் ரூ. 200 கோடிக்குச் சற்று அதிகமாகவே அன்னியச் செலாவணியை விரயம் செய்திருக்கிறோம். இதில் நாம் தீர்க்க தரிசனத்துடனும் ஆழ்ந்த கவனத்துடனும் நடந்து கொண்டிருந்தால் இதுவே அடுத்த 25 ஆண்டுகளுக்காவது நமக்குத் துணையாக நின்றிருக்கலாம்.

அந்த நிதியெல்லாம் இப்போது கரைந்து போய்விட்ட படியால் நாம் ஒன்றும் செய்து கொள்ளுவதற்கில்லை. நமக்கு இப்போது கவலையளிக்கும் விஷயம் நமது அன்னியக் கடன்கள் விஷம் போல் ஏறிக்கொண்டு போவதுதான். இதை நாம் திருப்பிக் கொடுப்பதில் பிற்காலத்தில் ஏதாவது கஷ்டங்கள் நேராமல்லவா? தற்போதைய அன்னியக் கடன்கள் சுமார் 400 கோடி ரூபாய். மூன்றாவது திட்டகாலத்தில் இவை திருப்பிக் கொடுக்க வேண்டும். இவற்றுக்கு வட்டி விகிதங்கள் உயர்வாகவேதான் உள்ளன. சிலவற்றுக்கு 9 சத விகிதம் கூட உண்டு. சமீப காலம் வரையில் இங்கிலாந்தில் பாங்கி வட்டி விகிதம் 7 சதவிகிதம் இருந்ததால் 9 சத வட்டி என்பதில் ஆச்சரியப்படத் தேவை இல்லை.

மேற்கு ஜெர்மனியிலிருந்தும் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் யந்திர சாதனங்களும் முதலீட்டுச் சாமான்களும் அவற்றின் விலைமீது 9 சத விகிதம் வட்டி கொடுத்தால் இறக்குமதி செய்ய முடியும். பின்னடைந்த நாடுகள் துரிதமாகத் தொழில் வளம் அடைய வேண்டுமானால் இம்மாதிரி விஷயங்களில் பேரம் பண்ண முடியாது. மேற்கத்திய நாடுகள் கேட்கும் விலையைக் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் பொருளாதார அபிவிருத்தி வேண்டாம் என்று விட்டு விட வேண்டும். ரூபாய் 450 கோடி கடன் மீது 9 சதவிகிதம் வட்டி மட்டும் ரூபாய் 40 கோடி ஆகிறது. அதாவது வருஷத்துக்குச் சுமார் ரூபாய் 100 கோடி விதம் அசலுக்கும் வட்டிக்குமாக மூன்றாவது திட்ட காலத்தில் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதை விடக் கவலைதரும் அம்சம் வெளிநாட்டுச் சந்தைகளில் நமது ஆலைப் பொருள்கள் போட்டியிட முடியாமல் போய்விடக் கூடும் என்பதுதான்.

இப்போது இந்தப் பெருவாரியான கடன்களுக்கும், இதற்கு மேலும் இறக்குமதிச் சாமான்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிற இனங்களுக்கும் அடுத்த 12 மாதங்களில் திருப்பிக் கொடுக்கவேண்டிய சுமார் 800 கோடி ரூபாய் அன்னியச் செலாவணிக்கும் நமக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன? நாம் எப்படித் திருப்பித்தரப் போகிறோம்? நிலைமை மோசம் தான். கவலைதரக் கூடியதுதான் என்பதில் ஐயமில்லை. எனினும் இக்கடன் சுமையைக் குறைக்க உடனடியாகத் தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டால் நிலைமையைச் சமாளிக்க முடியும்.

இரண்டு முனைகளிலிருந்து இந்த நிலையைச் சமாளிக்கலாம். ஒன்று இறக்குமதியைக் கடுமையாகக் குறைப்பது; மற்றொன்று ஏற்றுமதியை அதிகரிக்க உற்சாகமளிப்பது. ஏற்கனவே இறக்குமதித் தடுப்பை அரசாங்கம் மேற்கொண்டுதானிருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்துக்கு இதே கொள்கை நீடிக்குமென்றும் தோன்றுகிறது. இதனால் மட்டும் நமது அன்னியச் செலாவணி கையிருப்பு கரைவதை வெகுவாகக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் நாம் ஏற்கெனவே பலவிதப் பொறுப்புக்களை மேற்கொண்டு விட்டோம். அவற்றை இப்போது நிராகரிக்க முடியாது.

எனவே, ஏற்றுமதி விஸ்தரிப்பை எப்படிச் செயலுறப் பண்ணுவது என்னும் பிரச்னை முக்கியமாகிறது. இங்கேதான் நமது அரசாங்கத்தின் கொள்கைகள் சீர்படவேண்டும். தாமதமாகச் செயல்புரிவதாலும், குறிப்பிட்ட ஒரு சமயத்துக்கு மட்டும் பயன்படக்கூடிய நடவடிக்கைகளாலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட செயல்களினாலும் ஏற்றுமதி சரிவர இப்போது நடைபெறவில்லை. உதாரணமாக, பஞ்சாலைகளிலும் சர்க்கரை ஆலைகளி-

லும் சுமார் ஆறுமாத காலமாகச சரக்குகள் தேங்கிக் கிடப்பது தெரிந்தும் அரசாங்கம் அவற்றின் விநியோகத்துக்கு ஏற்ற முறையில் ஒரு முடிவுக்கு வரவில்லை. * 1956-57-ம் ஆண்டில் ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளுக்கு இந்திய சர்க்கரை 153,000 டன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அதனால் நம்நாட்டுக்குச் சுமார் 12 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்தது. இப்போது நிலைமை முன்னையிருந்ததை விட மோசமாகி விட்டது. கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும், உயர்வான வரி விகிதங்களாலும், தொழிலாளிகள் சம்பள உயர்வாலும் சர்க்கரைத் தொழிலின் நிலை மோசமாகி விட்டது. மாறுபட்ட இந்த நிலையில் சர்க்கரை ஏற்றுமதி நடக்க வேண்டுமானால் அரசாங்கம் உதவி செய்தால்தான் முடியும். மத்திய அரசாங்கம் ராஜ்ய சர்க்கார்கள் விதித்து வரும் செய்யும் உற்பத்தி வரியை முற்றிலும் எடுத்துவிட வேண்டும். இல்லாவிடில் கணிசமான அளவுக்குக் குறைக்க வேண்டும். சர்க்கரை உற்பத்தியில் ஒரு பகுதியை ஏற்றுமதிக்கென்று ஒதுக்கி வைக்க வேண்டும். இதைப் பரீக்ஷார்த்தமாக வேண்டுமானாலும் ஒரு வருஷத்துக்குச் செய்தும் பார்க்கலாம். அதிலிருந்து கிடைக்கும் பலன்களை அனுசரித்து இந்த முறையைப் பூரணமாகவோ அல்லது மாறுதல் செய்தோ நீடிக்கலாம்.

இதே உண்மை பஞ்சாலைத் தொழிலுக்கும் பொருந்தும். ஒரேயடியாக உச்ச நிலைக்கு உயர்த்தப்பட்ட உற்பத்தி வரிகள் மூலம் இந்தத் தொழிலுக்கே பேரதிர்ச்சியை உண்டுபண்ணி விட்டனர் நமது சர்க்கார். இதன் விளைவாக ஆலைகளில் உற்பத்தி செய்த துணி இருப்புகள் அதிகமாகத் தேங்கி விட்டன. உள்நாட்டு மார்க்கெட்டிலேயே அவற்றை விற்கஆலை நிர்வாகிகளால்முடியவில்லை. வெளிநாட்டு மார்க்கெட்டுகளுக்கு அனுப்பலாமென்றால் அதற்குப் போதிய வசதியும் இல்லை; வழியும் இல்லை. இதனால் பெருவாரியாக முதலீடு செய்யப்பட்டுச் செயல் புரியும் ஆலைகளில் விற்க முடியாமல் சரக்குத் தேக்கமும், ஒவ்வொரு ஆலையாக மூடப்பட்டு வருவதும், நடைமுறை கொள்முதல் பணங்கள் முடங்கிக் கிடப்பதும் சகஜமாகி விட்டன. இது உடனடியாகப் பரிகாரம் செய்யப்பட வேண்டிய ஒரு நிலை. தாமதித்து அளிக்கப்படும் உதவி பயனளிக் காமல் போய் விட்டாலும்போய்விடும்.

தேயிலை நமது ஏற்றுமதிப் பொருள்களுள் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஏராளமான அன்னியச் செலாவணி சம்பாதித்துத் தருகிறது. காலங்கடந்தி அளிக்கப்பட்ட ஏற்றுமதி வரிக்குறைப்பின் மூலம் இந்தத் தொழிலில் உருவாகிக் கொண்டிருந்த ஒரு நெருக்கடியைச் சில மாதங்களுக்கு முன் ஒருவாறு தவிர்க்க முடிந்தது. நெருக்கடி முற்றியிருந்தால் இந்தத் தொழிலே நசித்து விட்டிருக்கும். இம்மாதிரி ஊக்கம் அளிக்கும் நடவடிக்கை மற்ற ஏற்றுமதிச் சாமான்களான கனிப் பொருள்கள், சணல்உற்பத்தி வகைகள், தேங்காய்நார் பொருள்கள், மிளகு, காப்பிக் கொட்டை, பதனிட்ட தோல் வகை, எண்ணெய் விதைகள் முதலிய இனங்களிலும் தேவை. இந்த இனங்களில் நிரந்தரமான ஏற்றுமதி மார்க்கெட்டு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமானால் நீண்ட காலத்துக்குத் தீர்க்க தரிசனத்துடன் திட்டமிட்டுச் செயல் புரிய வேண்டும். அரசாங்கம் வர்த்தகத் தொழிலில் தலையிட்டு ஏற்றுமதி வரியை அடிக்கடி மாற்றக் கூடாது. ரயில் பெட்டி வசதிகளும் இதர அனுகூலங்களும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கம் ஆதரவுடன் உதவி செய்து தர வேண்டும்.

இது சம்பந்தமாகப் பல அயல் நாடுகளில் செயல் புரியும் நமது ஸ்தானிகர்களும் அந்தந்த நாட்டில் என்ன தேவைகள் உள்ளன என்பதைப் பற்றி நமது வர்த்தகர்களுக்கு உபயோகமாகப் பல செய்திகளைத் தெரிவித்து உதவி புரியலாம். இந்த வேலையைக் கவனித்து அவர்கள் திறமையாகச் செய்ய அந்தந்த ஸ்தானிகராலயத்துக்கு வியாபாரத்திலும் தொழில் உற்பத்தியிலும் அனுபவமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். அவர்களுக்கு அரசியல் விவகாரங்களுடன் வியாபார விஷயங்களையும் கவனிக்கவசதியாயிருக்கும்.

இவ்விஷயத்தில் நம் நாட்டில் செயல் புரியும் இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மானிய ஸ்தானிகராலயங்களின் நல்ல தொண்டுகளை நமது இதர அயல்நாட்டு ஸ்தானிகர்களும் பின்பற்றலாம். அவசியமானால் முக்கியமான ஸ்தானிகராலயங்களில் ஒரு உயர் அதிகாரியை நிதி, பொருளாதாரம் முதலியவற்றுக்கு ஆலோசகராக நியமிக்கலாம். அவர்கள் அந்தந்த நாட்டில் தங்களைப் போன்ற சம அந்தஸ்துள்ள அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு நமது நாட்டின் நிதி முதலிய அம்சங்



திரு பி. வி. நாராயண செட்டி

* இக்கட்டுரை எழுதியபின் ஆலை துணி வகைகளுக்கு உற்பத்தி வரி மாறுதல்களை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. சுமார் 50,000 டன் சர்க்கரை இந்திய சர்க்கரை உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் ஏற்றுமதி செய்வதற்கும் வகை செய்திருக்கிறது.

களைப் பாதிக்கும் விஷயங்களில் தங்களது ஸ்தானிகர்களுக்கு ஆலோசனை சொல்லக் கூடும்.

இவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டாலும் பின்னடைந்துள்ள நம் நாட்டைப் போன்ற எந்த நாடும் தனது சொந்த முயற்சியைமட்டும் கொண்டு முன்னேற்றமடைய முடியாது என்பதையும் சொல்ல வேண்டும். முன்னேற்றமடைந்துள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, ருஷ்யா முதலிய நாடுகளின் ஆதரவையும், அனுதாபத்தையும், நட்பையும், நிதி உதவியையும் இன்னும் நீண்ட காலத்துக்குப் பெற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ருஷ்யா இந்தியாவிடம் வெகு தாராளமாக வார்த்தைகள் மூலம் அனுதாபம் காட்டினாலும் பெரிய அளவில் அப்படி ஒன்றும் பிரமாதமாக உதவி செய்து விடவில்லை. ஆகவே, நமது இதர நட்பு நாடுகளாகிய அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து போன்றவைகளைத் தான் நமது அன்னியச் செலாவணி நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்கு நாட வேண்டியிருக்கிறது.

நெருக்கடியைத் தீர்க்க மேலே சொன்ன வகைகளெல்லாம் உடனடியாகப் பயனளிக்க வல்லவை என்பதும் குறுகியகாலத் தீர்வுகள் அல்ல என்பதும் விளங்கும். இவை அனைத்தும் பயன்தர வேண்டுமானால் சிறிது காலம் பிடிக்கும். எனினும், விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும். மிகுந்த அளவுக்குத் தியாக புத்தியுடன் செயல்புரிய வேண்டும். அப்போதுதான் எதிர்பார்த்த பயன் கிடைக்கக் கூடும். ஆனால் நமது பிரச்னைகள் தற்போது நெருக்கடி நிலைமையில் இருக்கிறது. அவற்றுக்குப் பரிகாரம் உடனடியாகக் காண வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. தாமதிக்கக் கூடாது. இது சம்பந்தமாக அமெரிக்காவில் நமது ஸ்தானிகராக அரும் பணியாற்றிய திரு மேத்தாவுக்குப் பின்னும் அவர் பதவிக்கு இன்னமும் தகுதியான ஒருவர் நியமிக்கப்படாமல் இருப்பது வருந்தத் தக்கது. இதில் காணப்படும் தாமதம்தான் இதைப் போல முக்கியத்துவம் வாய்ந்த இதர விஷயங்களிலும் காணப்படுகிறது. இந்தப் பொறுப்பு வாய்ந்த பதவிக்குத் தொழில் அனுபவமும் வர்த்தக அறிவும் உள்ள நல்ல அந்தஸ்துள்ள ஒருவரை மேலும் தாமதிக்காமல் நியமிக்கப் படுவார் என்று எதிர்பார்க்கலாம். அப்படிப்பட்டவரின் முதல் கடமை அமெரிக்க அரசாங்கத்திடம் நமது அன்னியச் செலாவணிப் பிரச்னை எவ்வளவு கடுமையான நிலைக்கு வந்து விட்டது என்பதை எடுத்துக் கூற வேண்டியது. அப்படி எடுத்துச் சொல்லி அவர்களிடமிருந்து நமது நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள போதிய அளவு உதவிநாட வேண்டும். அம்மாதிரி ஒரு உதவியின்றி நமது நெருக்கடியை வேறு எந்த வகையிலும் தீர்த்துக் கொள்ள முடியும் என்று தோன்றவில்லை. நம்முடன் நேசமாகப் பழகும் இதர நாடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய உதவியையும் தாமதமின்றி நாம் பெற வகை செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமது பொருளாதாரத்திலேயே முதல் தரமான ஒரு நெருக்கடி ஏற்பட்டு, இரண்டாவது திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாமல் போகலாம். அது பாரத மக்களுக்குப் பெருத்த ஏமாற்றமாக அல்லவா இருக்கும்.

நெசவாளர்களே! புள்ளிவிவரம் அனுப்புங்கள்!


தமிழ்நாட்டின் பல பாகங்களில் உள்ள நார்ப்பட்டு நெசவு நெய்யும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களிடமிருந்தும், அவர்கள் சங்கங்களிடமிருந்தும் நார்ப்பட்டு கிடைப்பதில் உள்ள கஷ்டங்களைப் பற்றிக் கடிதங்கள் வருகின்றன. இறக்குமதி கட்டுப்பாட்டினால், வெளிநாட்டு நார்ப்பட்டு அதிகமாக வருவதில்லை. உள்நாட்டில் உள்ள நாலு மில்களில் இருந்து உற்பத்தியாகும் நார்ப்பட்டில் பெரும் பகுதி விசைத்தறிகளுக்கும் கோட்டாக்காரர்களுக்கும் போய்விடுகிறது. அதனால் கைத்தறி நெசவாளிக்கு நார்ப்பட்டு நியாயமான விலையில் கிடைப்பதில்லை. சென்ற சில வாரங்களாக மாஸ்டர் வீவர்கள் வேலை கொடுக்காமல் கைத்தறி நெசவாளர்கள் பட்டினியால் வாடுகின்றனர் என்று புகார்கள் வந்தவண்ணமாய் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் சுமார் ஐம்பத்து இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளிகள் தங்கள் தொழிலுக்கு நார்ப்பட்டையே நம்பியுள்ளனர். இதைத் தவிர, நார்ப்பட்டு ஜரிகைக்கும், கரைக்கும், முந்தானைக்கும், பூவேலை செய்வதற்கும் பல ஆயிரக்கணக்கான நெசவாளிகள் உபயோகப்படுத்துகின்றனர். இவைகளை அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி வாதாடப் புள்ளி விவரங்கள் தேவையாய் இருக்கின்றன. ஆகையால் ஆங்காங்கே உள்ள நெசவாளர் சங்கங்கள் நார்ப்பட்டு நெசவில் ஈடுபட்டிருக்கும் நெசவாளிகளின் ஜாபிதா ஒன்றையும், அவர்களுக்குத் தேவையான அளவு, ரகம் முதலியவைகளையும் இதற்கு முன்னால் அவர்கள் எவ்விதம் வாங்கி உபயோகம் செய்தார்கள் என்பதையும் புள்ளி விவரங்களுடன் விவரமாக விளக்கி,

பொதுக் காரியதரிசி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸ், கரூர்

என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

டாக்டர் கோபாலசாமி (பொதுக் காரியதரிசி)



39

புறங் கூறுதல் என்றால் பிறரைப் பற்றி அவர் இல்லாத இடத்தில் இகழ்ச்சியுரை பேசுதல். குறைவும் குற்றமும் நேருக்கு நேர் நின்று சொல்லுதல் முறையாகும். உண்மையில்லாதனவற்றை மறுதலிக்கவும் குறைகளுக்குச் சமாதானம் சொல்லவும் இடம் தந்து பேசுவது முறை. காணாத இடத்தில் சொல்லுவது அநீதி. துன்பம் இழைப்பதுடன் கோழைத்தனமும் கலந்த குற்றமாகும்.

எதிரில் வைத்துக் கொண்டு ஒருவனுடைய குற்றங்களைச் சில சமயம் தாட்சணியமின்றிக் கடுஞ் சொல்லாயினும் சொல்லலாம். ஆனால் தூஷணைக்கு ஆளானவன் இல்லாத சமயம் தூஷணைப் பேச்சு பேசலாகாது.

கண்நின்று கண்அறச்
சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச்
சொல்.

கண் நின்று—எதிரில் நின்று. கண் அற—தாட்சணியம் இன்றி, கடுமையாக; 'சொல்லினும்' என்பதில் சில சமயம் அப்படிச் சொல்லுவது முறையாகும் என்பது பொருள். சொல்லற்க முன் இன்று—தூஷணைக்கு ஆளானவனை எதிரில் வைத்துக்கொள்ளாமல் அவன் இல்லாத சமயத்தில் சொல்லற்க. பின் நோக்காத சொல்—சொல்வதின் பயனை ஆராயாமல் பேசப்படும் சொல்: குற்றம் சொல்லப்பட்டவனுக்கும் தனக்கும் உண்டாகும் விளைவை ஆராயாமல் பேசப்படும் சொல், கடுஞ்சொல் பேசுவது சில சமயம் அவசியமும் முறையுமாகலாம். ஆனால் நேருக்கு நேர் வைத்துக் கொண்டு பேச வேண்டும், எதிரில் இல்லாதவனைத் தூஷிக்கலாகாது. பின் நோக்காச் சொல்—இப்படித் தூஷிப்பது மடமை. விளையும் பயனை ஆராயாமல் செய்யும் செயலாகும்.

* * *

ஏதிலார் குற்றம்போல்
தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும்
உயிர்க்கு.

பர்ன்ஸ் என்கிற ஆங்கிலக் கவியின் புகழ்பெற்ற வாக்கியம் ஒன்று உண்டு. அதுவே ஓரெழுத்து வேறுபடாமல் வள்ளுவர் இந்தக் குறளில் சொல்லுவது. பாட்டின் பாணியும் அதே பாணி.

அயலார் குற்றத்தைக் காண்பது போலத் தன்னுடைய குற்றத்தை எவனும் காண மாட்டான். அப்படிக் காணும் அறிவை மக்கள் பெற்று விட்டால் இந்த உலகத்தில் தீமையே இராது. பாபம் என்பதே மறைந்தொழிந்து போகும். பிறர் குற்றத்தை எவ்வளவு தெளிவாகக் காண்கிறோம்! தத்தம் குற்றத்தைக் காணுவதற்கு அந்தத் தெளிவுக் காட்சி இல்லாமற் போவதினாலேதான் உலகம் துன்பப்படுகிறது.

அத்தியாயம் 5

வானமாதேவியின் விரக்தி



ஆலயத்துக்கு வந்து திரும் பினால் அலை மோதும் துயரம் மறைந்து மனத்தில் சாந்தி பிறக்குமென்று பெரியோர்கள் சொல்வார்கள். ஆனால் நிலவு பொழியும் அந்த நீளிரவில் பரிவாரங்களோடு கன்னியா குமரியிலிருந்து திரும்பிக் கொண் டிருந்தபோது மகாராணி வான வன்மாதேவியாரின் இதயத் தில் கவலைகள் முதிர்ந்து விரக்தி வளர்ந்து கொண்டிருந்தது.

அவள் தனியாகச் செல்ல வில்லை. ஆறுதலும்' அன்பும் நிறைந்தவர்கள், ஞானமும் அனுபவ மேதையும் செறிந்த இரண்டு பெரியோர்கள், குழந் தைகள்போல் சிரித்துச் சிரித்துப் பேசும் நிர்மலமான நெஞ்சம் படைத்த இரண்டு கன்னிகைகள், எல்லோரும் அவளோடு வருகிறார்கள். பரிவாரத்து வீரர்கள் சங்கு, கொம்பு, தமருகம், பேரிகை, முழவு, திருச்சின்னம் ஆகிய பிரயாணகால இன்னிசைக் கருவிகளால் கீத வெள்ளத்தை உண்டாக்குகின்ற னர். உடம்பில் பொதியமலைச் சந்தனக் குழம்பை ஒரு சிறு குழந்தை தன் பிஞ்சு விரல்க ளால் அள்ளித் தடவுவது போல் கடல்காற்று வீசுகிறது.

ஆனால் அவற்றில் எதுவும் வானவன்மா தேவியின் மனத்துக்குச் சுகத்தை அளிக்க வில்லை. குமரியன்னை கோவிலின் கருப் பக் கிருகத்துப் பிராகாரத்தில் நடந்த நிகழ்ச்சியை நினைக்கும்போதே அவள் உடம்பு புல்லரித்தது. ஒருகணம் தவறி யிருந்தால், எவனோ குறி வைத்து எறிந்த அந்தக் கூர்மையான வேல் அவள் நெஞ்

பாண்டிமாதேவி

நா. பார்த்தசாரதி



சைப் பிளக்காமல் விட்டிருக்குமா? அப்படி ஏதாவது விபரீதமாக நடந்திருந்தால் இப்போது பல்லக்கில் சுமந்து கொண்டு போவதற்குப் பதிலாக......? ஐயோ! இந்தமாதிரி எண்ணிப் பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. வானவன்மா தேவியின் எண்ணங்கள் பல்லக்கைத் தூக்கிச் செல்லும் வீரர்களின் நடையைப் போலவே துரிதமாக மேலெழுந்து சென்றன.

"இந்தத் தென்பாண்டி நாட்டை ஏதோ நான் அரியணையில் அமர்ந்து ஆண்டு கொண்டிருக்கிற மாதிரி அல்லவா எண்ணுகிறார்கள்? இல்லையானால் என்னைச் சுற்றி ஒற்றர்களும், வஞ்சகர்களும் உலாவக் காரணமென்ன? தரிசனத்துக்குப் போன இடத்தில் முன்னேற்பாடாக மறைந்திருந்து என்னைக் கொல்லச் சதி நடக்கிறது. இது எனக்குப் போதாத காலம் போலிருக்கிறது! சக்கரவர்த்திகள் காலமானபின் நான் அமங்கலியாக மட்டும் ஆகவில்லை; எவ்வளவு துரதிர்ஷ்டங்களும், துர்ப்பாக்கியங்களும் உண்டோ, அவ்வளவும் என்னைவந்து சார்ந்துவிட்டன போலிருக்கிறது. கணவனைத்தான் இழந்தேன்; அருமைக் குமாரன் இராசசிம்மனுமா என்னைவிட்டு ஓடிப் போக வேண்டும்? போரில் தோற்றுவிட்டால் என்ன? அதற்காகப் பெற்றவளிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் சிங்களத்துக்கும், புட்பகத்துக்குமா ஓட வேண்டும்? அவர் என்னைத் தனிமையாக்கிவிட்டுப் போன சமயத்தில் பாழாய்ப்போன எதிரிகளுமா வடபாண்டி நாட்டின் மேல் படையெடுக்க வேண்டும்? நாடுதான் போயிற்று! இவனும் இப்படி எதற்காக ஓடிப் போனான்?

எங்காவது சமணப் பள்ளியிலோ, பௌத்தப் பள்ளியிலோ, தீட்சை பெற்று மணிமேகலை, குண்டலகேசி இவர்களைப் போல் எஞ்சிய வாழ்நாளைத் துறவு மார்க்கத்தில் கழித்துவிட எண்ணியிருந்தவளை இந்த மகாமண்டலேசுவரர் ஏன்தான் இங்கு அழைத்துக் கொண்டு வந்தாரோ? இந்த இடையாற்று மங்கலம் நம்பி இருக்கிறாரே; அப்பப்பா! எதையும் சில புன்னகைகளாலும், சில வார்த்தைகளாலும் சாதித்து விடுகிறார். எவ்வளவோ விரக்தியோடு இருந்தவளை மனத்தை மாற்றி இங்கு அழைத்துக் கொண்டுவந்து இந்தப் புறத்தாய நாட்டுக் கோட்டையில் மறுபடியும் இராஜ போகங்களுக்கும், அரசியல் சூழ்ச்சிகளுக்கும் நடுவே சிக்கவைத்து விட்டாரே! இதிலிருந்து எப்படித் தப்புவது? தப்பாமல் இப்படியே இருக்கத்தான் முடியுமா? மகா மண்டலேசுவரர் எனக்கு அளித்திருக்கும் கௌரவம் மிக மிகப் பெரியதுதான். அதில் சந்தேகமே இல்லை. ஐம்பெருங் கூற்றத் தலைப் பெருமக்களும், மந்திராலோசனைத் தலைவரும் இருக்கும் தென்பாண்டி நாட்டின் அரசியைப் போன்ற மரியாதையை அந்த மகாபுருஷரான இடையாற்று மங்கலம் நம்பி எனக்கு அளித்திருந்தாலும் இதிலிருந்து நான் தப்பித்தாக வேண்டும். காலஞ்சென்ற என் நாயகர் மீது நாஞ்சில் நாட்டாருக்கு இருக்கும் அளவுகடந்த அன்பினால் மண்டலேசுவரர் இதைச் செய்திருக்கிறார்.

அதே சமயத்தில் இதன் விளைவு என்ன ஆகுமென்பதை அவர் சிந்திக்காமல் விட்டிருக்கவும் முடியாது. அபாரமான சாணக்கியத் திறமை படைத்த இடையாற்றுமங்கலம் நம்பிக்கா சிந்தனையை நினைவுபடுத்த வேண்டும்?



தென்பாண்டிப் புறத்தாய நாட்டுக் கோட்டையில் நான் இருப்பதால்தான் ஒற்றர்களும் கொலைக்கு ஏவப்பட்டிருக்கும் சூழ்ச்சிக்காரர்களும் இங்கே பின் தொடர்ந்திருக்கிறார்கள்! வடபாண்டி நாட்டைக் கைப்பற்றிய எதிரிகள் இங்கே படையோடு நுழைய எவ்வளவு நாட்களாகும்? என் ஒருத்தியின் பொருட்டு அமைதியும், வளமும், அழகுச் செல்வமும் கொழிக்கும் இந்த நாஞ்சில் நாட்டில் போர் ஏற்படத்தான் வேண்டுமா? இன்று மாலை முன்னிரவு நேரத்தில் கன்னியாகுமரியில் நடந்த தீய நிகழ்ச்சிகள் எதைக் குறிக்கின்றன? மகா மேதையான மண்டலேசுவரர் தளபதி மூலமாக அவற்றைக் கேள்விப்பட்டபின்பாவது தம்கருத்தை மாற்றிக் கொள்வாரா? அல்லது அவருடைய மௌனத்துக்கும், அமைதிக்கும் வேறு ஏதாவது காரணம் உண்டா? சில சமயங்களில் அவர் பெரிய புதிராக


மாறி விடுகிறீரே? 'இராச சிம்மனைத் தேடி இலங்கைத் தீவுக்கு ஒற்றர்களை அனுப்புங்கள்' என்று மூன்று திங்களாக அவரிடம் சொல்லி வருகிறேன். ஒரு ஏற்பாடும் செய்யாமல் தண்ணீருக்குள் போட்ட கல்மாதிரி இருக்கிறார். சமீப காலமாக இங்கேயும் கோட்டைக்கு வருவதில்லை. எப்போதாவது வந்தாலும் சொல்வதையெல்லாம் கேட்டு விட்டுப் பதில் சொல்லாமல் வழக்கம்போல் சிரித்து விட்டுப் போய் விடுகிறார்.

'' வரட்டும்! நாளைக்கு மகாசபைக் கூட்டத்துக்கு எப்படியும் வந்து தானாக வேண்டும். அப்போது எல்லாவற்றையும் தெளிவாக மனம் விட்டுச் சொல்லி விடுகிறேன்.

'மண்டலேசுவரரே! என்னை இந்தப் பெரிய கோட்டையிலிருந்து விடுதலை செய்து விடுங்கள். என்னால் இனியும் இங்கிருக்க முடியாது. நான் சமண மதத்தில் சேர்ந்து தீட்சை பெற்று சந்நியாஸினியாகப் போகிறேன். என் மகனையும் தேடி அழைத்து வராமல் என்னையும் இந்தக் கௌரவ வலையில் அடைத்து வதைக்கிறீர்கள். என் மனம் விரக்தி யடைந்து விட்டது' என்று சொல்லத்தான் வேண்டும்.''

''மகாராணி! என்ன? இன்னும் பல்லக்கினுள்ளேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது சிந்தனையோ?''—அதங்கோட்டாசிரியரின் குரலைக் கேட்டு வானவன்மாதேவிக்குச் சுய நினைவு வந்தது. வெளியே பார்த்தாள். பல்லக்குகள் புறத்தாய நாட்டுக் கோட்டைக்குள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்தன. பகவதியும், விலாசினியும், தங்கள் பல்லக்கிலிருந்து இறங்கிக் கீழே நின்று கொண்டிருந்தனர்.

சிந்தனை வேகத்தில் அரண்மனையை அடைந்து விட்டதை உணர்ந்து கொண்டு பல்லக்கிலிருந்து கீழே இறங்கச் சிறிது நேரமாயிற்று வானவன்மாதேவிக்கு. பகவதியும், விலாசினியும் கன்னங் குழியச் சிரித்துக்கொண்டே மகாராணியின் அருகே வந்து நின்று கொண்டனர். முகக் குறிப்பையும் மௌனத்தையும் பார்த்தபோது பவழக் கனிவாயரும், அதங்கோட்டாசிரியரும், மகாராணியின் மனம் நிம்மதியற்று இருக்கிறதென்று தெரிந்துகொண்டனர். அந்த நிலையில் பேசாமலிருப்பதே நல்லதென்று அவர்களுக்குத் தோன்றியது.



உணவு முடிந்தபின் நிலா முற்றத்தில் போய் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. அந்த அமைதி அதங்கோட்டாசிரியரின் மனத்தில் ஒரு வகை வேதனையை உண்டாக்கிற்று. அங்கே மகிழ்ச்சியும், கலகலப்பும் நிலவுவதற்காக ஏதாவது ஒரு மாறுதலை உடனே உண்டாக்கவேண்டும் என்று நினைத்தார்!


''மகாராணி! என் குமாரி விலாசினிக்குப் பரதநாட்டியம் முழுதும் கற்பித்திருக்கிறேன். அபிநயமும், நிருத்தியமும் அவளுக்கு அழகாகப் பொருந்தியிருக்கின்றன. திருவாசகம், திருக்கோவையாரிலுள்ள மாணிக்கவாசகரின் அற்புதமான பாடல்கள், இவற்றுக்கெல்லாம் அபிநயப் பயிற்சி அளித்திருக்கிறேன். இப்போது எல்லோரும் ஒய்வாக உட்கார்ந்திருக்கிறோம். மகாராணியாரின் நிம்மதியற்ற குழம்பிய மனத்துக்கும் ஆறுதலாக இருக்கும்'' என்று மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார் அதங்கோட்டாசிரியர்.

''மிகவும் நல்லது! உங்கள் பெண்ணின் நாட்டியத்தைப் பார்த்தாவது என் மனக்கவலைகளைச் சிறிது நேரத்துக்கு மறக்க முயல்கிறேன்'' என்று கூறினாள் மகாராணி. ''குழந்தாய், விலாசினி! உனக்கு நடனமாடத் தெரியுமென்று நீ என்னிடம் சொல்லவே இல்லையே? வா இப்படி! ஏதாவதொரு நல்ல பாட்டுக்கு அபிநயம் பிடித்துக் காட்டு; பார்க்கலாம்''—என்று ஆசிரியர் மகளிடம் திரும்பிக் கூறினார். விலாசினி சிரித்துக் கொண்டே எழுந்திருந்தாள். நிலா முற்றத்துச் சுவரோரமாக மறைவில் சென்று உடையை நாட்டியத்துக்கு ஏற்றபடி வரிந்து கச்சும், தாருமாகக் கட்டிக் கொண்டு வந்தாள்.

''வல்லாளனின் தங்கைக்கு நன்றாகப் பாட வரும் என்று நினைக்கிறேன். அவளே பாடட்டும்'' என்று பவழக் கனிவாயர் சும்மா இருந்த பகவதியையும் அதில் சேர்த்து வைத்தார்.

''பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல ஆயிற்று! இந்த இரண்டு இளம் பெண்களுமாகச் சேர்ந்து நமக்குக் கலை விருந்து அளிக்கட்டும்.''

'' மகாராணியாரே! பார்த்து ஆசிமொழி கூறுவதற்கு முன் வந்திருக்கிற போது எங்கள் கலைக்கு அதைவிடப் பெரும் பேறு வேறென்ன இருக்க முடி



யும்?'' என்றாள் சிலம்பு குலுங்க நாட்டியஉடையோடு வந்து நின்ற விலாசினி. பகவதி மகாராணியை வணங்கி வீணையை ஏந்திப் பாடுவதற்குத் தயாராக முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''தேவி! கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டு வந்ததிலிருந்து இந்த விநாடி வரை உங்கள் மனத்தில் பெரிய பெரிய கவலைகளால் நிம்மதியற்றுக் குழம்புகிறீர்கள் என்று தோன்றுகிறது. வல்லாளதேவனின் தங்கையும், அதங்கோட்டாசிரியரின் குமாரியுமாகச் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு, உங்கள் கவலையைத் துரத்தப் போகிறோர்கள்; பாருங்கள்'' என்றார் பவழக் கனிவாயர். மகாராணி அதைக் கேட்டு முகத்தில் மலர்ச்சியையும், உதடுகளில் சிரிப்பையும் வருவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் அந்தச் சிரிப்பில் இயற்கையான உயிர்ப்பு இல்லை.

அடுத்த கணம் நிலா முற்றத்தில் சிலம்பும் சலங்கையும் குலுங்கும் ஒலி எழுந்தது. நாட்டியத்துக்கு என்றே படைக்கப்பட்டதைப் போன்ற விலாசினியின் உடல் வளைந்து நெளிந்து அபிநயம் பிடித்த அழகை எப்படி வருணிப்பது? இது என்ன? குயிலின் இனிமை இந்த மானிட நங்கையின் தொண்டைக்கு எப்படிக் கிடைத்தது? பாடுவது வல்லாளதேவனின் தங்கை பகவதிதானா? அல்லது தேவலோகத்துச் சங்கீத தேவதை ஒன்று வீணையை ஏந்தி வந்து இந்த நிலா முற்றத்தில் உட்கார்ந்து பாடுகிறதா?

கூடகத் தோள்வளை யார்ப்ப வார்ப்ப
தொண்டர் குழாம் எழுந்தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமும் அவர்தம்மை யார்ப்ப வார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் கண்ணம்இடித்தும்நாமே.


திருவாசகத் திருப்பொற் கண்ணப் பதிகத்திலிருந்து ஒரு பாடலை வரி வரியாக நிறுத்தி அபிநயத்துக்கு அவகாசம் கொடுத்து நிதான கதியில் வீணையை மீட்டிப் பாடும் பகவதி அங்கிருந்த எல்லோரையும் முற்றிலும் புதிய உலகத்துக்கு அழைத்துப் போய் விட்டாள். விலாசினியின் நடனமோ பாட்டின் ஒவ்வொரு எழுத்தையும் தத்ரூபமாக அபிநயத்தில் சித்திரித்துக் காட்டியது. விரக்தியின் எல்லையில் குமைந்து கொண்டிருந்த மகாராணி சகலத்தையும்மறந்து அந்தப் பாட்டிலும் நடனத்திலும் லயித்துப் போயிருந்தாள். ஆனால் உள்ளத்தை உருக்கும் மாணிக்கவாசகரின் அந்தப் பாட்டு இன்னொரு வகையில் அவள் மனத்தை விரக்தி கொள்ளச் செய்தது.

''பார்க்கப் போனால் பொன்னும் பொருளும், அரசபோகமும், அதிகார ஆணவங்களும் என்ன பயனைக் கொடுக்கப்போகின்றன? துன்பத்தையும், சூழ்ச்சியையும், குரோதத்தையும் உண்டாக்க வல்ல போட்டிதான் இவற்றால் உண்டாகின்றன. பரம்பொருளை நினைந்து அல்லும், பகலும், அனவரதமும் பாடித் திரிவதில் மாணிக்கவாசகர் போன்ற அடியார்களுக்குக் கிடைத்த ஆத்மீகமான இன்பம் என்னைப்போல ஒரு நாட்டின் அரசியே விரும்பினாலும் கிடைக்குமா? இந்தப் பாடலை வீணையோடு இழைந்து பாடும் பகவதியின் குரலையும், இதற்கு அழகாக அபிநயம் செய்யும் விலாசினியின் தோற்றத்தையும் பார்க்கும்போது என் மனத்தில் ஏன் இந்தக் கிளர்ச்சி ஏற்படுகிறது? இந்தக் கிளர்ச்சிக்குப் பொருள் என்ன? கோட்டை, கொத்தளம், அரண்மனை, அரசபோகம் எல்லாவற்றையும் விட்டு விட்டு இப்படியே, இப்போதே எழுந்திருந்து எங்காவது ஓடிப் போய் விடலாம் போலத் தோன்றுகிறதே? இது ஏன்? ஏன்?''

மேலே பால்மாரியென முழு நிலா. சீதமாருத மென் காற்று. பாட்டின் குரல் இனிமை. கருத்தாழம். சலங்கை ஒலிக்கும் பாதம்! இவை யெல்லாம் சேர்ந்து தெய்வீகம் நிறைந்த புனிதமானதோர் மானசீகபூமிக்குத் தூக்கிக் கொண்டு செல்வதைப் போலிருந்தது.

கிண்கிணிச் சிறு சலங்கையின் ஒலியும் பகவதியின் பாடற் குரலும் நின்றபோதுதான் மகாராணி வானவன்மாதேவி இந்த உலகத்துக்கு வந்து கண்ணைத் திறந்து எதிரே பார்த்தாள். பகவதியும், விலாசினியும் பவ்வியமாக அடக்க ஒடுக்கத்துடன் கைகளைக் கூப்பி வணங்கினார்கள்.





"அற்புதமான நிருத்தியம். அற்புதமான கீதம்" என்று சிரக்கம்பம் செய்தார் பவழக் கனிவாயர். தம் முன்னே அழகின் மாசுபடாத பொற்சிலைகளாக வணங்கி நிற்கும் அந்த யுவதிகளிடம் எந்த வார்த்தைகளைச் சொல்லி எப்படிப் பாராட்டுவதென்றே மகாராணிக்குத் தெரியவில்லை.

"மகாராணி! தங்கள் வாயால் குழந்தைகளை ஆசிமொழி கூறி வாழ்த்த வேண்டும்" என்று அதங்கோட்டாசிரியர் கேட்டுக் கொண்டார்.

"அதங்கோட்டாசிரியரே! இந்தக் குழந்தைகளை எப்படி வாழ்த்துவதென்றே எனக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை இந்த மாபெரும் கலைச் செல்விகளை வாழ்த்துவதற்கு வேண்டிய அவ்வளவு தகுதிகூட எனக்கு இல்லையோ என்று நான் பயப்படுகிறேன். உங்கள் போல் ஆன்றோர்கள்தாம் இம்மாதிரி பெருங் கலைகளுக்கு வாழ்த்து கூறுவதற்கு உரிமை உடையவர்கள். குழந்தைகளே! என்னை வணங்காதீர்கள், ஆசிரியர்பிரானையும், பவழக்கனிவாயரையும் முதலில் வணங்குங்கள்."

"நீங்கள் இப்படிச் சொல்லக்கூடாது. அன்னை கன்னியாகுமரித் தெய்வத்துக்கு அடுத்தபடி இந்தத் தென்பாண்டி நாட்டின் மாபெருந்தேவி தாங்கள். உங்கள் மனத்தில் எழுகின்ற அன்பு நிறைந்த வார்த்தைகளால் வாழ்த்துங்கள்" என்றார் அதங்கோட்டாசிரியர்.

"குழந்தைகளே! இப்படி அருகில் வாருங்கள்." பகவதியும், விலாசினியும் அருகே சென்றார்கள். உட்காரச் சொல்லிக் கையமர்த்தினாள் மகாராணி. இரண்டு பெண்களும் இருபுறமும் மண்டியிட்டு அமர்ந்தனர். இரண்டு பெண்களையும் முதுகைச் சேர்த்துத் தழுவிக் கொண்டாற்போல் இரு கைகளாலும் பாசத்தோடு அணைத்துக் கொண்டாள் மகாராணி வானவன்மாதேவி.

"அருமைக் குழந்தைகளே! உங்களுக்கு எல்லா மங்கலங்களும் உண்டாகட்டும். அறிவும், திருவும் மிக்க நல்ல நாயகர்கள் வாய்க்கட்டும்!"

மகாராணி இப்படி அவர்களை வாழ்த்திக் கொண்டிருந்தபோது நிலா முற்றத்தின் தென் பக்கம் மதிற்சுவருக்குக் கீழே இருந்த அரண்மனை நந்தவனத்திலிருந்து ஒரு குரூரமான கூப்பாடு எழுந்தது. அதை யடுத்துச் சடசடவென்று ஒரு பெரிய மரக்கிளை முறிந்து விழும் ஓசை கேட்டது. ஆந்தைகள் அலறின. 'திடு திடு' வென ஆட்கள் ஓடும் காலடி ஓசையும், இனம் புரிந்து கொள்ள முடியாத வேறு பல சத்தங்களும் அரண்மனை நந்தவனத்திலிருந்து கிளம்பின. நந்தவனத்தில் மூலைக்கொன்றாகத் தீப்பந்தங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

நிலா முற்றத்திலிருந்த மகாராணி உட்பட எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தார்கள். 'என்ன? என்ன?' என்ற கேள்வி ஒவ்வொருவர் வாயிலிருந்தும் முந்தி எழுந்தது. எல்லோரும் நந்தவனத்தின் பக்கமாக மிரண்ட பார்வையால் திரும்பிப் பார்த்தனர். அங்கே தீப்பந்தங்களோடு வீரர்கள் ஓடுவதும், 'பிடி' 'விடாதே' என்ற கூப்பாடுகளும் கண்டு அவர்கள் திகைத்தனர்.


அத்தியாயம் 6

யார் இந்தத் துறவி?

தோணித் துறையிலிருந்து இரவின் அகால நேரத்தில் புறப்பட்ட அந்தப் படகு பறளியாற்றைக் கடந்து கொண்டிருந்தது. ஆற்றில் வெள்ளத்தின் வேகமும், சுழிப்பும் மிகுதியாக இருந்ததால் அம்பலவன் வேளான் படகை மெல்லச் செலுத்திக் கொண்டு போனான்.

தளபதி வல்லாளதேவனிடம், படகில் சென்றுகொண்டிருந்தபோது மகாமண்டலேசுவரர் கலகலப்பாகப் பேசினார். அவருடைய திருக்குமாரி குழல்வாய்மொழி நாச்சியாரும் சிரித்துக் கொண்டே வேடிக்கையாகவும், கலகலப்பாகவும் பேசினாள். படகோட்டி அம்பலவன் வேளான் பேசினான். குழல்மொழிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த வாலிபத் துறவிதான் பேசவே யில்லை. எப்படியாவது அந்தத் துறவியைப் பேச வைத்து விட வேண்டுமென்று தளபதி ஆனமட்டிலும் முயன்றான். வேண்டுமென்றே பேச்சினிடையே துறவிகளைப் பற்றிப் பேசினான். அப்போதாவது அந்த இளம் துறவி வாய் திறந்து பேசுவாரென்று அவன் எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தான். உதடுகளை நெகிழ்த்து மௌனமாக ஒரு புன்னகை செய்துவிட்டுப் பேசாமலிருந்தார் அவர். 'மனிதர் வாய் பேச முடியாத ஊமையோ?' என்று சந்தேகம் உண்டாகிவிட்டது அவனுக்கு.

மகாமண்டலேசுவரராவது, அவருடைய புதல்வியாவது அந்தத் துறவியைத் தனக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள் என்று தளபதி எதிர்பார்த்தான். ஆனால் அவர்கள் அதைச் செய்யவே இல்லை. வேண்டுமென்றே அறிமுகம் செய்யாமலிருப்பது போல் தோன்றியது அவனுக்கு. "இந்தத் துறவி யார்? எங்கிருந்து வருகிறார்? ஏன் இப்படிப் பேசாமல் ஊமைபோல் மௌனமாக உட்கார்ந்து கொண்டு வருகிறார்?" என்று வெளிப்படையாக இடையாற்று



இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு வைத்து எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது தமிழ் பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிடவும்!

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப்
இந்தியா பிரைவேட் லிமிடெட்

பி. ஒ. பாக்ஸ் 1976
டிபார்ட்மென்ட் 64-H
பம்பாய்



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர் வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ	4/-
சிறிய பாட்டில்	ரூ.	2/-

எங்கும் கிடைக்கும்

ராம்தீர்த்

ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. Rly)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் எங்கள் அழகான ஆசனம் படத்திற்கு எழுதுங்கள். தபால் செலவு உள்பட ரூ. 2-50, மணியார்டர் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை

ஆஸ்த்மா-ஜலதோஷம் ப்ராங்கைட்டிஸ் செய்தி

[illegible]

ஆஸ்த்மா, ப்ராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத் திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப் படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றிச் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

முகப் பருக்கள் நீங்கி விடுகிறது -3 நாளில் அதன் மூலகாரணம் கொல்லப் படுகிறது

நிக்ஸோடர்ம் (Nixoderm) முதல் முதலில் உபயோகிக்கத் தொடங்கியதுமே முகப்பருக்கள் எல்லாம் மாயமாய் மறையத் தொடங்குகின்றன. இன்றிரவே நிக்ஸோடர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். விரைவில் உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும், மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், பிளவைகள், தேமல்கள், கரப்பான், படை, கட்டிகள் இவைகளுக்குக் காரணமான கிருமிகளையும், பூச்சிகளையும் கொல்லும் ஒரு புதிய முறை. இன்றே உங்கள் கெமிஸ்டிடமிருந்து நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை ஒழித்து உங்கள் சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும், வழவழப்பாகவும் செய்ய உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ்.

Nixoderm
நிக்ஸோடர்ம்
சரும உபாதைகளுக்கு

மங்கலம் நம்பியிடமே நேருக்கு நேர் கேட்டு விடலாம். ஆனால் அந்தத் துறவியையும் அருகில் வைத்துக் கொண்டே அப்படிக் கேட்பது அவ்வளவு சிறந்த முறையாகாது. பண்பற்ற முரட்டு விசாரணையாக முடிந்துவிடும் அது!

அவர்கள் வேண்டுமென்றே பிடிவாதமாக அதைத் தன்னிடம் சொல்ல விரும்பாதது போல் மறைக்கும்போது கேட்பதும் நாகரிகமில்லை. ஆனால் ஒரு உண்மையைத் தளபதி வல்லாள தேவன் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. திருமணமாகாத தம் குமாரியை அந்த வாலிப வயதுத் துறவியோடு நெருங்கிப் பழக விடுவதைக் கண்டபோது, துறவிக்கும், இடையாற்று மங்கலம் நம்பிக்கும் நெருங்கிய விதத்தில் உறவோ, தொடர்போ இருக்க வேண்டுமென்று தெரிந்தது. குழல்மொழி அந்தத் துறவியிடம் நடந்துகொண்ட விதம் எவ்வளவோ நாள் தெரிந்து பழகியமாதிரி கூச்சமோ, நாணமோ இல்லாமல் இருந்தது. தன் பக்கத்தில் கன்னிப் பருவத்து அழகு பூரித்து நிற்கும் ஒரு இளம் பெண் படகில் உட்கார்ந்திருக்கிறாளே என்று துறவி கூச்சமடைந்ததாகத் தெரியவில்லை. அதேபோல் தளதளவென்று இடுக்கிய செம்பொன் போன்ற நிறமும், இளமைக் கட்டமைந்த காளை போன்ற உடலும், அழகு ததும்பும் முகத் தோற்றமுமாக ஒரு ஆண் மகன் தன் அருகே உட்கார்ந்திருக்கிறானே என்று மகாமண்டலேசுவரரின் குமாரியும் கூசியதாகத் தெரியவில்லை.

நெருங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அடிக்கடி சிரித்துக் கொண்டே துறவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். துறவியும் அதேபோல் அவளை ஏறிட்டுப் பார்த்தார்! இவற்றையெல்லாம் பார்த்துத்தான் தளபதி மனம் குழம்பினான். படகு மேலே முன்னேறிச் சென்று கொண்டிருந்தது.

ஆண்பிள்ளையாகிய வல்லாள தேவனையே அந்த இளந் துறவியின் தோற்றம் மயக்கியது. 'இந்த முகத்தை இன்னொரு முறை பார்!' என்று பார்த்தவன் அல்லது பார்த்தவளை மீண்டும் மீண்டும் தூண்டக்கூடிய அதிசயமானதோர் அழகு துறவியின் முகத்தில் இருந்தது.

தங்கத் தாம்பாளத்தில் அரைக்கீரை விதையைக் கொட்டி வைத்தாற்போல் அந்தப் பொன்னிற முகத்தில் கருகருவென்று வளர்ந்திருந்த தாடி எடுப்பாக இருந்தது. தளபதி மீண்டும் நிலா ஒளியில் படகுக்குள் தன் எதிரே உட்கார்ந்திருக்கும் துறவியைப் பார்த்தான்.

அந்தக் கம்பீரமான பார்வை, அழகிய கண்கள், நீண்ட நாசி, புன்னகை தவழும் சிவந்த உதடுகள், இவற்றையெல்லாம் இதற்கு முன்பும், எங்கோ, எப்போதோ, பல முறைகள் பார்த்திருப்பது போல் ஒரு பிரமை, ஒரு தற்செயலான நினைவு திடீரென்று வல்லாள தேவனின் மனத்தில் ஏற்பட்டது.

மாளிகைக் கரையிலுள்ள துறையில் போய்த் தோணி நிற்கிறவரை, இடையாற்று மங்கலம் நம்பியும், அவருடைய பெண்ணும் எதை எதையோ பேசினார்கள். மகாராணியாரின் உடல் நலம், வடபாண்டி நாட்டின் அரசியல் நிலைமை, விழிஞத்துத் துறைமுகத்தில் வந்து



செல்லும் வெளிநாட்டு மரக்கலங்கள்' கோட்டாற்றிலுள்ள தென் பாண்டிப் பெரும் படைகளின் நிலைமை என்று எத்தனையோ செய்திகளைப் பற்றி விரிவாக விவாதித்துப் பேசினார்கள். ஆனால் தப்பித் தவறிக் கூட அந்த வாலிபத் துறவியைப் பற்றிப் பேசவில்லை.

"இந்த அகால வேளையில் இவர்களோடு எங்கே போய்விட்டு மாளிகைக்குத் திரும்புகிறீர் இடையாற்று மங்கலம் நம்பி?" என்று இன்னொரு சந்தேகமும் தளபதிக்கு ஏற்பட்டது. கரையில் இறங்கியதும் மகா மண்டலேசுவரர் செய்த முதல் காரியம் வீரத்தளபதி வல்லாளதேவனுடைய சந்தேகத்தை மேலும் வளர்ப்பதாகவே இருந்தது.

''குழல்மொழீ! தளபதி ஏதோ முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறார். அவரோடு நான் தனியாகப் பேச வேண்டும். நீ 'சுவாமிகளை' அழைத்துக் கொண்டு போய் வசந்த மண்டபத்தில் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடு'' என்று தீவின் மேற்குக் கோடியிலிருந்த வசந்த மண்டபக் கட்டடத்தைச் சுட்டிக் காட்டினார் மகாமண்டலேசுவரர். ''ஆகட்டும், அப்பா! 'இவரை' நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் தளபதியாரை அழைத்துக் கொண்டு போய் உங்கள் காரியத்தைக் கவனியுங்கள்'' என்று சொல்லிவிட்டு அவருடைய பெண் குழல்மொழி அந்த இளந் துறவியை அழைத்துக் கொண்டு அந்த நேரத்தில் தனியே வசந்த மண்டபத்தை நோக்கி நடந்ததைப் பார்த்தபோது தளபதி திகைத்துப் போய் நின்று விட்டான். அவன் மனத்துக்குள் நிகழ்ந்து கொண்டிருந்த மர்மக் குழப்பம் இன்னும் ஒரு படி அதிகமாகி விட்டது.

''என்ன தளபதீ? நாம் போகலாமா? அந்தரங்க மண்டபத்தில் போய் நாம் பேச வேண்டியதைப் பேசுவோம்'' என்று கூறிக் கொண்டே முன்னால் நடந்தார் இடையாற்று மங்கலம் நம்பி. தளபதி, வசந்த மண்டபத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கும் அந்தத் துறவியையும், பூங்கொடி அசைந்து துவள்வது போல் அவர் அருகே நடை பயிலும் குழல்மொழியையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே மகா மண்டலேசுவரரைப் பின்பற்றி நடந்தான்.


''தளபதீ! வழியைப் பார்த்து நடந்து வா! மழை பெய்த ஈரம்; வழுக்கி விடப் போகிறது. எங்கேயோ பார்த்துக் கொண்டு நடக்கிறாயே?'' என்று அவர் குறிப்பாகத் தன் செயலைக் கண்டித்தபோது தான் திரும்பிப் பார்ப்பதை வல்லாளதேவன் நிறுத்திக் கொண்டான். அப்போதுமகா மண்டலேசுவரரும் தானும் தனியாக இருப்பதால் அந்தத் துறவியைப் பற்றி அவரிடம் விசாரிப்பது தவறில்லை என்று அவனுக்குத் தோன்றியது.

''மகா மண்டலேசுவரரிடம் அடியேன் ஒரு சந்தேகம் கேட்கலாமோ?'' என்றான்.

முன்னால் 'விறுவிறு' வென்று விரைந்து நடந்து கொண்டிருந்த இடையாற்றுமங்கலம் நம்பி நின்று அவனைத் திரும்பிப் பார்த்தார். இமையாமல் அவர் பார்த்தஅந்தப் பார்வையில் ஆத்திரமா? திகைப்பா? வெறுப்பா? கோபமா? எது நிறைந்திருந்தது என்பதை வல்லாள தேவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

''சந்தேகமா? என்ன சந்தேகம்?'' நிதானமான குரலில் பதற்றமில்லாமல் வெளி வந்தது அவருடையகேள்வி.

மகா மண்டலேசுவரர் தன்னைத் திரும்பிப் பார்த்த விதத்தையும் கேட்ட கேள்வியையும் பார்த்து; ஒருகணம் அப்படியே அயர்ந்து போய் நின்று விட்டான் வீரத்தளபதி.



'தான் கேட்க நினைத்ததைக் கேட்காமலே இருந்து விடலாமா?' என்று ஒருவிதத் தயக்கம்கூட அவனுக்கு உண்டாயிற்று. அறிவிலும், அனுபவத்திலும், சூழ்ச்சியிலும், எதையும் ஆளும் திறமையிலும், மலை போல் உயர்ந்த மகா மண்டலேசுவரரிடம் எதையும் மறைக்க முடியாது. ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு பார்வையிலும், ஒவ்வொரு அசைவிலும், மனத்தின் ஆழத்தில் பதுங்கியிருக்கும் அதற்கு மூலமான எண்ணத்தை ஊடுருவி அறியக்கூடியவர் இடையாற்று மங்கலம் நம்பி. எனவே கேட்க நினைத்ததை மறைக்காமல் கேட்டு விடுவதென்று உறுதி செய்து கொண்டு, "நம்மோடு படகில் வந்தாரே அந்தத் துறவி......" என்று தொடங்கி அவன் தன் கேள்வியைக் கேட்டு முடிப்பதற்குள்ளேயே அவர் இடைமறித்துப் பதில் சொல்லத் தொடங்கி விட்டார்.

"அவர் இன்னாரென்று அறிவதற்காகப் படகு புறப்பட்டபோதிருந்து நீ துடிதுடித்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும், வல்லாளா! அவரை வாய் திறந்து பேச வைப்பதற்காக நீ செய்த சாகஸங்களையெல்லாம் பார்த்து உள்ளுறச் சிரித்துக் கொண்டுதான் வருகிறேன் நான். அவரைப் பற்றி நீ கட்டாயம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இப்போது வேண்டாம். அதற்கொரு சமயம் வரும்" என்று சொல்லி விட்டுக் குறும்புத்தனமானதோர் சிரிப்பை இதழ்களில் மலரச் செய்தார் இடையாற்று மங்கலம் நம்பி.



தன் கேள்விக்கு விடை சொல்லாமல் அவர் சாமர்த்தியமாக அதை மறுத்த விதம் தளபதியை அதிர்ச்சியடையச் செய்தது. "வல்லாளதேவா! நீ வந்திருக்கிற நேரத்தையும், அவசரத்தையும் பார்த்தால் 'மிக மிக இன்றியமையாத காரியமாகத்தான் வந்திருப்பாய்' என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தத் துறவியைப் பற்றி விசாரித்து உன் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்காதே. வந்த காரியத்தைப் பேசுவோம், வா!" என்று சொல்லிக் கொண்டே மாளிகையின் அந்தரங்க அறை வாசலில் வந்து நின்றார் மகாமண்டலேசுவரர்.

அங்கிருந்த சேவகன் ஒருவன் ஓடி வந்து அந்தரங்க அறையின் மணிகள் பொருத்தப்பட்ட கதவுகளைத் திறந்து விட்டான். கதவுகளில் தொங்கிய மணிகள் அமைதியான இரவில் கலகலவென்று ஒலித்தன. உள்ளே எரிந்து கொண்டிருந்த தீபங்களைத் தூண்டி விட்டான். தூப கலசங்களிலிருந்த அனலை ஊதிக் கனியச் செய்து அகில் பொடியைத் தூவினான். தீபங்களின் ஒளியும், தூபங்களின் நறுமணமுமாக, அற்புத சோபையுடன் விளங்கிய அந்த அறைக்குள் இருவரும் நுழைந்தவுடன் சேவகன் வெளிப்புறமாக வந்து நின்று கொண்டு கதவுகளை இழுத்துச் சாத்தினான். மறுபடியும் ஒரே சமயத்தில் இரு கதவுகளிலுமிருந்த எல்லா மணிகளும் ஒலித்து ஓய்ந்தன. சேவகன் அங்கேயே காவலாக நின்றுகொண்டான்.

இடையாற்று மங்கலம் மாளிகை கடல் போலப் பெரியது. சொல்லப் போனால் இரண்டு ஆறுகளுக்கு நடுவே நதிகளின் செல்லப் பிள்ளைபோல் அமைந்திருந்த அந்தத் தீவின் முக்கால் பகுதி இடம் அந்த மாபெரும் மாளிகைதான். கடலுக்கு அடியில் எத்தனை இரகசியங்கள், மர்மங்கள், அபூர்வப் பொருள்கள் மூழ்கிக் கிடக்கின்றனவோ; தெரியாது. ஆனால் இடையாற்றுமங்கலம் மாளிகையில் ஒவ்வொரு அணுவிலும் நாஞ்சில் அரசியலின் எண்ணற்ற மர்மங்கள் மறைந்திருக்கின்றன என்பார்கள்.

மாளிகையின் முக்கியமான அறைகளின் கதவுகளிலெல்லாம் நிச்சயமாக மணிகள் பொருத்தப்பட்டிருக்கும். எவ்வளவு மெதுவாகக் கதவைத் திறக்க முயன்றாலும் சிறு சிறு வெண்கல மணிகளின் நாவு அசைந்து கணீரென்று ஒலியைக் கிளப்பிவிடும். தனியாக உட்கார்ந்து அந்தரங்கமான செய்திகளைப் பேசும்போதோ, மந்திராலோசனையில் இருக்கும்போதோ அன்னியர் எவரும் முன்னறிவிப்பின்றி உள்ளே நுழைந்துவிட முடியாதபடி கதவுகளை

இப்படி நுணுக்கமாக அமைத்திருந்தார் இடையாற்றுமங்கலம் நம்பி.

அரசியல் மேதையும், அறிவுச் செல்வரும், இராஜதந்திரங்களின் இருப்பிடமுமான இடையாற்றுமங்கலம் நம்பியின் எண்ணங்களையும், செயல்களையும், மனத்தையும் வல்லாளதேவன் எப்படி முழு அளவில் இன்றுவரை தெரிந்து கொள்ள முடியவில்லையோ, அதேபோல் அந்த மாளிகையிலும் தெரிந்து கொள்ளாத அல்லது தெரிந்து கொள்ள முடியாத இன்னும் எத்தனை எத்தனையோ விசித்திரமான இடங்கள் இருந்தன.

வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கும் ஆயிரக்கணக்கான படைவீரர்களுக்கு நடுவே போர்க்களத்தில் நின்று அஞ்சாமல் கட்டளைகளை இட்டும், கையில் வாளேந்தியும், ஒரு பெரும் படையினை முன்னின்று நடத்தி வெற்றி பெறும் திறன் அவனிடம் இருந்தது. ஆனால் புறத்தாயநாட்டு மகாமண்டலேசுவரர் செய்ய நினைக்கும் செயல்களையும் எண்ணங்களையும் துணிந்து முன்னின்று ஆராயும் இதயத் திடம் அவனுக்கு இல்லை. அந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவன் மனம் இந்த நொடிவரை பலவீனம் என்ற எல்லைக் கோட்டை மீறி அப்பாற் சென்றதே இல்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. மகாமண்டலேசுவரரின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அவருக்கு எதிரே உட்கார்ந்து பேசும்போது இதயத்தை மறைத்து எந்தப் பொய்யையும் பேச முடியாது. உயர்ந்தோங்கி வான மண்டலத்தை அணைந்து நிற்கும் பிரும்மாண்டமான ஒரு மலைச் சிகரத்தைக் கண்ணெதிரே பார்க்கிற உணர்ச்சி உண்டாகும், அந்த மனிதரின் முகத்தைப் பார்க்கும்போது. ஆகவே எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் உண்மைதான் வாயில் வரும். தன்னிடம் யார் பேசிக் கொண்டிருந்தாலும் வேறெங்காவது பராக்குப் பார்த்துக் கொண்டு அந்தப் பேச்சைக் கேட்கும் வழக்கம் அவரிடம் கிடையவே கிடையாது. பேசுகிறவனின் முகத்தையும் அதிலுள்ள கண்களையும் பார்த்துக் கொண்டேதான் பேச்சைக் கேட்பார். அந்தப் பார்வை பேசுகிறவனின் மனத்தில் புதைந்து கொள்ள முயலுகிற உண்மைகளையெல்லாம் குத்தி இழுத்து வெளியேகொண்டு வந்துவிடும். அவ்வளவு கூர்மை அதற்கு!

அவசியம் ஏற்பட்டாலொழிய இடையில் குறுக்கிட்டு எதையும் கேள்வி கேட்காமல் எதிராளியின் பேச்சைக் கூர்ந்து கேட்டுக் கொண்டே போவார்.

அவரிடம் இப்படிப் பலமுறை அனுபவப் பட்டிருந்த தளபதி வல்லாளதேவன் அன்று அந்தரங்க அறைக்குள் அவரோடு நுழைந்தபோது மிகவும் முன்னெச்சரிக்கையுடன் அவசியமானவற்றைத் தவிர வேறெதையும் பேசக் கூடாதென்று மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டுதான் நுழைந்தான். கன்னியாகுமரியில் கைப்பற்றிய ஓலையைப் பற்றி அவரிடம் வாய் தவறி உளறிவிடக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆனால், இடையாற்று மங்கலம் நம்பியிடம் பேசத் தொடங்கி விட்டதும் தளபதி வல்லாளதேவன் எதை எதை மகாமண்டலேசுவரரிடம் சொல்லக் கூடாதென்று நினைத்துக் கொண்டிருந்தானே, அவையெல்லாம் அவனை யறியாமலே அவன் வாயில் வந்துவிட்டன. அவர்கள் உட்கார்ந்திருந்த அந்தரங்க அறை ஒளி மயமாக இருந்தது. தூபப் புகையின் நறுமணம்! அன்னக் கொடி விளக்குகளின் ஒளி! நாற்புறமும் சுவர்களில் அழகான ஓவியங்கள்! அறை முழுவதும் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த மல்லிகைப் பூச்சரங்கள்! பூமணமும், அகிற்புகையும், தீப ஒளியும் எதிரே நிமிர்ந்து உட்கார்ந்து தன்னையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் இடையாற்றுமங்கலம் நம்பியின் பார்வையும், ஒன்றுசேர்ந்து தளபதியை என்னவோ செய்தன!

புறத்தாய நாட்டுக் கோட்டையிலிருந்து மகாராணியார் கன்னியாகுமரிக்குப் புறப்பட்டது, பாறையிடுக்கில் ஒற்றர்களைச் சந்தித்தது, தரிசனத்தின் போது மகாராணிக்கு ஏற்பட்ட ஆபத்து, மறு நாள் நாஞ்சில் நாட்டு மகாசபையைக் கூட்டுமாறு மகாராணி ஆணையிட்டிருப்பது ஆகிய எல்லா விவரங்களையும் மண்டலேசுவரரிடம் கூறினான். ஒற்றர்களிடமிருந்து கைப்பற்றிய ஓலையைப் பற்றி மட்டும் சொல்லவே இல்லை.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு மகாமண்டலேசுவரர் சிரித்தார். ''தளபதி! எல்லாம் சரிதான். உன்னுடைய இடுப்பிலிருக்கும் அந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறதென்று எனக்குத் தெரியும். ஆனாலும் அதை என்னிடம் எடுத்துக் காட்டி விடுவதுதான் முறை!''—

இதைக் கேட்டதும் வல்லாளதேவன் வெலவெலத்துப் போனான். அவன் உடல் நடுங்கியது. மண்டலேசுவரர் அவனை நோக்கி வெற்றிப் புன்னகை பூத்தார். அதே சமயம் கதவுகளின் மணிகள் மெல்ல ஒலித்தன. **(தொடரும்)**


இதோ! பாமாலிவ்—
இந்தியாவின் மிகப்பிரசித்தியுற்ற
அழகுத் தைலங்களினால் செய்தது
உங்கள் வனப்பைக் காக்க
இந்த இருகுண அழகு முறையை இன்றுமுதல் கையாளுக!
1. சுத்தம் பெறுக பாமாலிவ்வின் நிறைந்த நுரையினால். அது சருமத்தை அணைத்து அழுக்கை இருந்த இடம் தெரியாமல் அகற்றுகிறது.
2. அழகு பெறுக பாமாலிவ்வில் உள்ள சுத்தமான, மணங் கமழும் எண்ணெய்களைத் தேய்ப்பதன்மூலம், பாமாலிவ் உங்கள் சருமத்தை மிருதுவாக, வழ வழப்பாக, இளமை ததும்ப வைக்க உதவட்டும்.
பாமாலிவ்
பியூடி சோப்
PALMOLIVE
புதியது! நீடிக்கும்,


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லெட் பவுடர்
ஜயண்ட் சைஸ் அழகிய
டப்புடன் கிடைக்கும்!

கற்பனைச்சிலை

வேங்கடலக்ஷ்மி

பொழுது கதிரோன் மலைவாயில் விழும் தருணம். ஒளியும் நிழலும் ஒன்றுடன் ஒன்று கலந்து கோலமிட்டு விளையாடிக் கொண்டிருந்த இவ்வேளையில், கபிலவஸ்துவின் தேவதாருச் சோலைகளை அணைத்து ஓடிய கபிலை நதியின் கரையினூடே, சிறிதும் பெரிதுமான குன்றுகள் நிரம்பியிருந்த பிரதேசத்தில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தார் சீன யாத்திரிகரும் பௌத்த பிக்ஷுவுமான பா-ஹியன். அவருக்குச் சற்று முன்னால் போய்க் கொண்டிருந்தான், இளைஞனை வழிகாட்டி ஒருவன்.

யாத்திரிகருக்கு நெடுந்தூரம் நடந்ததனாலும், முதிர்ந்த பிராயத்தினாலும் மேல் மூச்சு வாங்கியது. தவிர, அவர் தோளில் சுமந்துகொண்டிருந்த மூட்டையின் கனம் வேறு அவரைக் களைப்புக்கு ஆளாக்கியது. அந்த மூட்டையில், இந்தியா முழுவதும் சுற்றித் திரிந்து அவர் சேகரித்திருந்த விலை மதிப்பற்ற ஓலைச்சுவடிகளும், சிறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தாமிரத் தகடுகளும் நிரம்பி யிருந்தன. அவற்றையெல்லாம் எப்படியாவது பத்திரமாகத் தம்முடைய நாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் கவலையினால், அந்த மூட்டையை இரவும் பகலும் தம்மை விட்டகலாமல் தூக்கிக் கொண்டே திரிந்தார். இக்காரணம்பற்றியே அவருடன் வந்திருந்த வழிகாட்டி, அம்மூட்டையைத் தான் தூக்கிக் கொண்டு வருவதாக எவ்வளவோ கேட்டும் அவனிடம் கொடுக்க மறுத்து விட்டார்.

குப்த மகா சக்கரவர்த்தியான சந்திரகுப்தனின் விருந்தாளியாக வந்திருந்த அந்தச் சீன பிக்ஷுவுக்கு வழிகாட்டத் தேர்ந்தவழிகாட்டியை அனுப்பி யிருந்தார் சக்கரவர்த்தி. குசநாகன் நன்றாகப்படித்தவன். அப்பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு காடும், மலையும் குகையும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆகவே சீன யாத்திரிகருடன் ஒவ்வொரு இடமாகச் சுற்றிக் காண்பித்துக் கொண்டு வந்தான் அவன்.

அவருடைய கால்கள் சோர்ந்து தள்ளாடின. மரங்கள் அடர்ந்த ஒரு குன்றின் அடிவாரத்தை யடைந்ததும் சற்று நின்றார். முன்னால் சென்று கொண்டிருந்த குசநாகன் திரும்பிப் பார்த்தான். சீன யாத்திரிகர் குன்றின் அடிவாரத்திலேயே நின்று விட்டதைக் கண்டதும் வேகமாய் அவரை நோக்கி வந்தான்.

"சுவாமி! களைப்பாக இருக்கிறதா? இங்கேயே சற்றுத்தங்கி இளைப் பாறலாமே! அப்



படியே உட்கார்ந்து சற்றுச் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள். நான் போய்க் கொஞ்சம் குடிக்க நீர் கொண்டு வருகிறேன்!"

என்று கூறிச் சற்றுத் தூரத்திலே ஓடிக்கொண்டிருந்த நதியை நோக்கி விரைந்தான் குசநாகன்.


''பிக்ஷு'' தம்மிடமிருந்த மூட்டையைக் கீழே வைத்து விட்டு, அப்படியே மரத்தடியில் சாய்ந்து கொண்டார். இலேசாக வீசிய தென்றல் அவருடைய சோர்வுற்ற உடலுக்கு இதமாயிருந்தது.


அதற்குள் ஒரு பெரிய இலை மடக்கில் குளிர்ந்த ஜலம் மொண்டு கொண்டு வந்தான் இளைஞன். கையிலிருந்த கனிகளையுண்டு, தாகத்தையும் தணித்துக் கொண்டனர் இருவரும்.

மேற்கு வானம் சிவப்பும் மஞ்சளுமாய்ப் பளிச்சிட்டது. பரிதியின் செங்கோளம் மறைந்து இருள் ராணியின் ஆட்சி தொடங்கு முன்னமேயே, தன்னுடைய வெள்ளிக் கதிர்களை விரித்து அவளை விரட்டி விட்டான் வட்டவடிவமான பூரணச் சந்திரன்.

நாற்புறமும் தம்முடைய பார்வையைச் சுழற்றி விட்டார் பிக்ஷு. அவர் விழிகள் வியப்பினால் மலர்ந்தன.

''அதோ, அது என்ன?'' என்று சற்றுத் தூரத்தில் எதையோ சுட்டிக் காட்டினார் பிக்ஷு.





"எது, சுவாமி?" என்று கேட்டான் அவன்.

"அதோ, பார்! அந்தக் குகை வாசலில்! ஒரு பெண்ணின் சிலை போல் இருக்கிறதே?" என்று ஆவலுடன் எழுந்தார் பா-ஹியன்.

"ஆம், சுவாமி! ஒரு பெண்ணின் சிலைதான் அது. அதைக் காண்பிப்பதற்காகத்தான் தங்களை நகருக்கு வெளியே அழைத்து வந்தேன்! நல்ல நிலவு இருப்பதால் இங்கு முழுவதும் சுற்றிப் பார்த்து விடலாம்!" என்றபடியே அவரைத் தொடர்ந்தான் வழிகாட்டி.

தலையை அசைத்தபடியே வேகமாய் நடந்த பா-ஹியன் சிலையை நெருங்கியதும் சடக்கென்று திகைத்து நின்று விட்டார்.

அது ஒரு அழகான கன்னிகையின் உருவம். அரசகுமாரிக்குரிய ஆடை ஆபரணங்களைப் பூண்டிருந்தாள். ஒரு காலை மடக்கி, மண்டியிட்டு உட்கார்ந்திருந்த நிலையில் அவளுடைய அழகிய மென் கரத்தில் கல்லாலான உளி ஒன்றையும் கொடுத்திருந்தான் அற்புதச் சிற்பி.

அவர் பின்னால் வந்து நின்ற குசநாகன் அச் சிலையின் பின்னாலிருந்த குகை வாசலை மறைத்துக் கொண்டிருந்த சிறு புதர்களை மெதுவாகத் தன் கைகளால் விலக்கினான்.

"இந்தப் பெண் யார்? இந்தச் சிலை எப்படி இங்கே வந்தது?" என்று மிகுந்த வியப்புடன் கேட்டார் பிக்ஷு பா-ஹியன்.

"உலக அந்தகாரத்துள் உழன்று தவித்த ஆருயிர்களுக்கு, உய்வெய்தும் அருள் மார்க்கத்தைக் காட்டியருளிய புத்ததேவனின் பூர்வாசிரமத்தில், அவனுடைய கைத்தலம்பற்றிய அன்னை யசோதரையின் சிலை இது, சுவாமி!"

"அப்படியா! இது ஒரு கன்னிகையின் சிலையன்றோ! யசோதரையின் கன்னிக் கோலத்தைக் கல்லில் வடித்து, அவள் கையில் ஒரு கல்லுளியையும் சிற்பி கொடுத்திருப்பதன் காரணமென்ன?" என்றார் பிக்ஷு.

"அது பெரிய கதை, சுவாமி. அதைநான் உங்களுக்குச் சொல்லுவதற்கு முன்பு இப்படி வந்து இந்தக் குகையைப் பாருங்கள்! அதற்குப் பின்பு நாம் மடத்துக்குத் திரும்பிப் போகும் வழியில் அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றான் குசநாகன்.

பா-ஹியன் முன்னுக்கு வந்து குகைக்குள் எட்டிப் பார்த்தார்.

"சுவாமி! இவ்விடத்தில்தான் அன்னை யசோதரை அமரத் துயிலில் ஆழ்ந்திருக்கிறாள். வாருங்கள்; அந்தச் சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டே வருகிறேன்" என்று கிளம்பினான் அவன்.

மன்னன் சுத்தோதனனின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர் நாட்டின் முக்கிய மந்திரி மகாநாகன். அவருக்கும் அவர் மனைவி சசிமதிக்கும் எவ்வளவோ வருடங்கள் கழித்துப் பிறந்தவள் அழகியான யசோதரை. முதிர் பிராயத்தில் பிறந்த அம் மணி விளக்கைக் கடவுளின் கருணைப் பிரசாதமெனக் கருதிக் கண்ணே போல் பாதுகாத்தார் மகாநாகன். ஆகவே சீருக்கும் செல்வத்துக்கும் ஒரு குறையுமின்றி அழகு சிந்தும் பொற்கொடியாய் வளர்ந்தாள் யசோதரை. அதே சமயத்தில் அரண்மனையில் கபிலவஸ்துவின் குலக்கொழுந்தாய்ப் பிறந்த இளவரசன் சித்தார்த்தன், மக்களின் அன்பைக் கவரும் அழகனாக அன்னை கௌதமியால் வளர்த்து வரப்பட்டான். மகாநாகனின் மகளான பொற்பாவை, இளவரசனின் விளையாட்டுத் தோழியாய் அமைந்தது அதிசயமல்ல.

குழந்தை யசோதரைக்குப் பிடித்தமான விளையாட்டுக்களில் ஒன்று மண்ணால் பொம்மைகள் செய்வது. அவள் தன் சின்னஞ்சிறு கைகளால் கபிலைநதியின் கரையில் ஈரமான மண்ணை உருட்டி அழகழகான உருவங்களைப் பிடித்து வைத்து மகிழ்வாள். எல்லா விளையாட்டுக்களிலும் அவளுடன் பங்கு கொள்ளும் சித்தார்த்தன், இந்தப் பொம்மை விளையாட்டுக்கு வரமாட்டான். ஏனெனில் அவனுக்குப் பொம்மைகள் செய்ய வராது. என்ன முயன்றாலும் யசோதரை பிடித்து வைக்கும் உருவங்களைப் போல் அவனுக்குச் செய்ய இயலவில்லை.

எனவே, சித்தார்த்தன், ''யசோதரை! என்னால் முடியாது இந்தப் பணி!'' என்று பின்வாங்கி விட்டான்.

அவனுடைய தோல்வியில் பெருமையடைந்த யசோதரை அவனுடைய முகவாட்டத்தைக் கண்டு அந்த விளையாட்டை அதற்குமேல் தொடர மாட்டாள். ஆயினும் தனிமையில் விளையாடும் பொழுது அழகழகான மண் உருவங்களைச் சமைத்துப் பார்ப்பாள். வெகு சீக்கிரத்திலேயே அவற்றுக்கு நேர்த்தியாக வர்ணம் தீட்டவும் கற்றுக் கொண்டு விட்டாள்.

ஒரு நாள் காலை. கீழ்வானத்து விளிம்பில் பரிதி முளைத்தெழுந்து, இயற்கையை முழுதும் பொன் மயமாக்கும் வேளை.

யசோதரையைக் காணாத தாயார் சசிமதி, 'இந்த அதிகாலையிலேயே குழந்தை எங்கே போய் விட்டாள்?' என்று பரபரப்புடன் தேடிக் கொண்டு புறப்பட்டாள். அந்தப்புரத்தைச் சேர்ந்த படித் துறையில் படிய உட்கார்ந்து ஈரமண்ணை உருட்டிப்பொம்மை செய்து கொண்டிருந்தாள் குழந்தை யசோதரை.

அதைக் கண்ணுற்ற சசிமதிக்கு ஒரு புறம் ஆத்திரமும் இன்னொரு புறம் ஆனந்தமும் உண்டாயின. குழந்தையைக் கடிந்து கொள்ள வேண்டும் என்று வேகமாய்ப் படித்துறையை நோக்கி நடந்தாள்.

''யசோதரை!'' தாயாரின் கடிந்த குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''அம்மா! அம்மா! இதோ பார்த்தாயா? இந்த மரமும் பொம்மையும் நன்றாயில்லை?'' என்று குதூகலத்துடன், தான் செய்து கொண்டிருந்த உருவங்களின் மீது கவனத்தைத் திருப்பினாள். திரும்பிப் பார்த்த அன்னை அப்படியே வியப்பினால் தன் விழிகள் மலர, ஸ்தம்பித்து விட்டாள்.

மண்ணால் பூசப்பட்ட ஒரு சிறு திட்டு. அதன் மேல் இலைகளும் கனிகளுமாய்க் குலுங்கிய ஒரு சின்னஞ் சிறுமரம். அதன் இலைகளுக்கு இலேசான பச்சை வர்ணம் தீட்டியிருந்தாள் அச்சிறு குழந்தை. அம் மரத்தினடியில் கண்களை மூடி யோக நிஷ்டையில் அமர்ந்திருந்த ஒரு மகானின் உருவம். இதுதான் யசோதரை அவ்வளவு சிரத்தையாய்ச் செய்து கொண்டிருந்த பொம்மை.

''என்ன அம்மா! பேசாமல் நின்று விட்டாயே! பொம்மை அழகாயில்லையா?'' என்று கேட்டாள் யசோதரை.

''நன்றாயிருக்கிறது! அதனால்தான் அப்படியே நின்று விட்டேன். அது சரி; இது என்ன பொம்மை? மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் அந்த மனிதர் யார்?''

''மனிதரல்ல, அம்மா! அவர்தாம் கடவுள்!'' என்று தாயைத் திருத்தினாள் மகள்.

''கடவுளா? அதென்ன கூத்து? கடவுளைக் கண்ணால் காண முடியுமோ?''


''என்ன அம்மா? நீயே எவ்வளவோ தடவைகள் சொல்லியிருக்கிறாயே? நல்லவர்களுக்கு உதவி செய்வதற்காகக் கடவுளே பூமியில் மனிதனாகவும் மிருகமாகவும் பிறப்பாரென்று!''

சசிமதியின் வாய் அடைத்து விட்டது. நெருங்கி வந்து அந்த அழகான பொம்மையைக் கூர்ந்து பார்த்தாள்.

அவள் முகம் பயத்தினால் வெளுத்தது.

''ஐயையோ! என்னடி இது? இந்தப் பொம்மையின் முகம் இளவரசன் சித்தார்த்தனைப் போலவே இருக்கிறதே! யசோதரை! குழந்தாய்! இதை முதலில் நதியில் எடுத்துப் போடு. இந்த

உங்களுக்கு அதிக சக்தி அவசியம்



நீங்கள் சரீர தளர்ச்சியினால், சோர்வுற்று இருக்கிறீர்களா ?
நீங்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்களுக்கு க்ளூகோவிடா அவசியம். க்ளூகோவிடா உங்களுக்குச் சக்தியை ஊட்டுகிறது. க்ளூகோவிடாவில், ரத்தத்துடன் சீக்கிரமே கலந்துகொள்ளும், சர்க்கரை சேர்ந்துள்ளது. இதனால் க்ளூகோவிடா, உங்கள் தேகத்திற்கு அவசியமான சக்தியை உங்களுக்குத் தேவையான சமயத்தில் அளிக்கிறது. க்ளூகோவிடாவிலுள்ள விடமின்கள், உங்களை பலமுள்ளவர்களாக்கி, சுறுசுறுப்புடனும். ஆரோக்கியத்துடனும் இருக்கச்செய்கின்றன.



க்ளூகோவிடா

வெகு விரைவில்
சக்தியூட்டுகிறது

கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய்-1

ஏஜெண்டுகள்: பாரி அண்டு கம்பெனி லிமிடெட்



...பரிபூர்ணமாக நம்புவதற்க்கும்...
...கவர்ச்சிகரமான அமைப்புக்கும்...
... உட்பூச்சுக்கும், வெளிப்பூச்சுக்கும் ...
...நேர்த்தியான வர்ணவேலைகளுக்கும்...
... அதைப்பற்றி சந்தேகமே இல்லை அதுதான் ஷாலிமார் ஸுபர்லாக்... எல்லோரும் விரும்பும் நேர்த்தியான ஸிந்தடிக் எனமல்
SHALIMAR

மாதிரி யெல்லாம் பொம்மை செய்து விளையாடலாமா?'' என்றாள்.

''இல்லை, அம்மா! எவ்வளவு தரம் திருப்பித் திருப்பிப் பண்ணினாலும், அந்தப் பொம்மையின் முகம் வேறு மாதிரி வரவே மாட்டேனென்கிறது!''

''சரி, சரி! அரண்மனைக்கு வந்து நீராடி விட்டு உணவு சாப்பிடு. நன்றாயிருக்கிறது விளையாட்டு!'' என்று மகளைச் செல்லமாகக் கடிந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டு கிளம்பினாள். போகு முன்பு யசோதரை செய்து வைத்திருந்த பொம்மையைத் தூக்கி நதியில் எறிந்து விட்டாள்.

'வேண்டாம், அம்மா!' என்று தடுத்த குழந்தையின் கண்களில் நீர் துளித்தது. ஆனால் சிமெதி கேட்கவில்லை.

'நல்ல வேளையாக நான் முதலில் பார்த்தேனே!' என்று எண்ணிக் கொண்டாள் அவள். 'மகா மன்னனின் மகன் சித்தார்த்தனைப்போல் மண் உருவம் செய்து அதை மகரிஷியாக்கி, மரத்தடியிலும் உட்கார்த்தி வைத்தால் அதற்கு அரச தண்டனையல்லவா கிடைக்கும்? யார் செய்த புண்ணியமோ, வேறு யாரும் அதைப் பார்க்கவில்லை!' என்று திருப்திப்பட்டுக் கொண்டு மகளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

இது நடந்து சில வருடங்கள் சென்றன. யசோதரை வளர்ந்து விவாகப் பருவமடைந்தாள். ஆனால் இப்பொழுது மண்ணில் பொம்மை செய்து வர்ணம் கொடுக்கும் ஆர்வம் மாறி, கல்லில் அழகான உருவங்களைச் செதுக்கும் கலைக் காதலாக மாறியது. இந்தக் கலைக் காதலுக்கு உயிரூட்டி ஊக்கம் கொடுத்தார் மகா சிற்பியும் பழுத்த கிழவருமான பசவராஜர்.

கபிலவஸ்துவின் நடுவே அமிலமார்த் தாண்டனுக்கு ஆலயம் அமைப்பதற்காக உச்சயினி நகரிலிருந்து மிகுந்த சிரமத்தின் பேரில் அவரைத் தருவித்தான் சுத்தோதனன். ஆலயமும் அதற்கேற்ற அழகழகான சிற்பங்களும் அற்புதமாகத் தயாராகிக் கொண்டு வந்தன.

இந்நிலையில்தான் ஒரு தினம் கன்னி மாடத்திலிருந்த யசோதரை, தன் தந்தையுடனும் தோழிகளுடனும் அவற்றை யெல்லாம் காண வந்தாள். தன் ஆவலைச் சிற்பியிடம் தெரிவித்தாள் யசோதரை.

பெண்கள் சிற்பக் கலை கற்பதென்பது அது வரையில் கேட்டறியாத விஷயமாதலால் பசவராஜர் முதலில் யசோதரைக்கு அக்கலையைக் கற்பிக்கப் பிரியப்படவில்லை. ஆயினும் அவளுடைய எல்லையற்ற ஆர்வமும் மகாநாகனின் வற்புறுத்தலும் அவருடைய தீர்மானத்தை மாற்றிக் கொள்ளச் செய்தன. ஆகவே சீக்கிரமே ஒரு நல்ல நாளில் தொடங்கி யசோதரைக்கு அக்கலையை முறையாகக் கற்பிக்கலானார். கன்னி மாடத்துக்குப் பின்னாலிருந்த ஒரு பெரிய மண்டபத்தில் அவளுக்குத் தினந்தோறும் இரண்டு மணி நேரம் பாடம் நடக்கும். வெகு சீக்கிரமாகக் கற்றுத் தேர்ந்து வந்தாள் யசோதரை. அம் மண்டபம் முழுதும் வெகு சீக்கிரத்திலேயே, அவள் கையால் நிர்மாணிக்கப்பட்ட அழகழகான சிற்பங்கள் நிறைந்து விட்டன.

ஆலய வேலையும் முடிந்து கும்பாபிஷேகம் நடந்தது. இதைத் தொடர்ந்து சித்தார்த்தன்—யசோதரையின் திருமணமும் நடந்தது. யசோதரையைப்போல் ஒரு அழகான சிற்பத்தைக் கல்லில் வடித்து, அவள் சிற்பம் செதுக்கும் பாவனையில் அதை உருவகப்படுத்தி அதன் கையில் ஒரு சிறு உளியையும் கொடுத்த பசவராஜர், தாம் உச்சயினி செல்லும் முன்பு அதை அவளுக்குப் பரிசாக அளித்துச் சென்றார்.

தன் குருவின் அன்பளிப்பை ஆனந்தத்துடன் பெற்றுத் தன் மதிப்புக்கு அடையாளமாக, அந்தப்புரத்தின் வாசலிலேயே அதை அலங்காரமாக வைத்தாள் யசோதரை.

ஒரு தினம் சித்தார்த்தன் தன் அன்பு மனைவியை நோக்கிச் சிரித்தபடியே கேட்டான்: ''யசோதரை! அந்தச் சிலையை அங்கு ஏன் வைத்திருக்கிறாய்? கபிலவஸ்துவின் ராணியாகப் போகும் நீ, கையில் உளி பிடித்த கோலத்தில், அந்தப்புர வாசலில் சிலையாக அமரலாமா?'' என்று.



ஜோஸ்யர்:- நல்ல ஜாதகம். தர்ம சிந்தனை உள்ளவர் நீங்கள். தினமும் நிறையப் பேருக்கு நீங்கள் அன்னம் போடுவீர்கள்.

வந்தவர்:— ரொம்ப 'கரெக்ட்' தினமும் போடுவேன். ஆனால் ஞாயிற்றுக் கிழமை மட்டும் போடுவதில்லை. அன்றைக்கு ஹோட்டல் விடுமுறை. நான் ஒரு ஹோட்டல் சர்வர்!

''பிரபு! பல வருஷங்கள் முன்னுலேயே நான் மண்பொம்மைகள் செய்து விளையாடியது உங்களுக்குத் தெரியுமே! அப்பொழுது நான் செய்த மகரிஷியின் பொம்மையொன்று என் மனத்தைக் கவர்ந்தது. தழைத்த விருக்ஷமொன்றையும், அதனடியில் அமர்ந்திருந்த துறவியொருவரையும் அடிக்கடி கனவில்கண்டு அதைப் போலவே செய்தேன் அந்தப் பொம்மையை. ஆனால் அந்தப் பொம்மையின் முகம் உங்களுடைய முகத்தைப் போலவே இருந்ததால் அரச தண்டனை கிடைக்குமென்று அஞ்சி அன்னை அதை நதியில் எறிந்து விட்டாள். அதற்குப் பிறகு நான் மண்ணில் பொம்மைகளை உருவாக்குவதை விட்டு விட்டேன். ஆனால் உள்ளேயே வேரோடிக் கொண்டிருந்த அந்த ஆசையானது, அகில மார்த்தாண்டன் ஆலயத்துக்காகச் சிற்பி பசவராஜர் செய்த சிற்பங்களைக் கண்ட பொழுது மீண்டும் தலைதூக்கியது. மண்ணில் பொம்மைகள் உருவாக்குவதை விட்டுக் கல்லில் உருவாக்கக் கற்றுக் கொண்டேன். அதன் விளைவுதான் என் குரு எனக்கு அளித்த இந்தப் பரிசு. இது இங்கே இருப்பதைத் தாங்கள் விரும்பாவிடில் வேறு எங்காகிலும் கொண்டு போய் வைத்து விடுகிறேன்!''

அவளை அதிசயத்துடன் நோக்கினான் இளவரசன். பிறகு தன் இள மனைவியை ஆவலுடன் நோக்கியபடியே, ''யசோதரை! அந்தச் சிலை இங்கேயே இருக்கட்டும்!'' என்றான். கட்டழகி மகிழ்ச்சியுடன் தலை குனிந்தாள்.

வருடங்கள் ஓடிச் சென்றன. செல்வன் ராகுலன் பிறந்த இரண்டாவது ஆண்டில் ஒரு தினம் நள்ளிரவு கண்மணி போன்ற மகனையும், காதல் மனைவியாகிய யசோதரையையும் அரண்மனை வாழ்வையும் அரச போகங்களையும் துறந்து, மாநிலத்தில் மக்களை வாட்டும் துயரங்களுக்கு ஒரு மருந்து தேடி, இரவும் பகலும் தன் மனத்தை வாட்டும் எண்ணிறந்த கேள்விகளுக்கு ஒரு விடை காண, ஞான ஒளியை வேண்டி, வெளிப் போந்து விட்டான் சித்தார்த்தன்.

எத்தனையோ வருடங்களுக்குப் பின் கயையில், மகாபோதியின் அடியில் யாருக்கும் கிட்டாத அவ்வொளியையும் கண்டான். தானறிந்த ஞான மார்க்கத்தை மக்களிடையே பரப்ப வேண்டி எங்கும் கால்நடையாகச் சென்றான். உடன் சென்றனர் ஆர்வம் மிக்க அவனுடைய சீடர்கள் அனைவரும்.

கபிலவஸ்துவை யடைந்து தனியாகவே அரண்மனையை நோக்கி வந்த போதிநாதனை, கவிந்து வரும் அவ்விருளில் யாரும் காணவில்லை. அரண்மனைக்குப் பின்னுலிருந்த மண்டபத்தில் சிற்றுளியின் சத்தம் 'டக்டக்'கென்று கேட்டது. உள்ளே நுழைந்தான் அருள் வடிவமான புத்தன்.

அவன் விழிகள் வியப்பினால் மலர்ந்தன. ஏனெனில், புத்தகயாவில் போதி விருட்சத்தினடியில் அவன் ஞான மார்க்கம் கண்ட நிலையைத் தன் கண்களால் காணுமலே, கற்களில் தத்ரூபமாகச் சமைத்திருந்தாள் அன்னை யசோதரை.

தீபத்தின் ஒளி அவளுடைய மூப்படைந்த உருவத்தில் விழுந்தது. ''யசோதரை! இவ்விரவில் கூட இப் பணியா?'' என்று கேட்டான்.

''சுவாமி!'' என்று அவன் பாதத்தில் வணங்கின யசோதரை தழுதழுத்த குரலில் பேசினுள்: ''தாங்கள்தானு?—பச்சிளம் பருவத்தில் பல முறையும் கனவில் கண்டது நனவாகி விட்டது! அதை மீண்டும் மீண்டும் சிலையில் வடித்துப் பார்ப்பதில் ஒரு அமைதியைக் காண்கிறேன், சுவாமி!'' என்று உளியைக் கையிலெடுத்துக் கொண்டாள். மீண்டும் சிற்றுளியின் ஓசை அங்கு எதிரொலிக்கலாயிற்று. கருணையுடன் அவளை நோக்கிய ஞானதேவன் அப்படியே திரும்பினான்.

பல வருஷங்களுக்குப் பின் அன்னை யசோதரை அமரத்வம் எய்தினபொழுது அவளை அடக்கம் செய்யப்பட்ட சமாதிக் குகையின் வாசலிலே, சிற்பி பசவராஜர் பரிசாக அளித்த கன்னிச் சிலையைக் கொண்டு வந்து வைத்தான் மகன் ராகுலன். அதுதான் கையில் சிற்றுளி ஏந்தி யிருக்கும் இவ்வழகிய உருவம். ஆனால் அவள் செய்த போதிநாதனின் எண்ணற்ற உருவங்களை யெல்லாம் பல காலத்துக்குப் பின், கபிலை நதி பொங்கி வந்து தன்னுள் அடக்கிக் கொண்டு விட்டதாம். அதனால்தான் அவற்றில் ஒன்று கூடக் கிடைக்கவில்லை'' என்று முடித்தான் வழிகாட்டியாகிய குசநாகன்.

''அன்னை கண்ட கனவு மாந்தரின் நினைவில் அழியாத நனவாகி விட்டது. போதிநாதா! உன் அருளே அருள்!'' என்று வியந்தபடியே எழுந்தார் பிக்ஷு.

எங்கோ சிற்றுளியின் 'டங்டங்' என்ற ஓசை கேட்பதுபோன்ற பிரமை அவருள் எழுந்தது. நாற்புறமும் பார்த்தார். பால் நிலவின் பட்டொளியில் தூரத்தே தெரிந்த கன்னிச் சிலையும், அவள் கரத்திலேந்தியிருந்த சிற்றுளியும் பளிச்சென்று தெரிந்தன. கரம் கூப்பி வணங்கி விட்டு, மூட்டையைத் தூக்கிக் கொண்ட பாஹியன் வழிகாட்டியுடன் நடக்கலானார்.



நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
GOKUL
SANDAL
TOILET POWDER
GOKUL
SANTOL
TOILET POWDER
ஸாண்டல்வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது...
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர்....
டி. எஸ். ஆர் & கோ
கும்பகோணம்



மாலையிட்ட மங்கை

ஆக்ராவில் என்ன விசேஷம் என்று கேட்டால், உலகம் புகழும் தாஜ்மஹால் என்று சிறு குழந்தை கூடக் கூறும். உண்மையிலேயே, ஆக்ராவில் தாஜ்மஹாலைத் தவிர, கடும் வெய்யிலையும், மூச்சை அடைக்கும் புழுதியையும் தான் விசேஷமாகக் கூற வேண்டும்.

அதேபோல, காசியில் என்ன விசேஷம் என்றால், புனிதம் மிகுந்த கங்கை நதிதான் என்று யாரும் கூறுவார்கள். மற்றப்படி, சந்து சதுக்கங்களும், சுகாதாரப் பழக்க வழக்கங்களையே அறியாத மக்களும்தான் அங்கே விசேஷம் எனக் கூற வேண்டும்.

''மாலையிட்ட மங்கை'' படத்தில் கதை விசேஷமாகக் கிடையாது. ராஜ் கமல் கலா மந்திரின் தயாரிப்பான ''தீன் பத்தி சார் ராஸ்தா'' என்னும் ஹிந்திப் படத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது இப்படம். இந்தப் படத்தில் என்ன விசேஷம் என்று கேட்டால், திரைக் கதையைப் பற்றி விசேஷமாகச் சொல்லுவதற்கு யாருக்குமே தோன்றாது. கதையைப் பற்றி நாம் கவலைப் படாமல் இருப்பதற்குக் கண்ணதாசன் இயற்றியிருக்கும் பாடல்கள் பெரிதும் உதவி செய்கின்றன. ஆரம்பத்திலேயே இனிமையான பாடல்கள் காதில் விழுகின்றமையினால் கதையைப் பற்றிய நினைவு மறந்துதான் போகிறது.

''செந்தமிழ்த் தேன்மொழியாள்-நிலாவெனச்
சிரிக்கும் மலர்க் கொடியாள்
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிடத் தலை குனிவாள்...''

இந்த இனிமையான பாட்டை டி. ஆர். மகாலிங்கத்தின் குரலிலும், பின்னணிப் பாடகி ஜமுனா ராணியின் குரலிலும் கேட்கும் போது மனத்துக் கிசைந்த மணவாளனுக்கு மாலையிட்ட மங்கையின் உள்ளம்போல் நம் உள்ளமும் கிறங்குகிறது.

இந்த ஒரு பாட்டுத்தான் இப்படி இருக்கிறது என்று கூறமுடியாது. இன்னும்,

'' அன்னம்போலே பெண்ணிருக்கு
ஆசைகொண்ட மனமிருக்கு
அவளைமட்டும் ஏனோஇன்னும் காணேன்
—நான்
பாட்டுப் பாடக் குயிலிருக்கு
பார்த்துப் பேசக் கிளியிருக்கு
வார்த்தையின்றி மயங்குகிறேன் வீணே''

என்ற பாட்டும் இனிமை சொட்டுகிறது. மற்றப் பாடல்களும் கூட இனிமையாய்த் தான் இருக்கின்றன. கண்ணதாசன் பிலிம்ஸ் தயாரித்திருக்கும் ''மாலையிட்ட மங்கை'' என்ற படத்தில் வரும் பாடல்கள்தான் இவை.

காந்தன்

டி. ஆர். மகாலிங்கம் : லண்டனுக்குப் போய்ப் படித்துவிட்டு வந்த சந்திரனாக (கதாநாயகன்) வருகிறார். தாய் தந்தையற்ற சந்திரனுக்கு, அவன் மாமாவின் பெண் கமலத்தின் காதல் வலியக் கிடைக்கிறது. மாமாவும் மாமியும் கமலத்தை மணந்துகொள்ளும்படி வற்புறுத்துகின்றனர். ஆனால் சந்திரன் கமலத்தைக் காதலிக்கவில்லை. டி. ஆர். மகாலிங்கம் வெகு காலத்துக்குப் பின்னர் தமிழ்ப் படத்தில் தலைகாட்டுகிறார். வழக்கம்போல் இந்தப் படத்தில் இரண்டொரு பாட்டுக்களில் தம்முடைய சொந்தக் குரலையும் காட்டியிருக்கிறார். அவ்வளவுதான். (அவரே அவ்வளவாகப் பொருட்படுத்தாத நடிப்பைப் பற்றி நாமும் பொருட்படுத்தாமல் இருந்து விடுவதுதான் நாகரிகமாகும்!)

அநாதைப் பெண் சரஸ்வதியைக் கண்டதும் அவளிடம் காதல் கொண்டு உடனே அவளை மணம் முடித்துக் கொண்டு தம் ஊருக்குத் திரும்பியபோதும், அவள்மீது மாசு கற்பிக்கப்பட்டதும், அவளை வீட்டை விட்டுத் துரத்தியபோதும் கூட அவர் சாதாரணமாகவே நடித்திருக்கிறார்.

பண்டரிபாய் : சரச உள்ளம் படைத்த பிரபுவான வேதநாயகத்தின் ஆதரவில் வளர்ந்து சந்திரனின் காதலுக்குப் பாத்திரமான சரஸ்வதியின் பாகத்தை ஏற்று மிகவும் நன்றாய் நடிக்கிறார்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, கணவனைப் பிரிந்து, பிறகு அவனுடன் சேர்ந்து இப்படியெல்லாம் பல படங்களில்

பரிதவித்துப் புழுங்குபவர் பண்டரி பாய். ஆகவே, இந்தப் பாத்திரத்தை ஏற்று அவர் நன்கு நடித்திருக்கிறார் என்பதில் அதிசயம் எதுவும் இல்லை.

காதல் மணம் முடித்து களி குஷியுடன் சந்திரனும் அவனும், மாமா வீட்டுக்கு வந்த போது சரசுவுக்கும் அவனுக்கும் எதிர்ப்பும் எரிச்சலுமே வரவேற்புக் கூறுகின்றன. கமலம் சரசுவைக் கண்களாலேயே எரிக்கப் பார்க்கிறாள். தன் வாழ்வைத் தியாகம் செய்து கொண்டு அவனை வாழ வைப்பதாகச் சரசு உறுதி கூறும்போது, பண்டரிபாயின் நடிப்பு மிகவும் நன்றாயிருக்கிறது. கண்ணீர்ப் பெருக்கும், உருக்கமான பேச்சும் அவரது நடிப்புக்கு மெருகிடுகின்றன.

மைனாவதி: ஒருதலைக் காதலினால் உள்ளம் கலங்கிய கமலமாக வருகிறார். வழக்கமான இவரது துள்ளல் நடையும் அள்ளும் பார்வையும் இவரைக் கைவிட்டு விடவில்லை. தன்னை வெறுத்து ஒதுக்கி விட்டுப் போன சந்திரனை நினைந்து கனிவும் கசிவும் கொண்ட உள்ளத்துடன் கண்ணீர் பெருகி மறைக்க, அவன் வெளியேறுவதை மாடியிலிருந்து பார்க்கிறாள். அவளது கண்ணீர்த் துளி அவன் கைகளில் தெறிக்கிறது.

மைனாவதியின் நடிப்பு இந்தச் சந்தர்ப்பத்தில் நம் மனத்தை நெகிழ வைக்கிறது. சரசுவின் தியாகத்தில் உள்ளம் மாறியபோதும் மைனாவதியின் நடிப்பு மனத்தில் பதிகிறது.





சினிமாவுக்கேற்ற நல்ல முகவெட்டுள்ள நடிகை மைனாவதி. புது மலரில் பொங்கும் எழிலை அவரிடம் காணலாம். இது வரையில் பல படங்களில் நடித்திருக்கும் அவர் அசட்டுப் பெண்ணாக வந்து வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால் "மாலையிட்ட மங்கை"யில் அவர் வடித்திருக்கும் பிரிவாற்றாமைக் கண்ணீர் எல்லோருடைய உள்ளங்களையும் உருகச்செய்து அவருக்கு நல்ல புகழைத் தேடித் தந்து விட்டது. பண்டரி பாய், மைனாவதி இருவரும் இதில் வெற்றி பெற்றிருப்பது விசேஷம்தான்.

'செந் தமிழ்த் தேன்மொழியாள்' என்ற பல்லவியில் ஆரம்பமாகி,

"காட்டினில் எரிக்கும் நிலவாளுள்–பெருங்
கடலினில் பெய்த மழையாளுள்
ஏட்டினில் எழுதாக் கவிதையைப் போலே
இல்லாத பொருள்போல் தனியாளுள்
–அவன்"

என்று முடிகின்ற பாட்டு அந்தச் சந்தர்ப்பத்துக்கு அருமையாக அமைந்திருக்கிறது.

மனைவியின் மீது மாசு கற்பிக்கப்பட்டு வீட்டிலிருந்து அகற்றப்படுவது, கடைசியில் அவளை கணவனுக்கு ரத்த தானம் கொடுப்பது, பிறகு முதலில் காதலித்தவனின் கரத்தைக் கணவனின் கரத்துடன் பிணைத்து வைத்துவிட்டு மனைவி உயிர் துறப்பது, இவையெல்லாம் பல முறையும் பார்த்து அலுத்துப் போன கதைப் பகுதிகள்.

மேற்படி பகுதிகள் 'மாலையிட்ட மங்கை'யிலும் வருகின்றன என்பதைத் தவிர அவற்றில் வேறு புதுமை இல்லை.

இந்தப் படத்தின் இசை அமைப்பை விசு. நாதன், ராமமூர்த்தி இருவரும் கவனித்திருக்கின்றனர். "மாலையிட்ட மங்கை"யில் வரும் பதினேழு பாடல்களும் அவர்களின் திறமையைப் பாடுகின்றன.

ஸ்ரீ ஜி. ஆர். நாதன் இந்தப் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார். அவர் விசேஷத் திறமை படத்தில் எங்கும் காணப்படவில்லை.

முக்கியமான நிகழ்ச்சி ஒன்றைக் கூற வேண்டும். பாரி மகளாக வந்து, நடனம் ஆடிய கமலா லக்ஷ்மண் பாராட்டுக்கு உரியவர். முதலில் கணவனைப் போருக்கு அனுப்பியபோது அவர் ஆடிய இன்ப நடனமும், கணவன், மகன் ஆகியவர்களின் மறைவுக்குப் பிறகு அவர் ஆடிய இறுதி நடனமும் பிரமாதமாக அமைந்து விட்டன.

கண்ணதாசன் இயற்றியிருக்கும் இனிய பாடல்களுக்காகவும், கமலா லக்ஷ்மண் ஆடியிருக்கும் உணர்ச்சிபொங்கும் நடனத்துக்காகவும் இந்தப் படத்தைப் பார்க்கலாம்.


சௌகரியமும்
திறமையும்
தருமாறு அமைக்
கப்பட்டுள்ளது.
பிரபாத்
பிராடக்ஸ்
" இந்தியாவில் முதன்மை
யானவை, இன்றும்
முதல்தரமானவை. "

'மலர்'ப் பத்திரிகையின் ஆசிரியர் "விரக்தி" என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்த இரு சிறுகதைகளையும் வைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். ஒன்றின் சிருஷ்டி கர்த்தா ஆண்; மற்றொன்றை உருவாக்கியிருந்தவர் பெண். ஒரே தலைப்பில் இரு கதைகள்; அதிலும் சம்பவங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த உள்ளத்து உணர்ச்சிகளெல்லாம் ஒரே மாதிரியாக இருந்ததால் ஆசிரியரை வியப்பில் ஆழ்த்தியது. கதையின் சுருக்கம் இதுதான் :

"உணவு விடுதி ஒன்றில் வயிற்றுக்கு உணவளிக்க வந்த வாலிபருக்கு அங்கு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக ஒரு பெண்ணும் இருந்தாள். காலம் அவர்களின் உள்ளங்களை நெருங்கி உறவாடச் செய்தது. பெண்ணைப் பெற்றவர்களும் கண்ணைப் போன்ற ஒரே பெண்ணின் எண்ணத்துக்கு ஆதரவு தந்தனர். பொங்கிச் சுழித்துச் செல்லும் புத்தாற்று நீர் போல் அவர்களது காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் விதி பெண்ணின் தாய் மாமனின் வருகையால் தாயின் மனத்தில் சலனத்தை ஏற்படுத்தி, அவர்களின் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது! வலையினில் வீழ்ந்த மான்போல், தணலில் வீழ்ந்த புழுவினைப் போல் துடித்தன இரு உள்ளங்கள். பிரிவின் வேதனை அவர்களை நடைப்பிணமாக்கியது. விரக்தி நிறைந்த வாழ்வு நடத்துகின்றனர் அவர்கள் எங்கேயோ!"

ஆசிரியரின் ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்தது உதவி ஆசிரியரின் குரல்.

"என்ன சார்! பலமான யோசனை? அதுவும் கையில் கதைகளுடன். கதைகளைத் தொட்டதும் நீங்களும் கற்பனை உலகில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விட்டீர்களா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒரே தலைப்பில் இரு கதைகள்......"

"இதில் ஆச்சர்யப்படுவதற்கு என்ன இருக்கிறது?"

"ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமில்லை தான். ஆனால் ஆராய்ச்சிக்கு இடம் இருக்கிறது."

"ஆராய்ச்சியா?"

"ஆமாம்! இதில் அடங்கியுள்ள சம்பவங்கள், ஆசிரியர்களினால் படைக்கப்



பட்டுள்ள கதா பாத்திரங்களின் மன உணர்ச்சிகள் ஆகியவை ஒன்றுபோ லிருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண் டைப் படிக்கிறேன், கேளுங்கள்.

'' 'மரணம் தரும் வேதனையைக் காட் டிலும் காதலினால் ஏற்படும் பிரிவு மிக மிகக் கொடிது.' இதை எழுதியது ஆண் கதாசிரியர்.

''அதே கட்டத்தில் 'உலகில் வேதனை களைத் தாங்கும் சக்தி பெண்களுக்குத் தான் அதிகம். ஆனால் நான் உளமாரக் காதலித்தவரைப் பிரிந்து விடுவதால் ஏற்படும் வேதனையை மட்டும் தாங்க முடியாது' என்று கதாசிரியையின் பாத்திரம் கூறுகிறது.

'' ஆடவர்கள் பல மலர்களை நாடும் வண்டு மனம் படைத்தவர்கள். உடை களை மாற்றுவது போல் அடிக்கடி உள் ளத்தையும் மாற்றிக் கொள்வார்கள் என்று கூறி மொத்தத்தில் எல்லா ஆட வர்களையும் பழித்துவிட முடியாது. மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு உள் ளத்து உணர்ச்சிகளை அறியும் மனிதன் சலன புத்தி உள்ளவனாக இருக்க மாட்டான்......''

''இவை போன்ற பலப்பல கருத் துக்கள் ஒத்தாற்போல இருக்கின்றன. எனவே எனக்கு ஒரு சந்தேகம்.''

''சந்தேகமா?''

''ஆம்! இருவரின் கதைகளையும் படிக் கும்போது அவை கற்பனையால் மட்டும் எழுந்தவையாகத் தோன்றவில்லை. அவர்களது சொந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பாக ஏன் இருக்கக்கூடாது?''

''வேடிக்கைதான்!''

''அது மட்டுமல்ல; அந்த விரக்தி யடைந்த காதலர்கள் இந்த இருவரும் தான் என்பது என் முடிவு!''

''விநோதமான முடிவு.''

''இல்லை, விவேகமான முடிவு. ஒன்று பட்ட இரு உள்ளங்களில்தான் ஒருமித்த கருத்துக்கள் தோன்றும். அதையும் கண்டு பிடித்து விடுகிறேன். இருவருக் கும் வருகிற வெள்ளியன்று ஒருவரை ஐந்து மணிக்கும் மற்றவரை ஐந்தரை மணிக்கும் என்னைப் பங்களாவில் சந்திக் கும்படி எழுதுங்கள்'' என்று கூறிவிட்டு ஆசிரியர் வெளியே சென்று விட்டார்.

ஆசிரியரின் பேச்சும் செய்கையும் உதவி ஆசிரியருக்குச் சிறிதும் விளங்க வில்லை. பதில் பேசாமல் தமது கடமை யைச் செய்யச் சென்று விட்டார்.

''நளினி!'' என்று அழைத்தவாறு உள்ளே நுழைந்தார் ஆசிரியர்.

''என்னங்க?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அவர் மனைவி.



''இன்றைக்கு இரவு சாப் பாடு மிகவும் அமர்க்களமாக இருக்க வேண்டும்.''

''யாருக்குக் கல்யாணம்?''

''உனக்கும் எனக்கும் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.''

''பின் வேறு யாருக்கு?''

''ஒரு ஆணுக்கும் பெண் ணுக்கும்!''

'' பிரமாதமான பதில்! கற்பனைக் காதலர்களா?''

''இல்லை. கற்பனையை உரு வாக்கிய காதலர்கள்.''

''உங்கள் தொடர்கதை களைப் போல் ஒரே புூடகமா கப் பேசுகிறீர்களே! சற்றுப் புரியும்படிதான் சொல்லுங் களேன்'' என்றாள் நளினி.

''முதலில் விருந்துக்கு ஏற் பாடு செய். பிறகு நடக்கப் போவதை நீயும்தான் பார்க் கப் போகிறாய்! அப்படியே வேலைக்காரனிடம் இரண்டு பெரிய ரோஜா மாலைகள் வாங்கி வரச் சொல். நான் நான்கு மணிக்கு வந்துவிடு கிறேன்'' என்று மனைவியிடம் கூறிவிட்டு வெளியே சென்று விட்டார் ஆசிரியர்.

கணவனின் புதுமையான பேச்சும் செய்கையும் அவளுக்கு விளங்கவில்லை. புரியாப் புதிருடன் உள்ளே சென்றாள்.

''வணக்கம்!'' என்ற இனிய குரல் கேட்டு நிமிர்ந்த ஆசிரியர் தம் எதிரில் இருபது வயதுப் பெண் நிற்கக் கண்டார்.

"நீங்கள்...?"

"நான்தான் அந்தச் சிறுகதையை எழுதிய 'ராஜாமணி'. என் தாயார் வைத்த பெயர் ராஜேசுவரி."

முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்மணியை எதிர்பார்த்த ஆசிரியருக்கு இருபது வயது இளம் பெண்ணாக இருப்பதைக் கண்டு திகைப்பு ஏற்பட்டது. சிறிது நேர சம்பாஷணையில் அந்தப் பெண்ணின் வரலாற்றைத் தெரிந்து கொண்ட ஆசிரியர் தம் மனைவியுடன் உள்ளே அனுப்பி வைத்தார்.

மணி ஐந்தரை.

"வணக்கம்." ஆசிரியர் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தார்.

"உங்களுடைய கடிதம் கிடைத்தது. நான்தான் 'மயன்' என்ற புனை பெயருக்குப் பின்னால் ஒளிந்திருப்பவன்" என்று கூறி நின்ற வாலிபரை ஒருமுறை நோட்டம் பார்த்தார் ஆசிரியர். இருவரும் அமர்ந்து பேசலாயினர்.

"நீங்கள் எழுதிய இந்தக் கதை வெறும் கற்பனையா? அல்லது...?"

"என் வாழ்வில் ஏற்பட்ட சம்பவத்தைக் கதை உருவில் வடித்தேன். வறட்டுக் கற்பனையை விட மனிதனின் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே கதையாக்குவதை நான் விரும்புகிறேன். அதில் ஏதாவது..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுடையதைப் போலவே வேறொரு கதையும் பிரசுரத்துக்கு வந்திருக்கிறது. அதில் வரும் நிகழ்ச்சிகள், எழுதியவரின் கருத்துக்கள் எல்லாமே ஒரே மாதிரி இருக்கின்றன."

"அப்படியா?"

"ஆம்! அதைப் படித்தபோது எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது."

"என் கற்பனையைப் பற்றியா?"

"இல்லை! இல்லை! உங்கள் இருவரையும் பற்றித்தான்."

"எங்களைப் பற்றியா? சார்! அந்தக் கதையை எழுதியவர் யாரென்பதே எனக்குத் தெரியாது."

"நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் இருவரின் கதைகளையும் படித்துப் பார்த்ததில் அந்தக் கதைகளில் வரும் பாத்திரங்கள் நீங்கள் இருவருமேதான் என்பது என் அனுமானம்."

"வேடிக்கையான அனுமானம்!"

"வேடிக்கையல்ல, நண்பரே! அதை எழுதியவர் ஒரு இளம் பெண்."

"பெண்ணா?"

"ஆம்! இங்கேயே இருங்கள்" என்று கூறி உள்ளே சென்றுவிட்டார் ஆசிரியர். ஆசிரியரின் வார்த்தைகள் அந்த வாலிபரின் உள்ளத்திலே புதுப் புது எண்ணங்களைத் தூண்டி விட்டன. கண்ணை மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

"நமஸ்காரம்!" என்ற இனிய குரல் கேட்டு நிமிர்ந்தார் வாலிபர்.

"ராஜா!"

"அத்தான்!"

"நீயா...அந்தக்...கதை..."

"நானேதான் அத்தான்!" இத்தனை நாட்கள் உள்ளத்தின் அடித்தளத்திலேயே அமுங்கிக் கிடந்த உணர்ச்சி பீறிட்டு எழுந்தது.

ஜன்னலின் வழியாக இந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்த ஆசிரியத் தம்பதிகளின் கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

"அத்தான்! என் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டு விட்டது. விரக்தியில் உழன்று கொண்டிருந்த என் வாழ்க்கைவானில் விடிவெள்ளி தோன்றி விட்டது. இத்தனை நாட்களாக நான் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனைக்கு ஓர் முடிவு ஏற்பட்டு விட்டது."

"ஆம், ராஜா! உன்னைப் பிரிந்த நாள் முதல் விரக்தியின் காரணமாக நடைப்பிணமாக வாழ்ந்து வந்தேன். அந்த விரக்தியான வாழ்வு...."

"இன்றோடு முடிந்துவிட்டது. இது ஆசிரியரின் தீர்ப்பு" என்ற குரல்கேட்டு இருவரும் திடுக்கிட்டு விலகி நின்றனர். ஆசிரியரும் அவருடைய மனைவியும் சிரித்துக் கொண்டே மலர்மாலையுடன் அவர்களிடம் வந்தனர்.

"ஆசிரியரின் தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டியது எழுத்தாளர்களின் கடமை யாகும்!" என்று ஏக காலத்தில் கூறிக் கொண்டு மாலையும் கழுத்துமாக வணங்கிய இருவரையும் உளமார வாழ்த்தினர் ஆசிரியத் தம்பதிகள்.

சிபார்சு யுகம்



சேர்மன் சிபார்சு இருந்தா தான் அவர் சிபார்சு பண்ண முடியும்னு கௌன்ஸிலர் சொல்லிட்டாருங்க!
இந்த சேர்மன் சிபார்சு வேணும்னு 'அட்லீஸ்ட்' ஒரு ... இருந்தா தான் முடியும்!
எட்டுப் பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி இருக்கிறதாகச் சொல்றீரே... அந்த மாப்பிள்ளைகளிடமிருந்து நீர் செய்திருக்கிறீர், சொத்து ... கல்யாணத்தை முடிச்சிடலாம்!
உங்க சிபார்சுனால பையனுக்கு காலேஜ்ல 'அட்மிஷன்' கிடைச்சுதுங்க!
என்ன மறுபடியும் வந்து நிக்கிறே?
உங்க புண்ணியத்தால வேலைக்கு பையனைச் சேர்த்துட்டேனுங்க.. சரி..சரி. புறப்படும் வாங்க... பணம்...
...ஆஸ்பத்திரில பெட் கிடைக்கணும். அதுக்கு உங்க சிபார்சு இருந்தா தான் முடியுமாம்!
அதுக்கென்ன நாய்னு. செத்துட்டாப்புல யாருது! இப்போ ஒக்காந்துகிறது இது. சோறு தண்ணியில்லாம வந்து சேருது குடிக்கச் சொல்றேன்! சொன்னா பயப்படாதீங்க ஒக்கார் நாய்னு!
யாரச்சும் ஒருத்தன் தேவைன்னு சொன்னீங்களே. இந்த வேலையால நல்ல அனுபவம் உள்ள ஆளாய் கொண்டாந்திருக்கேன். அவனைத் தான் ஒரு ... உள்ளே ... பாத்துக்குவேன்!

ரேடியோ ஸிலோன் :—41·73 மீட்டரில் "இசை விருந்து"
வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை

அத்தியாயம் 29

இருதயம் நின்றது!

மாமா ராமலிங்கமும் மாமி பொன்னம்மாளும் கல்யாணத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், திருமணத்துக்கு நல்ல நாள் பார்க்கிறார்கள் என்று அறிந்தபோது விமலா அடைந்த குதூகலத்துக்கு அளவே கிடையாது. ஆனால் அதே சமயத்தில் அன்று இரவு நர்ஸிங் ஹோமில் அவள் கண்ட காட்சியால் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த குமுறல் இன்னும் அடங்கவேயில்லை. இன்பமும் துன்பமும் ஒன்று கலந்து ஒரே சமயத்தில் அவளைக் குடைந்தெடுத்தன.

'என்னைக் கல்யாணம்செய்து கொள்வதில் ஆட்சேபனையில்லையே?' என்று நடராஜன் கேட்டபோது அகமும் முகமும் மலரத் தனது பரிபூரண சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று தான் இன்பத்தின் சாயல் எண்ணியது.



பொங்கிவரும் பெருநிலவு

கி. ராஜேந்திரன்

ஆனால் 'என்னை யார் கேட்கிறார்கள்? என் சம்மதத்தைப் பற்றி யாருக்கு அக்கறை?' என்று வெறுப்புடன் பேசியது துன்பத்தின் சாயல். குழம்பிய நிலையில் ஏதேதோ சொல்லி விட்டு, பின்னர் அதற்காக வருந்தினாள். தான் உளறுவதாக அத்தானிடமே ஒப்புக் கொண்டாள்.

ஒரு வழியாகத் தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்ட பிறகும் அன்று அவள் கண்டது மனத்திலிருந்து அகலவேயில்லை. அந்தக் காட்சிப் படம், கனமான கம்பி ஆணிகளால் அவள் மனத்தில் அடித்துப் பொருத்தப் பட்டிருந்தது. அந்த இடம் 'விண் விண்' என்று தெறித்து வேதனையை அளித்தது.

அந்த ஆணிகளைப் பிடுங்கி எறிந்து படத்தை நாசமாக்கி அந்த ரணத்தையும் ஆறச் செய்யும் சக்தி டாக்டராகிய நடராஜனாலும் முடியாது என்பதை அவள் உணர்ந்திருந்தாள். உடல் புண்ணை அவன் ஆற்றி விடுவான். ஆனால்

இந்த மனப் புண்ணை அவன் பரிசோதிக்க ஆரம்பித்தால், அவனுக்குக் கோபம் தான் பெருகும். மருந்து வைத்துக் கட்டுவதற்குப் பதில் சுடுசொல்லால் அந்த ஆணிகளை மேலும் பலமாக அடித்துத் துன்புறுத்துவான்.

தன் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாக வாக்களித்திருந்த மணியிடம் தன் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த ரணத்தைத் திறந்து காட்டினாள் விமலா. நடராஜனிடம் அவள் கொண்டுள்ள அசைக்க முடியாத காதலையும், கல்யாணத்தை அவளுடைய உடலின் ஒவ்வொரு அணுவும் துடிதுடிப்புடன் வரவேற்பதையும், அன்று அவள் பார்த்த சம்பவம் மனத்தைப் புண்படுத்தித் துன்புறுத்தி வருவதையும் சொன்னாள்.

அவள் தேடிச் சென்ற மன ஆறுதல் மணியிடமும் கிடைக்கவில்லை. அலட்சிய பாவத்துடன் சிரித்தான் மணி.

''சீமையிலிருந்து விசேஷமாகக் கற்றுக்கொண்டு வந்த படிப்பில் இதுவும் ஒன்றாக இருக்கும்! இப்படிப்பட்ட ஸ்திரீலோலனுக்காகத் தான் நீ உயிரையே விட்டுக்கொண்டிருக்கிறாய்!''

''மன அமைதியை நாடி உங்களிடம் பேச வந்தேன்'' என்றாள் விமலா.

''மன அமைதியா? அதை எப்படி நான் கொடுக்க முடியும்? உண்மையைப் பொய் என்று சொல்லி மூடி மறைத்து விட முடியுமா? நீ உன் கண்களாலேயே கண்ட காட்சியைச் சொப்பனம் என்று சொல்லித் தட்டிக் கழிக்கச் சொல்கிறாயா? அப்படி என்னை நானே ஏமாற்றிக்கொண்டு உன்னையும் ஏமாற்றுவதைவிட உண்மையை நன்கு உணர்ந்து கொண்டு ஆவன செய்வதே மேல் இல்லையா?''

''என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''இப்போதாவது உன் அத்தானைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள் என்கிறேன். அவதார புருஷனை, நேர்மைக்கு எடுத்துக்காட்டாக இவன் ஒருவன் தான் இந்த உலகத்திலேயே இருப்பதுபோல் அன்று உன்னைச் சித்திரவதை செய்தானே. நீ மன்னிக்க முடியாத குற்றம் எதையோ செய்துவிட்டது போல் புல் தரையில் விழுந்து அழும்படியாக உதறித் தள்ளி விட்டுப் போனானே, அதே மனிதன்தான் இன்று தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஒரு பெண்ணிடம், நர்ஸ் நிர்மலாவிடம் பல்லை இளித்துக் கொண்டு நிற்கிறான்!''

''அத்தானைப் பற்றி அவதூறு கேட்க நான் உங்களிடம் வரவில்லை'' என்றாள் விமலா கோபத்தோடு.

''அவதூறு சொல்லவில்லை, விமலா! நடந்ததை நடந்தபடியே சொல்கிறேன். அவ்வளவுதான். நான் இப்பொழுது சொன்ன வார்த்தைகளில் ஒன்றுகூடத் தவறில்லை'' என்றான் மணி.

''உண்மையைத் தகாத முறையில் திரித்துக் கூறுகிறீர்கள்!''

''தவறு, விமலா! நீ வருத்தப்பட்டுச் சொன்னாய். நான் அதே விஷயத்தைக் கோபத்துடன் பேசுகிறேன். எந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் என்ன? உண்மையை மறைக்க முடியுமா?''

''மறைக்கத்தான் முடியாது என்றால் மறக்கக் கூட முடியாதா என்ன?''

''தாராளமாக மறந்து போ. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. உன் ஆருயிர் அத்தானையே கட்டிக் கொண்டு அழு. அவன் செய்தவற்றை மட்டும் என்ன? இனி செய்யப் போகும் தகாத செயல்களையும் உடனுக்குடன் மறந்து மன்னித்து விடு!''

''உங்களிடம் அத்தானைப் பற்றிப் பேச வந்ததில் மிகப் பெரிய தவறு செய்து விட்டேன்.''

''காந்தித் தாத்தாவிடம் இருந்த மூன்று குரங்குகளைப் பற்றித் தெரியுமா, உனக்கு? ஒன்று வாயையும் மற்றொன்று கண்களையும் மூன்றாவது காதுகளையும் பொத்திக் கொண்டு இருக்கும். அவற்றைப் போலவே நீயும் கண்களையும், காதுகளையும், வாயையும் நடராஜனைப் பொருத்த வரையில் பொத்திக் கொண்டே இரு. அவன் என்ன அநியாயம் பேசினாலும் காதால் கேட்காதே. எவ்வளவு தகாத செயல்களைப் புரிந்தாலும் கண்களால் பார்க்காதே. அவனைப் பற்றி ஒரு வார்த்தை கூடத் தவறாகப் பேசாதே! அப்படியிருப்பதில் நீ வெற்றி பெற்றால் நடராஜனுடன் இன்பமாக வாழ்க்கை நடத்தலாம்'' என்றான் மணி.

•

உடலின் ஒவ்வொரு பாகத்துக்கும் தனது காரியத்தைச் செய்யச் சக்தி வேண்டும். அந்தப் பாகத்தில் இருக்கும் ரத்தக் குழாய்களில் பாயும் ரத்தம் தேவையான சக்தியை அளிக்கிறது. அப்படி உடல்முழுவதும் ரத்தத்தைப் பாய்ச்சுவது இருதயம்தான். அது ஒரு நிமிஷத்துக்கு எழுபதுமுறை சுருங்கி விரிந்து ரத்தத்தைப் பாய்ச்சுகிறது.

இருதயத்துக்கும் தன் வேலையைத் திறம்படச் செய்யச் சக்தி வேண்டும். அதற்காக இருதயத் தசைகளுக்கும் சில ரத்தக் குழாய்கள் வழியே ரத்தம் பாய்கிறது. இந்த ரத்தக் குழாய்கள் சில சமயங்களில் நோய்வாய்ப்பட்டுக் குறுகிப் போனால் இருதயத்துக்கு ரத்த ஓட்டம் தடைப்பட்டுப் போகிறது. மார்

பின் இடப் புறத்திலும் இடது தோளிலும் தாளமுடியாத வலி உண்டாகிறது.

பழங் காலத்தில் இந்த வலியின் காரணத்தை டாக்டர்கள் உணரவில்லை. அஜீரணத்தினால் ஏற்படும் வலி என்றே நம்பி வந்தார்கள்! ஆனால் ஒரு விஷயம் அவர்களுக்கும் தெளிவாகத் தெரிந்தது. அது, மூன்றாவது முறையாக இந்த வலி கண்டு விட்டால் பிழைப்பது அபூர்வம் என்பதுதான். அவர்களுடைய இந்த நம்பிக்கையை இக்காலத்திய இருதய ஆராய்ச்சி நிபுணர்களும் சரியானது என்றே ஒப்புக் கொள்கிறார்கள்.

பல வருஷங்களாக இந்த இருதய நோயைக் குணப்படுத்தும் வகை அறியாது டாக்டர்கள் தவித்து வந்தார்கள். சமீப காலத்தில் டாக்டர் கிளாடு பெக் என்ற இருதய சஸ்திர சிகிச்சை நிபுணர் தமது ஆழ்ந்த அறிவினாலும் ஆராய்ச்சித் திறனாலும் பல அற்புதமான சாதனைகளை இந்தத் துறையில் புரிந்திருக்கிறார். அவற்றிலெல்லாம் மிக அதிசயமான விஷயம் இந்தச் சாதனைதான்.

இருதயத்தை ஒட்டினாற்போல் ஒருமெல்லிய உறுப்பு அதைச் சுற்றிலும் அமைந்திருக்கிறது. இருதயத்தை ஒரு பையில் வைத்ததுபோல் இருக்கும். இந்த மெல்லிய உறுப்பை வெட்டி அதனுள் முகத்தில் பூசிக் கொள்ளும் பவுடரைத் தூவினார் டாக்டர் பெக். சிறிது காலத்தில் புதிய ரத்தக் குழாய்களே உண்டாகி இருதயத் தசைகளுக்குத் தேவையான ரத்தத்தை எடுத்துச் சென்றன!



இந்தச் சிகிச்சையைத்தான ராமலிங்கத்துக்கும் செய்ய நிச்சயித்திருந்தான் நடராஜன். அவர் உடல் நிலை சற்றுத் தேறட்டும் என்று காத்திருந்தான். அதற்குள் நடக்கக் கூடாதது நடந்து விட்டது. ராமலிங்கத்துக்கு மூன்றாவது முறையும் இருதய நோய் கண்டு வலி உண்டாயிற்று. அப்போதும் நடராஜன் மனம் கலங்கவில்லை. ஒரு குழந்தையைத் தூக்குவதுபோல் அவரைத் தூக்கிக் கொண்டு நர்ஸிங் ஹோமுக்கு விரைந்தான். அவர் இனி பிழைப்பது அரிது என்பதை உணர்ந்துதான் இருந்தான் நடராஜன். ஆனால் அவன் லண்டனிலிருந்து கிளம்புகையில் டாக்டர் ஜாக்ஸன் அவர்கள் கூறிய அறிவுரைகள் அவன் நினைவில் இருந்தன.

'ஒரு நோயாளியின் நிலைமை மோசமாக இருக்கிறது என்பதால் அவனுக்குச் சிகிச்சை அளிக்கத் தயங்காதே. அவன் பிழைக்காவிடில் அது உன் தவறு அல்ல. ஒருவேளை பிழைத்தால் ஒரு மனிதனுக்கு உயிர் அளித்தவனாவாய்.'

இதுவரை அவன் தன் தந்தைக்கு அளிக்க எண்ணி இருந்த சிகிச்சை இந்தச் சமயத்துக்குப் பிரயோஜனப் படாது. வேறு ஒரு சிகிச்சை முறையைக் கையாண்டான் நடராஜன்.

சிகிச்சை முடிந்து விட்டது. ஆனால் இருதயம் நின்று போயிற்று. அடித்துக் கொள்ளவில்லை. கடைசியாக இன்னும் ஒரே ஒரு வழிதான் பாக்கியிருந்தது. இருதயத்தைத் தன் கையினால் பிடித்துப் பிசைய ஆரம்பித்தான் நடராஜன். ஒரே மாதிரியாக ஒரே வேகத்தோடு அழுத்தியும் தளர்த்தியும் பிசைந்து கொண்டிருந்தான் அவன்.

இப்படிச் செயற்கை முறையில் இருதயத்தைத் துடிக்கச் செய்வது சிற்சில சமயங்களில் பயன் அளிப்பதுண்டு. இருதயத் தசைகள் புத்துயிர் பெற்று விட்டது போல் மறுபடியும் முன்போலவே துடிக்க ஆரம்பிக்கும்.

நேரம் சென்று கொண்டேயிருந்தது. நடராஜன் விடாமல் இருதயத்தைப்பிசைந்து கொண்டே இருந்தான். அவன் உடல் முழுவதும் வியர்த்து ஆடை யெல்லாம் நனைந்து விட்டது. கைவிரல்கள் வலித்தன.

நர்ஸ் நிர்மலாவும் பவானியும் செயலற்று நின்றார்கள். அவர்களை நடராஜன் கவனித்ததாகவே தெரியவில்லை. எப்படியாவது இருதயம் மறுபடியும் அடித்துக் கொள்ள ஆரம்பிக்காதா? பல்லைக் கடித்துக் கொண்டு தொடர்ந்து அதைச் செய்துகொண்டேயிருந்தான் அவன்.

நர்ஸ் நிர்மலா கை ரப்பர் உறைகளை அகற்றி விட்டுத் தன் விரல்களால் அவன் கையைத் தொட்டாள். திடுக்கிட்டவனாகத் திரும்பினான் நடராஜன். தலையை மெல்ல அசைத்தான் அவன். குளம் போல் கண்ணீர் தேங்கியிருந்த தனது அகன்ற கண்களால் அவனுக்கு ஆறுதல் சொல்வதற்கு முயன்றாள்.

விமலாவும், நடராஜனும், மணியும் ராமலிங்கம் இறந்து போனதற்குத் தாங்கள்தான் காரணம் என்று தனித் தனியே வருந்தினார்கள். செய்யப் போகும் காரியங்களால் பின்னால் என்ன என்ன விளைவுகள் உண்டாகப் போகின்றன என்று மட்டும் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியுமானால் பல காரியங்களை நாம் செய்யவே மாட்டோம் அல்லவா?

'மன ஆறுதலுக்காக, தான் பார்த்த அந்தச் சம்பவத்தை மணியிடம் சொல்லியே இருக்கக் கூடாது. அதனால்தானே இவ்வளவெல்லாம் நடந்து விட்டது?' என்று வருந்தினாள் விமலா. நடராஜனுக்குக் கோபம் உண்டாகும்படி பேசியது மிகப் பெரிய தவறு என்று மணி தன்னைத் தானே நொந்துகொண்டான். அதிகமான உடல் உழைப்பும் மனக் கிலேசமும் இந்த நோய்க்குத் தூண்டுகோலாக இருந்து முடிவைத் துரிதப் படுத்தும் என்று நடராஜனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு மணியைத் தாக்கியபோதோ அல்லது குறுக்கிட்ட தகப்பனாரைப் பிடித்துத் தள்ளியபோதோ அது அவனுக்கு மறந்தே போய் விட்டது. அளவுகடந்த கோபம் ஒன்றே எஞ்சியிருந்து ராமலிங்கத்தின் அகாலமான முடிவுக்கும் அது காரணமாயிருந்தது.

திருமணத் திருநாளில், குதூகலம் பொங்கித் ததும்ப வேண்டிய நன்னாளில், துயரம் நிறைந்து வழிந்தது அந்த வீட்டில். இனி கல்யாணப் பேச்சு ஏது?

அத்தியாயம் 30

புதிய நட்சத்திரம்

நாதன் நீட்டிய காகிதத்தை வாங்கிக் கொண்டே, "இது என்ன?" என்று கேட்டாள் மல்லிகா.

"என்னுடைய நிலையத்தில் நீ முதலில் வந்து சேர்ந்தபோது ஒரு காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாயே, ஞாபகம் இருக்கிறதா?"

"ஆமாம். நினைவு வருகிறது."

"அந்தக் காகிதம்தான் இது!"

"அதை இப்போது என்னிடம் எதற்குக் கொடுக்கிறீர்கள்?"

"இது வெறும் காகிதம்மட்டும் இல்லை. உனக்கும் எனக்கும் இடையே உள்ள ஒரு ஒப்பந்தம். என்னுடைய ஆறு நாடகங்களில் நடிப்பதாக ஒப்புக் கொண்டு கையெழுத்தும் போட்டுக் கொடுத்திருக்கிறாய். படித்துப் பார்த்தால் உனக்கே தெரியும்" என்றார் நாதன்.

ஒன்றும் புரியாமல் விழித்தாள் மல்லிகா. "நான் எப்படி ஆறு நாடகங்களில் நடிக்க முடியும்? திரைப் படத்தில் நடித்துக் கொண்டே நாடகத்திலும் நடிக்கச் சொல்கிறீர்களா? சுகுமாரன் அதற்குச் சம்மதிப்பாரா?"

"அவர் யார் சம்மதிப்பதற்கு? இந்த ஒப்பந்தத்தின்படி நான் அல்லவோ அவருக்குச் சம்மதம் அளிக்க வேண்டும், நீ திரைப்படத்தில் நடிக்க!"

"அதற்கு ஒப்புக் கொள்வீர்கள் அல்லவா?" என்று மிகுந்த நம்பிக்கையுடன் கேட்டாள் மல்லிகா.

"ஒருநாளும் மாட்டேன்! சினிமா நட்சத்திரமாகி விட்டால் நாடகங்களில் உனக்குச் சிரத்தை இருக்காது. ஒத்திகைக்குவரக்கூட நேரம் இருக்காது. அப்படியே மேடைமீது ஏறி வந்தாலும் உயிரற்ற நடிப்பாகத்தான் இருக்கும், உன் மனம் அதில் ஈடுபடாத காரணத்தால்! என்னுடைய நல்ல பெயர் கெட்டுப் போகும்!"

"இல்லை! இத்தனை நாட்களாக நடித்து வந்தது போலவே அக்கறையுடன் மிகவும் சிரமப்பட்டு நடிப்பேன். என்னை நம்புங்கள்!"


"சினிமாவிலும் நாடகத்திலுமாக நீ இருப்பதை நான் விரும்பவில்லை, மல்லிகா! முழுமையாக நீ என்னிடம் இருப்பதையே நான் விரும்புகிறேன்!"

திடீரென்று மல்லிகாவுக்குக் கோபம் வந்து விட்டது. "நீங்கள் வேண்டுமென்றே செய்த இன்னொரு சூழ்ச்சி இது. நான் இதை நம்ப மாட்டேன்! நம்பவேமாட்டேன்!" என்று கத்தினாள்.

"நீ அப்படி நினைப்பாய் என்பதினால் தான் கையோடு ஒப்பந்தத்தையும் எடுத்து வந்து உன்னிடம் காட்டும்படியான நிர்ப்பந்தம் எனக்குஏற்பட்டது!"

"முன்பு எப்போதோ கையெழுத்து போடச் சொன்னீர்கள், போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்றுகூட எனக்குத் தெரியாது. சேகரையும் உங்களையும் நம்பினேன். முழுமனத்துடன் உங்களை நம்பிய என்னை ஏமாற்றித் துரோகம் செய்து விட்டீர்கள்."

"நானா உன்னை ஏமாற்றினேன்? கையெழுத்துப் போடும் போது அதைப் படிக்க வேண்டாம் என்று தடுத்தேனா? படிக்காமல் கையெழுத்துப் போட்டது


நீங்கள்
மனக்கவலை
யடையும்
பொழுது,
தேநீர்
உங்களுக்கு
உற்சாக
மூட்டுகிறது

என் தவறு? இப்போது ஒப்பந்தப்படி நடக்காமல் இரண்டு நாடகங்களில் நடித்ததுமே திரைப் படத்துக்குத் தாவ விரும்பும் நீயல்லவா என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்?''

அவரது கடுமையான குரலைக் கேட்டுத் தணிந்து போனாள் மல்லிகா. ''உங்களைக் காலில்விழாத குறையாக வேண்டிக் கொள்கிறேன். தயவுசெய்து என்னை உங்கள் பிடியிலிருந்து விட்டு விடுங்கள். இத்தகைய சந்தர்ப்பம் எனக்கு மறுபடியும் கிடைப்பதென்பது சந்தேகம்தான்.''

''அப்படியெல்லாம் சுலபமாக விட்டு விட முடியாது, மல்லிகா! 'என்னை விட்டுப் போகாதே' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டேன். என் வார்த்தைகளை நீ அப்போது மதிக்கவில்லை. இப்போது துருப்பு என்னிடம் இருக்கிறது. நான் இழுத்த இழுப்புக்கெல்லாம் நீ வளைந்து கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.''


மல்லிகாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் கையிலிருந்த ஒப்பந்தத்தைச் சட்டென்று இரண்டாகக் கிழித்தாள். பாய்ந்து சென்று அவள் கரத்தைப் பற்றினார் நாதன். அதற்கு முன் ஒப்பந்தம் எட்டுத் துண்டுகளாகக் கிழிந்து விட்டது. மல்லிகாவின் முகத்தில் வெற்றிப் பெருமிதமும் அதனால் உண்டான புன்னகையும் தோன்றின.

''நீ இப்படிச் செய்வாய் என்று எனக்கு முன்பே தெரியும்'' என்றார் நாதன்.

''தெரிந்துமா என்னிடம் தைரியமாக இதைக் கொடுத்தீர்கள்?'' என்றாள் மல்லிகா.

பெரிதாகச் சிரித்தார் நாதன். ஏளனம் மிகுந்த அந்தச் சிரிப்பு மல்லிகாவின் புன்னகையை இருந்த இடம் தெரியாமல் மறையும்படி செய்தது.

''மல்லிகா! நீ ரொம்பச் சாமர்த்தியசாலி! ஆனால் நான் உன்னை விடக் கெட்டிக்காரன்.



ஒப்பந்தத்தையே உன்னிடம் கொடுக்கவில்லை, மல்லிகா. அதனுடைய ஒரு பிரதியைத்தான் கொடுத்தேன். அதைப் பிரித்து ஒரு முறை பார்த்திருந்தால் தெரிந்து கொண்டிருப்பாய். உன் கையெழுத்து அதில் இல்லை. மல்லிகா! உண்மையான ஒப்பந்தம் பத்திரமான இடத்தில் இருக்கிறது. நீ கவலைப்பட வேண்டாம்'' என்று சொல்லி மறுபடியும் சிரித்தார் நாதன்.

அவளுக்கு ஏற்பட்டிருந்த அருவருப்பு முகத்தில் பிரதிபலிக்கப் பேசினாள் மல்லிகா. ''உங்களுடைய சூழ்ச்சிக்கு எல்லையே கிடையாதா?''

''உனக்காகட போனால் போகிறது என்று ஒரு எல்லையை வகுக்கிறேன். இந்த ஒப்பந்தத்திலிருந்து நீ விடுதலை அடைய வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.''

''என்ன அது? சீக்கிரம் சொல்லுங்கள். எதுவானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்.''

''ஐம்பதினாயிரம் ரூபாய் தர வேண்டும்'' என்றார் நாதன்.

சிலையாகச் சமைந்து நின்றாள் மல்லிகா. ''இது என்ன அக்கிரமம்?''

''அக்கிரமம் ஒன்றும் இல்லை. ஒப்பந்தத்தில் இருப்பதைத்தான் சொல்கிறேன். ஐம்பதினாயிரம் கொடுத்து விட்டால் எந்தக் கணமும் என் நாடக நிலையத்திலிருந்து விலகிக் கொள்ள உரிமை உண்டு.''

''அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்?'' என்றாள் மல்லிகா.

''சுகுமாரன் தயாரிக்கப் போகும் படத்தில் நடிக்கும் கதாநாயகிக்கு ஐம்பதினாயிரம் பிரமாதமான காரியமா என்ன? அசடே! நட்சத்திரப் பதவியைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது. ஏமாந்து போகாதே! திரைப்பட உலகில் படத்தின் நீளமாகட்டும், பணத்தின் எண்ணிக்கையாகட்டும், சன்மானமாகட்டும் எல்லாமே ஆயிரக் கணக்கில்தான்!'' என்று எச்சரிக்கை செய்து விட்டுச் சென்றார் நாதன்.


* * *

அன்று இரவு மல்லிகா படுத்துக் கொண்டதும் சிறுமி சரஸ்வதி அவளை வழக்கம்போல் கட்டிக் கொண்டாள்.

''அக்கா! இன்று யாரோ ஒரு மனிதர் உன்னிடம் வந்து பேசிக் கொண்டிருந்தாரே, அது யார் அக்கா?''

''சினிமா டைரக்டர் சுகுமாரன், கண்ணு!''

''அவர் எதற்கு உன்னைப் பார்க்க வந்தார் அக்கா? நீ சினிமாவில் சேர்ந்து நடிக்கப் போகிறாயா என்ன?''





''ஆமாம் கண்ணு!''

''அவர் ரொம்ப ரொம்ப நல்லவர் போல எனக்குத் தோன்றுகிறது. நம்முடைய அப்பாவாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?''

சரஸ்வதியை மார்புறத் தழுவிக் கொண்டாள் மல்லிகா. அவள் தொண்டையிலிருந்து ஒரு விம்மல் வெளிப்பட்டது. 'என்ன ஒற்றுமை? நாம் நினைத்ததையே குழந்தையும் சொல்கிறாளே?' சட்டென்று அவளுக்கு ஒரு விஷயம் புலப்பட்டது. அது சுகுமாரன் தன்னிடம் அசாதாரணமான பரிவு காட்டுகிறார் என்பதுதான். எதற்காக? தன்னை ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கிறார். அதற்குள் தன் மீது ஏன் இவ்வளவு அக்கறை? எனக்குக் கல்யாணம் செய்து வைத்துக் குடியும் குடித்தனமுமாகப் பார்க்க வேண்டும் என்ற அளவுக்குப் பரிவு காட்டுவானேன்? எடுத்த எடுப்பிலேயே அவள் நட்சத்திரமாக விளங்க ஒப்புக் கொள்வானேன்?

தன் தாயார் கமலத்தின் நினைவு அடிக்கடி மல்லிகாவுக்குத் தோன்றுவது வழக்கம். இரவில் அவள் தூங்குவதற்கு முன்னால் எதிரே தோன்றுவாள். 'அம்மா! உன் சொல்படி கேட்காமல் உன் மரணத்துக்கே காரணமாகி விட்டேன். என்னை மன்னித்து விட்டாயா?' என்று அப்போது கேட்பாள் மல்லிகா. கூடவே கமலம் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வரும். 'எப்போதாவது உன் அப்பாவைப் பார்க்க நேர்ந்தால் அவரை நினைத்துக் கொண்டே நான் உயிரை விட்டேன் என்று சொல்லு! அப்படிச் சொன்ன பிறகுதான் உன்னை மன்னிப்பேன்' என்று தன் எதிரே நிற்கும் தாயாரின் உருவம் சொல்வதாகத் தோன்றும் மல்லிகாவுக்கு. அந்தத் தருணம் வந்துவிட்டதா? அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. இத்தகைய எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு நீண்ட நேரம் தூக்கமின்றிக் கழித்தாள் மல்லிகா.

* * *

மறுபடியும் சுகுமாரனை அவள் சந்தித்தபோது நாதனுக்கும் தனக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தையெல்லாம் சொன்னாள் மல்லிகா.

''வஞ்சனை நிறைந்த உலகம் இது. ஐம்பதினாயிரம் எனக்குப் பெரிய விஷயம் இல்லை. கொடுத்துவிடுவேன். ஆனால் இனியாவது நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நன்றாக உன்னை ஏமாற்றியிருக்கிறான், நாதன்!''

''என் அறியாமையினால் ஏமாந்துதான் போனேன்'' என்றாள் மல்லிகா.

''நீ என்னிடம் நடிக்கப் போகிறாய் என்று தெரிந்ததும் இந்த ஒப்பந்தத்தை ஜோடித்திருப்பான்.''

''அப்படியும் இருக்குமா?''

''ஏன் இருக்காது. ஒரு பொய்க் கடிதத்தை எழுதியவனுக்கு இன்று ஒரு ஒப்பந்தத்தை ஜோடிப்பதுதானா கஷ்டம்? பணம் கிடைக்கும் என்று தோன்றினால் சில மனிதர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்.''

''அப்படியானால் பணம் கொடுக்காதீர்கள். வந்தது வரட்டும்!''

''வேண்டாம். தன்னை மல்லிகா ஏமாற்றி விட்டதாக நாலு பேரிடம் சொல்வான். நமக்குக் கெட்ட பெயர் உண்டாகும். வழக்குத் தொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதில் அவன் தோற்றாலும்கூட வீண் பழி நம்மைச் சுற்றும். மக்களிடையே உன்னைப் பற்றித் தவறான எண்ணம் உண்டாகி விட்டால் இந்தத் தொழிலில் வெற்றி பெறுவது கடினம். அதைவிடப் பணத்தைக் கொடுத்து விட்டு ஒப்பந்தத்திலிருந்து விடுதலை அளித்ததாக எழுதி வாங்கிக் கொண்டு விடுவதே மேல்.''

மௌனமாகத் தன் தலையை அசைத்தாள் மல்லிகா.

''சரி, நீ கிளம்பு போகலாம்'' என்றார் சுகுமாரன்.

''எங்கே?''

''உனக்காக நல்லதொரு வீடு பார்த்திருக்கிறேன். இந்த இடத்தில் நீ இருந்தது போதும்!''

''கிளம்புகிறேன். ஆனால் அதற்கு முன்னால் ஒரே ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.''

''என்ன?''

''நீங்கள் ஏன் இப்படித் திடீரென்று முன் பின் தெரியாத என்னிடம் அன்பு காட்டுகிறீர்கள்?''

''நான் பிரபல டைரக்டர். என் படத்தில் நீ கதாநாயகியாக நடிக்கப் போகிறவள். நாளைக்கு உன்னைப் பத்திரிகை நிருபர்கள் பேட்டி காண வருவார்கள். அப்போது நல்ல சூழ்நிலையில் நேர்த்தியாக நீ விளங்க வேண்டியது அவசியம்.''

இந்தப் பதில் மல்லிகாவுக்கு அவ்வளவு திருப்தி யளிக்கவில்லை. அவர் மீது நம்பிக்கை பிறக்கவில்லை. தான் வைத்திருந்த கடைசி பாணத்தையும் எய்தாள்.

சுகுமாரனின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே, ''என் தாயார் இறந்து போகும் சமயத்தில் 'எப்போதாவது உன் தகப்பனாரைச் சந்தித்தால் அவரை நினைத்துக் கொண்டே நான் உயிரை விட்டேன் என்று சொல்லு' என்றாள்'' என்று கூறினாள் மல்லிகா.

சட்டென்று திரும்பி விட்டார் சுகுமாரன். அவர் முகத்தைப் பார்க்க எண்ணிய மல்லிகா ஏமாந்து போனாள். ஆனால் சுகுமாரன் 'சட்'டென்று திரும்பிக் கொண்ட அந்தச் செய்கையே அவளுடைய சந்தேகத்தைப் பலப்படுத்தியது. அவள் தகப்பனாரைப் பிரிந்த போது பத்து வயதுச் சிறுமி, இப்போது ஒன்பது வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன. அடையாளம் புரிவதே கஷ்டம் தான். ஒருவேளை அவர் மீசையை எடுத்து விட்டால் இப்படித்தான் தோற்றமளிப்பாரோ? சுகுமாரனுக்கு மனைவி மக்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தாள் மல்லிகா. அதனால் ஒரு வேளை தன் தகப்பனார் என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறாரோ? 'எங்களைத் தவிக்க விட்டு விட்டு நிம்மதியாக மறு விவாகம் செய்து கொண்டு சௌக்கியமாக இருந்தீர்களே' என்று ஏசுவோம் என்பதற்காக உண்மையை என்னிடமிருந்து மறைக்கிறாரோ?

சுகுமாரன் மெள்ளத் திரும்பினார். அவர் முகம் உணர்ச்சியற்றுச் சிலைபோல் இருந்தது. ''என்னை உன் தகப்பனாராகப் பாவித்துக் கொள்ள ஆசைப்பட்டால் அப்படியே செய். நான் மறுத்துச் சொல்லவில்லை'' என்றார்.

குதூகலத்தால் நெஞ்சம் துடிதுடிக்க, தொண்டை அடைக்க, உள்ளம் பூரிக்க ஒருகணம் பேச முடியாமல் தவித்தாள் மல்லிகா. பெருமுயற்சிசெய்து 'அப்பா!' என்று கூவி அழைத்தாள். பாய்ந்து சென்று அவரை இறுகத் தழுவிக் கொண்டாள். டைரக்டர் சுகுமாரனின் வைராக்கியம் தவிடு பொடியாகியது. அதுவரை உணர்ச்சியற்று இருந்து வந்த அவர் முகத்தில் இப்போது கண்ணீர் பெருகிக் கன்னங்களில் வழிந்தது.

'' 'தகப்பனாராகப் பாவித்துக் கொள்' என்றுதான் சொன்னேன். அதற்குள் 'அப்பா' என்று அழைத்து விட்டாய். அந்த வார்த்தையைச் சொல்ல எத்தனை நாட்களாக உன் மனம் தவித்ததோ, பாவம்!'' என்று சொல்லிக்கொண்டே அவள் தலையை மெல்ல வருடினார் டைரக்டர் சுகுமாரன்.

* * *

திரைப்படம் உருவாகியது. கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் ஒளிபரப்பிய மின்சார விளக்குகளுக்கு எதிரே பார்ப்போர் பிரமிக்கும்படியான வனப்புடன், இளமையின் இயற்கையான எழிலுக்கு மேலும் அழகு செய்த பட்டும் ஜரிகையும் கலந்த வண்ண வண்ண உடைகளை அணிந்து மின்னினாள் மல்லிகா.

தேங்காய்உடைத்துக் கற்பூரம்காட்டி, பூஜையை ஆரம்பித்தார் சுகுமாரன். சினிமா உலகம் இருக்கிறதே, அது சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாத ஒரு தனி உலகம்தான்.

'சைலன்ஸ்' என்றார் சுகுமாரன். அடுத்த கணம் ஸ்டுடியோ முழுவதும் பூரண அமைதி நிலவியது.

'லைட்ஸ்' என்றார் டைரக்டர். ஐந்தாறு மின்சார விளக்குகள் 'பளீர் பளீர்' என்று எரிந்து மல்லிகாவை ஜகஜ்ஜோதியாக மின்னும்படி செய்தன.

'' சுகுமாரன் பிலிம்ஸ் 'கண்ணீர்' ஸீன் ஒன் ஷாட் ஒன்'' என்று சொல்லி விட்டு ஒரு கட்டையைத் தட்டி 'டக்' என்று ஒலி எழுப்பிச் சென்றான் ஒருவன்.

'' ஆக்ஷன் '' என்றார் டைரக்டர்.

மல்லிகா கிளிப் பிள்ளைபோல் தான் ஏற்கனவே உருப்போட்டு வைத்திருந்த வசனத்தை ஒப்புவித்தாள்.

'கட்' என்றார் டைரக்டர். விளக்குகள் அணைந்தன. ''மல்லிகா! உணர்ச்சியில்லாமல் பேசுகிறாய். முகத்தில் பாவம் வர வேண்டும். அதோடு வார்த்தையிலும் பாவம் இருக்க வேண்டும், எங்கே இப்போது மறுபடியும் சொல், பார்க்கலாம். ஆக்ஷன்!''

மறுபடியும் மறுபடியும் அந்த ஒரு வரியையே சொன்னாள் மல்லிகா. இருபத்து ஐந்து முறை சொன்ன பிறகு இருபத்து ஆறாவது முறை 'டேக்' என்றார் டைரக்டர். காமிரா சுழன்றது.

திரைப்பட நட்சத்திரமாக விளங்குவதென்பது சுலபமான காரியம் இல்லை என்பதை உணர்ந்தாள் மல்லிகா. ஒரே களைப்பாக இருந்தது. கண்கள் எரிச்சலைக் கொடுத்தன. உடம்பெல்லாம் வியர்த்து உடல் முழுவதும் பூசப்பட்டிருந்த அழகு சாதனங்களுடன் கலந்து அருவருப்பைக் கொடுத்தது.


அவள் நிலையைப் புரிந்துகொண்டு ஷூட்டிங்கை முடித்து விட்டார் சுகுமாரன். தம் காரிலேயே அவளை ஏற்றிக்கொண்டு அவளுக்காக வாங்கியிருந்த வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றார்.

*

சிறிது சிறிதாக உருவான அந்தத் திரைப்படம் ஒரு வருஷத்துக்குப் பிறகு வெளியாயிற்று. பொதுமக்களின் அமோகமான ஆதரவைப் பெற்றது. தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் 'மல்லிகா மல்லிகா' என்றே பேசினார்கள். சினிமா வானிலே ஒரு புதிய நட்சத்திரமாக விளங்கிய மல்லிகாவைப் புகழாதவர் கிடையாது. அவள் அழகை வியந்து பாராட்டாதவர் கிடையாது.

முதல் பாகம் 'நட்சத்திரம்' முடிவடைந்தது







வட்ட மேஜை

இரு கண்கள்

சிறியவர்களும் பெரியவர்களும் அனைவரும் பயன் அடையும்படி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் "அருள் வாக்கு" என்ற தலைப்பில் எழுதிவரும் எழுத்துக்களைப் படிப்பதற்கு நாங்கள் மகா பாக்கியம் செய்திருக்க வேண்டும். இந்த அருள்வாக்கின்படி ஒவ்வொரு மனிதனும் நடந்து வருவானேயானால் இந்நாடு எவ்வளவு முன்னேற்றம் அடையும்!

தமிழ்நாடு பெற்றெடுத்த அருந்தவப் புதல்வரும், மேதையுமான ராஜாஜி அவர்கள் எழுதிவரும் "வள்ளுவர் வாசகம்" எங்களைப் போன்ற மாணவர்கள் தீய வழிகளில் செல்லாமல், அவர்களுக்கு நற்பாதையை வகுத்துக் கொடுக்கிறது. பள்ளியில் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைவிட, மிகத் தெளிவாக, இனிமையாக, சிறு பிள்ளைகளும் புரிந்து கொள்ளும்படி எங்களுக்குத் திருக்குறளை எழுதி வருகிறார் சிறந்த மகானை 'இரண்டாம் வள்ளுவர்!'

இந்த இரண்டு பெரியார்களும் எழுதிவரும் இவ்விரண்டு பகுதிகளும் எங்கள் "கல்கி"யின் இரண்டு கண்களாகும்! இவ்விரு பகுதிகளைத்தான் நாங்கள் முதலில் படிக்கிறோம்.

சென்னை—1 கெ. ஜி. வரதராஜன்
5—7—58 கெ. ஜி. விசுவநாதன்

சிறப்புமிக்க தலையங்கம்

'மாயூரம் வழிகாட்டுகிறது' என்ற தங்களது தலையங்கம், 'ஆயிரமானாலும் கல்கியின் தலையங்கமாகாது' என்பதை நிரூபித்து விட்டது. 'நாட்டைக் காப்பாற்ற வேண்டியது இத்தருணத்திலேதான்' என்ற உணர்ச்சியைத் தூண்டி எழுப்பக் கூடியதாக இருக்கிறது. 'ஆங்கிலம்தான் நீடித்திருக்க வேண்டும், இந்தி கூடவே கூடாது. ஆங்கிலத்தில்தான் இந்தியா முன்னேறும்' என்ற கோஷத்தை நம் இளைஞர்கள் இனி இடிமுழக்கம் செய்வர்.

கோயம்புத்தூர்
26—6—58 தா. வி. கணபதி

ஓரவஞ்சனை

திருச்சியிலிருந்து மன்னார்குடி வழியாகத் துறையூருக்கும், மற்ற வெளியூர்களுக்கும் செல்லும் பஸ்களில் மணச்சநல்லூருக்கு டிக்கெட் வேண்டுமென்று தெரியாதவர்கள் கேட்டால் 'உங்கள் ஊர் டவுன் பஸ்ஸுக்குப் போ' என்று சொல்லி விடுகிறார்கள். தெரிந்தவர்கள் வந்தால் பஸ் கிளம்பும் சமயத்தில் கண் ஜாடை காட்டி ஏற்றிக் கொள்கிறார்கள்.

சென்ற வாரம் கடைசி நாள் சர்க்கஸ் அன்று பகல் மூன்று மணி ஆட்டம் பார்த்து விட்டுத் திரும்பும்பொழுது, சிந்தாமணி பஸ் நிலையத்தில் மணச்சநல்லூருக்கு டிக்கட் கேட்ட எங்களுக்கு, 'இடம் இல்லை' என்று சொல்லி விட்டு, பஸ் கிளம்பி மெதுவாக நகரும் பொழுது தங்களுக்கு வேண்டிய மூன்று, நான்கு பேர்களை மட்டும் ஏற்றிக் கொண்டார்கள். இந்த ஓரவஞ்சனை ஏன்?

மணச்சநல்லூர்
27—6—58 வெ. நடராஜன்

வழிகாட்டி!

சென்ற 6வ. இதழில் வெளியாகியுள்ள "ஆசியாவின் குரல்" என்ற தலையங்கம் இந்திய மக்களின் அபிப்பிராயத்தையும் காந்திய முறையின் மகத்துவத்தையும் பிரதிபலிக்கிறது. தலைவர் ராஜாஜியின் அரசியல் ஞானமும் தார்மீக ஞானமும் உலகத்துக்கு வழிகாட்டி இருளை அகற்ற வேண்டும்.

அம்மாசிப்பேட்டை
8—7—58 பி. சிவஞானம்

தாமதம் ஏன்?

இவ்வூர் நகராட்சி துவக்கப் பள்ளிகள் திறந்து ஐந்து வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டன. நகராட்சி ஆணையர் அனுப்பிய புத்தக ஜாபிதா இவ்வூர் ஜில்லா கல்வி அதிகாரியின் சம்மதம்பெற்று இன்னும் வரவில்லை. இதனால் குழந்தைகளும் பெற்றோர்களும் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

திருவோசகர்ணம்
8—7—58 அ. நடேசன்

உருப்படாத இறக்குமதிக் கொள்கை

நம் சர்க்கார் குழந்தைகள் க்ஷேம நலன் என்று பலமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். நம் பிரதமர் நேரு அவர்கள் குழந்தைகளிடம் அதிக அன்பு கொண்டவர் என்பதைப் பறைசாற்ற அவர் பிறந்த தினத்தைக் "குழந்தைகள் தினம்" எனக் கொண்டாடுகிறார்கள். போதாக்குறைக்குத் தனித் தபால் தலைகள் வேறு அச்சிடுகிறார்கள். ஆனால் உண்மையில் குழந்தைகளின் உணவு பற்றிச் சர்க்காரோ வேறு எந்தத் தலைவர்களோ கவனித்ததாகத் தெரியவில்லை.

குழந்தைகளுக்கு அவசியமான பால் உணவு கிடைப்பது மிக அரிதாகி விட்டது. ...x, Glaxo, Cow & Gate, Nestomalt, ...milk இன்னும் எத்தனையோ ரகம் ...ம், ஒன்றைக்கூடக் காண்பது, ஜுப்பசிப் ...போல் ஆகி விட்டது.

...களில் நேரடியாகக் கேட்டால் இல்லை ... உடனே பதில். பின்னர் பொரிகடலை ...வானாலும் "இருக்கிறது" என்றும், விலை கேட்டால் இரண்டரைப் பங்கு விலை கூறுகிறார்கள். காரணம் கள்ளமார்க்கட்டு அவர்களைத் தழுவியிருப்பதே.

விரைவில் அரசாங்கம் தங்கள் உருப்படாத கொள்கையை மாற்றிக் கொண்டால், ஏங்கித் தவிக்கும் எத்தனையோ எதிர்கால இந்தியப் பிரஜைகள் பிழைப்பார்கள். இல்லையேல் தாய்மார்கள் மனம் நொந்து இடும் சாபம் அரசாங்கத்தைச் சும்மா விடாது.

புதுக்கோட்டை
9—7—58 எஸ். சுவாமிநாதன்

மந்திரக் கிழவனைப் பற்றிக் கபாடபுர மக்களில் பலர் அறிந்திருந்தார்கள். வீராங்கனின் தாத்தாவுக்கும் அவனைப் பற்றித் தெரியும். அவனை எல்லோரும் மந்திரவாதி மம்மாத்து என்று அழைப்பார்கள். மம்மாத்து மிகவும் பொல்லாதவன். அவனால் கஷ்டப்பட்ட மக்களும் உயிர் துறந்த மக்களும் கொஞ்ச நஞ்சமில்லை. அவனுக்கு இந்த உலகம் முழுதும் தன் இஷ்டப்படி ஆட்டி வைக்க ஆசை உண்டாயிற்று. எல்லோரும் தன்னைக் கண்டு பயந்து நடுங்க வேண்டுமென்றும், தன் ஆணைக்குக் கட்டுப்படவேண்டுமென்றும் விரும்பினான்.

பாலர் மலர் குமரி முத்து

அந்த ஆசை நிறைவேறக் குமரிக் கடலில் இருக்கும் குமரி முத்தின் உதவி தேவையாக இருந்தது. ஆனால் அதை எடுக்க மந்திரவாதி எவனாலேயும் முடியாது. ஏனென்றால் மந்திரம் தெரிந்த ஒருவன் அந்த முத்தை முதன் முதலாகத் தன் கையினால் தொட்டால் பாகாம் உருகி, இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். எனவே, பிறரைக் கொண்டே காரியத்தைச் சாதிக்க வேண்டிய நிலை மம்மாத்துக்கு உண்டாயிற்று. இதனால் பலரைக் குமரிக் கடலுக்கு அனுப்பி வைத்தான். ஆனால் அவன் அனுப்பிய அத்தனை பேர்களும் உயிரை இழந்து விட்டார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் வீராங்கன் தற்செயலாக அங்கு வந்து சேர்ந்தான்.

வீராங்கனைப் பார்த்தவுடனேயே மந்திரவாதிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. சிறுவனாக இருந்தாலும் நிச்சயம் அவன் வெற்றியோடு திரும்புவான் என்று எண்ணினான். ஒருவனிடம் குமரி முத்து இருந்தால் மந்திர சக்தியைக் கொண்டு அவனை ஒன்றுமே செய்ய முடியாது. ஆகவே, வீராங்கன் முத்தை எடுத்துக் கொண்டு தங்கத் தீவுக்கு வராமல் வேறு வழியாகக் கபாடபுரத்துக்குச் சென்று விட்டால் அவனை அக்னி வெடியால் கொன்று பழி தீர்த்துக் கொள்ள விரும்பினான் கிழவன்.

அக்னி வெடியை மந்திரசக்தியால் தயாரிக்கவில்லை. மூலிகையால், தன் மூளையைக் கொண்டு தயாரித்திருந்தான். அதைத்தான் கறுப்புக் குடுவையில் அடைத்து வீராங்கனிடம் கொடுத்திருந்தான். அதைத் திறந்தவுடன் அக்னி வெடி வெடித்து எதிரே இருக்கும் மனிதர்களைக் கொன்று விடும்.

வீராங்கனுக்கு இவ்வளவு விளக்கமாகத் தெரியா விட்டாலும் அந்தக் குடுவைக்குள் உயிரைக் குடிக்கும் மருந்து இருப்பது என்பது நிச்சயமாகி விட்டது. உடனே சுறுசுறுப்பாக இடையிலிருந்த நான்கு குடுவைகளையும் அறுத்தெடுத்தான். கறுப்புக் குடுவையை முக்கால்வாசி திறந்தான். பிறகு—

தன் பலம் கொண்ட மட்டும் கிழவனின் முகத்தைக் குறி வைத்து அதை வீசி எறிந்தான். அவன் குறி தப்பவில்லை. முக்கால் வாசி திறந்திருந்த குடுவை கிழவனின் முகத்தில் மோதிய வேகத்தில் முழுதும் திறந்து கொண்டது அடுத்த கணம்—



''டடதடும்......'' என்ற அதிர்வேட்டுப் போன்ற பெரு முழக்கம் காது செவிடாகும்படி எழுந்தது. பளிச்சென்று ஒரு மின்னல் தோன்றியது. வானை முட்டும்படி புகை மண்டலம் எழுந்தது. இதற்கிடையில் 'வீல்...' என்ற ஒரு பரிதாபகரமான, பயங்கரமான ஓசை கேட்டது.


"டேய், பயலே! உன்னைத் தீர்க்க நினைத்த என்னையே கடைசியில் தீர்த்துக் கட்டி விட்டாயே!" என்று சத்தியபடியே தன் உயிரை விட்டான் மந்திரக் கிழவன். அவன், தான் தயாரித்த விஷ மருந்து தனக்கே யமனாக முடியும் என்று எதிர் பார்க்க வில்லை. கேடு நினைப்பவன் கெடுவான் என்பது மந்திரவாதிக் கிழவனின் விஷயத்தில் உண்மையாகி விட்டது. வெகு நேரம் சிரமப்பட்டுக் கிழவரின் கையில் சிக்காமலிருக்க வீராங்கன் நீந்தியதில் அவன் கை சளைத்து விட்டது. உடலும் சோர்ந்து விட்டது.

'அடடா! இத்தனை சிரமப்பட்டுக் குமரி முத்தைக் கொண்டு வந்தும் அது யாருக்கும் பயன்படாமல் என்னோடு கடலில் மூழ்கப் போகிறதே! நான் கபாடபுரம் போகா விட்டாலும் பரவா யில்லை. இந்தக் குமரி முத்தாவது அரசன் கையில் கிடைத்தால் தேவலையே!' என்று எண்ணினான். நேரம் செல்லச் செல்ல அவன் மனம் சோர்ந்து போய்விட்டது.

வீராங்கன் குடல் தெரிக்க நீந்தி வெகு தூரம் வந்துவிட்டான். அதற்கு மேல் அவனால் நீந்த முடியவில்லை. கையும் காலும் துவண்டு போயின. நினைவு மங்கியது. அடுத்த நிமிஷம் 'குபுக்' கென்று நீருக்குள் மூழ்கிப் போனான். அதே சமயத்தில் இரண்டு வலிய கரங்கள் அவனைப் பிடித்து அன் பாடு தூக்கிக் கொண்டன.

சில்லென்ற காற்றும் குளிர்ந்த நீரும் வீராங்கனின் மூர்ச்சையைத் தெளிவித்தன. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான்.





ஜூன் 26-ந் தேதி கடைக்கல் விநாயகநல்லூர் எஸ்டேட் அதிபர் திரு கே. மருதநாயகம் அவர்களின் புதல்வர் திரு துரைராஜுக்கும் செள ஜமணிக்கும் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமகள் செங்கோட்டை திரு என். கிருஷ்ணசாமி கரையாளர் அவர்களின் பேத்தியும், திரு ஏ. ராமகிருஷ்ணனின் புதல்வியுமாவார். திருமணத்துக்கும், மாலையில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் மந்திரிகளும், பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் வந்திருந்து சிறப்பித்தனர். வாழ்க, ஜமணி - துரைராஜ்!

அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. எதிரே அவன் தாத்தா — அவன் அம்மாவைப் பெற்றெடுத்த அருமைத் தாத்தா—புன்னகை தவழ வீராங்கனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கைகள் படகின் துடுப்பை வலித்துக் கொண்டிருந்தன. வீராங்கனுக்கு ஒரு புதிய பயம் ஏற்பட்டது. சொல்லாமல் குமரிக் கடலுக்குப் புறப்பட்டதைக் குறித்துத் தாத்தா என்ன சொல்லுவாரோ என்று பயந்தான்.

ஆனால் தாத்தாவின் முகத்தில் தவழ்ந்த புன்னகையைப் பார்த்தவுடன் அவன் பயம் பறந்தோடி விட்டது. "தாத்தா...!" என்று ஆவலோடு கூப்பிட்டான் வீராங்கன்.

அதற்கு, "அதிகம் பேசாதே. ரொம்பவும் களைப்பாக இருக்கிறாய்" என்றார் தாத்தா.

"இல்லை, தாத்தா! உங்களைப் பார்த்தவுடனேயே என் களைப்பெல்லாம் போய் விட்டது. அது சரி! நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? என்னால் நம்ப முடியவில்லையே! ஒரு வேளை......"

"மந்திரவாதி மம்மாத்துத்தான் இப்படி உருவம் எடுத்து வந்திருக்கிறானோ என்று எண்ணுகிறாயா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மந்திரவாதி யமலோகம் போய் வெகு நேரம் ஆகி விட்டது. முதலில் உன் கதையைச் சொல்லு. பிறகு என் கதையைச் சொல்கிறேன்."

தாத்தா இப்படிக் கூறியதும் வீராங்கன் தான் புறப்பட்டதிலிருந்து கடைசியில் மந்திரவாதியின் முகத்தில் கறுப்புக் குடுவையை வீசியது வரை விளக்கமாகவும் சுவையாகவும் சொல்லி முடித்தான்.

தாத்தா எல்லாவற்றையும் கேட்டு விட்டுக் கண்களில் துளிர்த்த நீரை மெதுவாகத் துடைத்துக் கொண்டார். வீராங்கனைத் தம் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

வீராங்கன் மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளித்தான். பின்பு தன் இடையில் பத்திரப்படுத்தியிருந்த குமரி முத்தை எடுத்து அவரிடம் காண்பித்தான். ஒரு விளாம்பழத்தின் அளவும், கண்ணைக் கூசச் செய்யும் பிரகாசமும், மினுமினுப்பும் கொண்ட அந்தக் குமரி முத்தைப் பார்த்து விட்டு ஒரு கணம் அப்படியே அசந்து விட்டார் தாத்தா. பிறகு அதை வீராங்கனிடமே கொடுத்து விட்டுத் தம் கதையை ஆர்வத்துடன் சொல்லத் துவங்கினார்.

"அன்று விடியற்காலையில் உன்னைப் பக்கத்தில் காணாததும் எனக்கு உயிரே போய் விட்ட மாதிரி இருந்தது. உடனே உன்னைத் தொடர்ந்து நீ போயிருக்கும் இசையை யூகித்துக் கொண்டு வெகு வேகமாக வந்தேன். அப்படி வந்தும் உன்னைப் பார்க்க முடியவில்லை. உன் குதிரையைத் தான் பார்த்தேன். கடற்கரையில் கிடந்த படகை எடுத்துக் கொண்டு நீ புறப்பட்டு விட்டாய். நானும் ஒரு படகை எடுத்துக் கொண்டு கடலில் வெகு தூரம் வந்தேன். உன்னைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

"அதன் பிறகு திரும்பிப் போய் உன் அம்மாவிடம் நீ காணாமல் போனதைத் தெரிவிக்க எனக்குத் துணிவு வரவில்லை. ஆதலின் உன்னைக் கண்டு பிடிக்காமல் ஊர் திரும்புவதில்லை என்று சபதம் செய்து கொண்டேன். அன்றையிலிருந்து இப்படகிலேயே உன்னைத் தேடித் திரிந்து கொண்டிருக்கிறேன். இன்று தான் என் சபதம் நிறைவேறியது. நீ நீந்தி வருவதைத் தூரத்திலிருந்தபடியே கவனித்து விட்டேன். ஆனால் அருகில் வருவதற்குள்ளாக நீரில் மூழ்கி விட்டாய். அப்புறம் தான் உன்னைத் தூக்கிப் படகில் படுக்க வைத்தேன். யார் செய்த புண்ணியத்தாலோ அந்த நயவஞ்சக மந்திரவாதியிடமிருந்து தப்பி விட்டாய்."

தாத்தா கூறி முடித்ததும் தூரத்தில் கபாடபுரத்தின் கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும் வான்முகட்டில் தென்படத் துவங்கின. (அடுத்த இதழில் முடியும்)



நெல்லையப்பர் கோவில் வாசல் முன் நின்று கையைக் காட்டி வழி காட்டிக் கொண்டிருந்தார், போலீஸ் பொன்னுசாமி பிள்ளை. இன்று நிற்கிறார்? இப்படியே பதினைந்து வருடங்களாகத்தான் நிற்கிறார். நானும் கோவில் மண்டபத்தில் வெற்றிலை பாக்குக் கடை வைத்துப் பதினைந்து வருடங்கள் ஆகப் போகின்றன. அந்த வருடந்தான் பொன்னுசாமி பிள்ளையும் போலீஸ் வேலையில் சேர்ந்து 'பீட்' கொடுக்கும் அலுவலில் நுழைந்தார்.

''வேலுப்பிள்ளை! நயம் பொடி வந்தாச்சா?'' என்று 'பீட்'டில் நின்று கொண்டு உரக்கக் குரல் கொடுத்தார், பொன்னுசாமி பிள்ளை.

''வந்தாச்சு. இப்பத்தான் வந்திருக்கு. பையனிடம் கொடுத்து அனுப்பட்டுமா?'' என்று கேட்டேன்.

''வேண்டாம்! வேலை முடியப் போகிறது. நானே வாரேன்'' என்றார். உச்சி வேளை வந்ததும், வேலை முடிந்து என் கடைக்கு வந்து சேர்ந்தார்.

''உஸ்! அப்பாடா! என்ன வெய்யில்! ஆளை வறுத்து எடுத்து விடும்போலிருக்கே!'' என்று முனகிக் கொண்டே கடைப் பெஞ்சியில் உட்கார்ந்தார். தொப்பியைக்கழற்றிப் பக்கத்தில் வைத்தார். தலையைத் தடவிக் கொண்டார்.

''முதல்லே ஒரு டம்ளர் தண்ணீர் கொடும்'' என்றார்.

''அண்ணாச்சி! நன்னாரி சர்பத் புதுசா உடைச்சிருக்கேன். போட்டுத் தரட்டுமா? கூட எலுமிச்சம் பழமும் போட்டுத் தரேன். இந்த வெய்யிலுக்கு இதமாயிருக்கும்'' என்றேன்.

''அதெல்லாம் ஒண்ணும் வேணும். வெறுந்தண்ணி மாத்திரம் எனக்குத் கொடும்'' என்றார்.

ஒரு கண்ணாடித் தம்ளரில் மண்பானை நீரை மொண்டு கொடுத்தேன். பாதித் தம்ளரை ஒரே மடக்கில் காலி செய்து விட்டு மீதிப் பாதியைக் கையில் கொட்டி முகத்தைக் கழுவிக் கொண்டார்.

பிறகு, நயம் பொடியை ஒரு மட்டையில் தட்டி அவரிடம் நீட்டினேன். அதே சமயம் மண்டபத்தைக் கடந்து ஒரு சிவப்புக் கார் வேகமாகச் சென்றது. அது எங்களைக் கடக்கவும் பொன்னுசாமி பிள்ளை, ''வே, வேலுப்பிள்ளை!'' என்று பலமாக இரைந்தார்.

திடுக்கிட்டு நிமிர்ந்தேன் நான்.

''காரிலே யாரு போகிறதுன்னு தெரியுதா?'' என்றார் ஆச்சரியத்துடன்.

நான் விழித்தேன்

''நம்ம ஆறுமுகம் போகிறான்.''

''எந்த ஆறுமுகம்?'' என்றேன் ஒன்றும் புரியாமல்.

''அவன்தான்; கொழும்புக்குப் போனானே, அந்த ஆறுமுகம்தான்!''

''யாரு? உங்க கூட்டாளியா? எப்போ வந்தாரு கொழும்பிலிருந்து?''

''எப்போ வந்தானோ? போய்ப் பதினைந்து வருஷமாச்சு. கார் யார் காரோ? ஐம்முன்னு சொந்தக் கார் மாதிரி சாஞ்சுக்கிட்டுல்லே போறான்!''

''அவங்க காருதானோ என்னவோ?'' என்றேன் நான் மெதுவாக.

''அட நீர் ஒண்ணு. அவனுக்குக் காரெல்லாம் ஏதய்யா? கொழும்புக்குப் போகிறபோது என்னிடம் ஐம்பது ரூபாய் வாங்கிக்கிட்டுப் போனான்.''

''அதுதான் தெரியுமே. அங்கே போய்ச் சம்பாதிச்சிருப்பாரு!''

''இவன் சம்பாதிச்சுக் கிழிச்சான். சரி, வேலுப்பிள்ளை! எனக்கு நேரமாச்சு. எவ்வளவு பணம் பாக்கி இருக்கு? அதை மட்டும் சொல்லும்.''

''இன்னிக்குக் கொடுத்த பொடியோடு சேர்த்து, மூணு ரூபா நாலணாவரையும் ஆகியிருக்குது'' என்றேன், தலையைச் சொறிந்துகொண்டு.

''சாயங்காலம் கொடுக்கிறேன்'' என்று கூறினார் அவர்.

''அதுக்கென்ன? இப்போ அவசரமா? மெதுவாகவே கொடுங்க'' என்றேன் குழைந்து கொண்டு.

தொப்பியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, தெருவில் நடந்தார் பொன்னுசாமி பிள்ளை.

• • •

மறுநாள் மத்தியானம் பொன்னுசாமி பிள்ளை 'பீட்'டை முடித்துவிட்டு என் கடையில் வந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் களை இல்லை.

''என்ன அண்ணாச்சி! முகம் ஒருமாதிரி வாடியிருக்கே?'' என்று விசாரித்தேன்.

''எல்லாம் இந்த வெய்யில்தான். கொஞ்சம் தண்ணீர் கொடும்'' என்றார். தண்ணீரை நீட்டினேன். அதைக் கையில் வாங்கிக் கொண்டே பேசினார்:

''விஷயம் தெரியுமில்லே. ஆறுமுகம் பத்து லட்சமில்லே கொண்டு வந்திருக்காரும். நேற்றுப் போனது அவனுடைய காரில்தானும்.''

அவர் குரலில் அங்கலாய்ப்பு இருந்தது. ''பார்த்தீர்களா! நான்தான் நேற்றே சொன்னேனே. உங்களுக்கு ஐம்பது ரூபாய் தரணுமில்லே!'' என்றேன் மெதுவாக. அவருள் எரிந்து கொண்டிருந்த நெருப்பை மெதுவாகக் கிளறி விட்டேன்.

''ஆமாம்! சும்மா விட்டு விடுவேனா? கறந்துவிட மாட்டேன்'' என்றார். குரலில் கடுமையிருந்தது.

''இப்போ உங்க ஐம்பதெல்லாம் அவருக்குப்பெரிசா! அவர்தான் லட்சாதிபதியாச்சே!'' என்றேன். கூர்ந்து அவரைக் கவனித்தேன். நான் பேசியது அவருக்குப் பிடிக்கவில்லை. முகம் சுளித்தது.

''அவன் லட்சாதிபதியாயிருந்தால் எனக்கென்ன? நம்ம ரூபாயை வட்டியும், முதலுமா வாங்கிடுவேன்'' என்றார் தெருவைப் பார்த்துக் கொண்டு.

''இந்தாங்க பொடி. பொடியிலே வாசனை சேர்க்கட்டுமா?'' என்றேன் பேச்சை வேறு பக்கம் திருப்ப.

''அப்பாடி! அதெல்லாம் நமக்குக் கட்டாது'' என்றார்.

''என்னங்க! உங்களுக்கு ஒரு ஆம்பிளைப் பிள்ளைதானே? தாராளமாகச் செலவழிக்கலாமே?'' என்றேன்.

''அவனுக்குப் படிப்புச் செலவுக்குத்தான் அத்தனை பணமும் ஆகிப் போகுதே!'' என்றார். அவர் முகத்தில் தெளிவு ஏற்பட்டது.

''பையன் என்ன படிக்குது?''

''படிப்பெல்லாம் முடிஞ்சு போச்சு. ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதியிருக்கான். நெல்லையப்பர் புண்ணியத்திலே பாஸ் ஆச்சுன்னா நல்லாயிருக்கும்'' என்றார். அந்தப் பேச்சில் கவலையுமிருந்தது; ஒரு பெருமையுமிருந்தது.

''பாஸ் ஆனால் என்ன வேலை கிடைக்கும்? சப் இன்ஸ்பெக்டர் வேலையா?'' என்று கேட்டு என் அறியாமையை வெளியிட்டேன்.

பொன்னுசாமி பிள்ளை விழுந்து விழுந்து சிரித்தார். ''சப்-இன்ஸ்பெக்டர் வேலையா? பாஸ் ஆச்சுன்னா கலெக்டர் வேலை கிடைக்கும்'' என்றார், நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டே. நான் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தேன். ''கலெக்டர் வேலையா? அப்பாடியோ! அப்படின்னா கொழும்பு ஆறுமுகம் பிள்ளையின் கடைக்குட்டி மகளை உங்க பையனுக்குப் பேசலாமே?'' என்றேன்.

''அட, சீ! நீர் ஒண்ணு! அவன் வீட்டிலே எவன் பொண்ணு கட்டுவான்? நேற்று வரைக்கும் வகையற்று இருந்தவன். பணம் வந்தால் மட்டும் போதுமா?'' என்றார். எனக்குள் நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டேன்.

அவர் பொடியை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஆறுமுகம் பிள்ளையின் இரண்டாவது மகளுக்குக் கலியாணம் நடந்தது. கலியாண வீட்டுப் பாதுகாப்புக்கு இன்ஸ்பெக்டரால், பொன்னுசாமி பிள்ளை அனுப்பி வைக்கப் பட்டார். இதை விட அவரை வேலையிலிருந்து நீக்கியிருந்தால் கூட அவர் கவலைப்பட்டிருக்க மாட்டார்.

''அந்தத் தறுதலைப் பயல் வீட்டுக் காவலுக்கு என்னைப் போட்டுட்டான் அந்த இன்ஸ்பெக்டர்! சேச்சே, இதை விடக் கேவலம் வேறு என்ன?'' என்றார் வயிற்றெரிச்சலுடன்.

''அதனாலென்ன? உங்க கடமையை நீங்க செய்தீங்க'' என்றேன்.

''என்ன கடமை வேண்டியிருக்கிறது? அந்தப் பயல் என்னைத் தெரிஞ்சுகிட்ட மாதிரியாவது காட்டிக் கிட்டானா? நானும் விட்டேனா, என்ன? 'ஆறுமுகம், என்னைத் தெரியலையா?' என்று கேட்டதற்குக் காதில் வாங்காதது மாதிரி இருந்து விட்டான். அங்கேயே என்னுடைய ஐம்பது ரூபாயைக் கீழே வை என்று மறிச்சிருப்பேன். அவன்தான் விவஸ்தை கெட்டிருக்கான்னா, நானுமா அப்படி இருக்கணும்? கொழும்புத்துட்டு இருக்கிற தெம்பிலே இருக்கிறான். ஆனைக்கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வராமலா போயிடும்? அப்போ

பார்த்துக்கறேன் இவனை!'' என்றார். கோபத்தில் அவர் மீசை துடித்தது.

* * *

ஆறுமுகம் பிள்ளையும், பொன்னுசாமி பிள்ளையும் சிறு பிராயத்திலிருந்தே நண்பர்கள். இருவரும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் பிறந்தவர்களாம்! கூடிப் போனால் ஒன்று அல்லது இரண்டு நிமிஷங்கள் முன்னே பின்னே வித்தியாசம் இருக்கும். ஒன்றாகவே இருவரும் எட்டாவது வகுப்புவரை படித்தார்கள். பிறகு, பொன்னுசாமி பிள்ளை போலீஸ் வேலைக்கு வந்து விட்டார். ஆறுமுகம் பிள்ளை சுருட்டுக் கடையை ஆரம்பித்தார். பொன்னுசாமி பிள்ளைக்குத் தாம் போலீஸ் என்பதில் பெருமை. சுபாவத்தில் ஆசாமி ஆட்டுக்குட்டியாக இருந்தாலும், வெளிப் பார்வைக்குச் சிங்கமாகத் தோன்றவேண்டும் என்பதற்காக, மீசையை வளர்த்துக் கொண்டார். முதலில், அந்த மீசைக்கு அவருடைய மனைவி செல்லம்மாளின் உத்தரவு கிடைக்கவில்லை. கடைசியில், எப்படியோ பொன்னுசாமி பிள்ளை அனுமதி வாங்கி விட்டார். போலீஸ் உத்தியோகமில்லையா?



பொதுவாகப் போலீஸுக்கும் உபாத்தியாயருக்கும் வேறு எந்த விஷயங்களில் தரித்திரம் இருந்தாலும், வருஷத்துக்கு ஒரு பிள்ளை வீதம் பெருகுவதில் தரித்திரமே கிடையாது. ஆனால், பொன்னுசாமி செய்த தவமோ அல்லது செல்லம்மாள் செய்த புண்ணியமோ, ஒரே ஒரு ஆண் குழந்தைக்குப் பிறகு வேறு குழந்தை பிறக்கவில்லை.

ஆனால், ஆறுமுகம் பிள்ளையின் விஷயம் வேறு. ஐந்து பெண்களைப் பெற்றார். அதற்காக ஆள், அசந்துவிடவில்லை. 'மரம் வைத்தவன் தண்ணீர்விடுவான்' என்ற பரந்த மனப்பான்மையில் காலத்தை ஓட்டினார்.

சுருட்டுக் கடை ஆறுமுகம் பிள்ளை என்றால், திருநெல்வேலியில் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். நாலு முழம் வேஷ்டியை இடுப்பில் சுற்றியிருப்பார். கால் கரண்டைக்கு ஒரு சாண் உயர்ந்தே இருக்கும். தோளில் ஒரு சிட்டித் துண்டு, மடித்த பாணியில் கிடக்கும். இடுப்பில் பொடி மட்டை செருகியிருப்பார். உடம் பெல்லாம் பட்டை பட்டையாக விபூதி துல்லியமாகத் துலங்கும். அவருடைய கரிய மேனிக்கும், வெண்ணீறுக்கும் நல்ல பொருத்தம். மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், வெய்யில் காய்ந்தாலும், காயா விட்டாலும், அவருடைய கையில் விரித்த குடை இருக்கும். அவருக்குப் படாடோபம் என்பது கொஞ்சமும் பிடிக்காது. மத்தியான உணவு என்ன என்று கேட்டாலே போதும், அவரது எளிமை விளங்கும். பழைய சாதமோ அல்லது முந்தின நாள் அவித்த இட்டிலியோதான் அவர் மத்தியானச் சாப்பாடு.

வருங்காலத்தை நினைக்கும்போது, ஆறுமுகம் பிள்ளைக்கு அடிவயிறு கலங்கும். அப்போதெல்லாம் கொழும்பிலிருந்து திரும்பும் ஆட்களை உன்னிப்பாகக் கவனித்தார். ஷவரக்கத்தியை எடுத்துக் கொண்டு கொழும்புக்குச் சென்றவன் கூடத் திரும்பும்போது பட்டு ஜிப்பாவுடனும், ஜரிகை வேஷ்டியுடனும் வருவதைக் கண்ட ஆறுமுகம் பிள்ளைக்கு, மனத்தில் ஆசையின் உறுத்தல் தோன்றியது. இருந்தாலும் இலேசில் ஆறுமுகம் பிள்ளை கடல் கடந்துவிட மாட்டார். அவருடைய ஜாதகம் கடல் கடக்கக் கூடாது என்று கூறுவதாக அவ்வவா சொல்லி வைத்தார் தேரடி ஜோசியர். ஆனால், கடன்காரன் நெருக்கவே வேறு வழியில்லாமல் சுருட்டுக் கடைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுக் கடன்காரர்களுக்கு வெறும் கையைக் காட்டிவிட்டு ரயிலேறினார். அப்போது, அவருக்கு ஐம்பது ரூபாய் கொடுத்து உதவியவர் நம்முடைய போலீஸ் பொன்னுசாமி பிள்ளைதான். யாருக்கும் ஆறுமுகம் பிள்ளை கொழும்புக்குப் போவது தெரியாது. அதனால் தான், பொன்னுசாமி பிள்ளையும் ஐம்பது ரூபாய் கொடுத்தார். எப்படியும் வசூலித்து விடலாம் என்ற தைரியந்தான். ஆசாமி கடல் கடந்து விடுவார் என்று தெரிந்திருந்தால், பொன்னுசாமிபிள்ளை பணமே கொடுத்திருக்கமாட்டார். ஆறுமுகம் பிள்ளையும் கப்பலேறியிருக்க மாட்டார்; காளி வாங்கியிருப்பார். ஊர்



எல்லோருக்கும் தெரியும்—
ஒவ்வொரு ப்ரூக் பாண்ட் பாக்கெட் டிலிருந்தும் உங்களுக்கு அதிகப்படியான, ருசியான தேயிலே கிடைக்கிறது
...மேலும் தோட்டத்திலிருந்து கடைகளுக்கு துரிதமாக அனுப்பப்படுவதாலேயே ப்ரூக் பாண்ட் தேயிலே புத்தம் புதியதாக இருக்கிறது
...மேலும் ஒவ்வொரு நாளும் 5 கோடி கோப்பை களுக்கு அதிகமாகவே ப்ரூக் பாண்ட் தேயிலே அருந்தப்படுகிறது
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலேயையும் விட அதிகப்படியான ஜனங்கள் ப்ரூக் பாண்ட் தேயிலேயையே அருந்துகிறார்கள் !
Brooke Bond Roses Blend
Brooke Bond Leaf Tea

சுற்றும் பண்டாரக்கோஷ்டியில் ஒருநபர் அதிகமா யிருக்கும்.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ரயிலேறியபோது, ஆறுமுகம் பிள்ளையை அதிர்ஷ்டம் துரத்தியது.

அநேகமாக, கொழும்புக்குப் பிழைப்பை நடத்தச் சென்று, பிறகு, பணத்தோடு திரும்பியவர்களெல்லாம், போகும்போது மேல் துண்டை மட்டும் உதறித் தோளில் போட்டுக்கொண்டு போனவர்கள்தான். வருங்காலத்தைத் திருச்செந்தூர் முருகன்மீது சுமத்தி விட்டுத்தான் கிளம்புவார்கள். அந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான் நம் ஆறுமுகம் பிள்ளை அவர்களும்.

கொழும்பு போய்ச்சேர்ந்தார் கனம் ஆறுமுகம் பிள்ளை. திருநெல்வேலிப் பிள்ளை ஒருவருடைய கிட்டங்கியில் வரவு செலவு கணக்கு பதியும் உத்தியோகத்தில் அமர்ந்தார். ஒரே ஊர்க்காரர் என்ற அனுதாபத்தில் கிடைத்த ராஜ உத்தியோகம் அது. கொழும்பிலும், ஆறுமுகம் பிள்ளை, ஆறுமுகம் பிள்ளையாகத் திகழ்ந்தார். அதாவது, இடையில் மல்வேஷ்டி, தோளில் சிட்டித் துண்டு, உடலில் பட்டை விபூதி, கையில் எப்போதும் விரித்த கொழும்புக்குடை. சாப்பாட்டைப் பக்கத்து "சைவாள் கிளப்பில்" முடித்துக் கொண்டார். அடிக்கடி ஊர் ஞாபகம் வந்து உறுத்தும். மனைவியின் நினைவில் வாடுவார்.

இவர் சேர்ந்த நேரமோ அல்லது முதலாளியின் ராசி பலனே, அந்தக் கிட்டங்கி விருத்தி யடைந்தது. ஆறுமுகம் பிள்ளையின் சம்பளத்திலும், ஐந்து ரூபாய் விருத்தி யடைந்தது. கிடைத்தது போதும் என்ற நிறைவில் திருச்செந்தூர் முருகனை அழைத்து ஒரு கொட்டாவியையும் விட்டு விட்டு நிச்சிந்தையாக இருக்கும் ஒரு ஜென்மம் ஆறுமுகம்பிள்ளை. அவர் பாடும் கழிந்து ஊருக்குப் பதினைந்து ரூபாயும் அனுப்பினார். அது போதாதா? ராஜபோகமாயிற்றே! அவருக்கும் பரம திருப்தி.

இது வரையில்தான் அவரைப் பற்றி எல்லாருக்கும் தெரியும். ஆறு வருடங்களுக்கு அவரைப்பற்றிய தகவலே இல்லை. பிறகு ஆறு வருடங்கள் கழித்துத் தம் மாமனார் வீட்டிலிருந்த தம் மனைவியையும், குழந்தைகளையும் கொழும்புக்கு அழைத்துக் கொண்டார் என்ற செய்தி கிட்டியது. அதன் பிறகு ஒன்பது வருடங்களுக்குத் தகவலே இல்லை. யுத்தம் ஆரம்பமாகிய போது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இந்தியாவைப் பார்க்க ஓடி வந்த தனவந்தர்களின் கூட்டத்தில் நம் ஆறுமுகம் பிள்ளை தோன்றவில்லை. என்ன நடந்ததோ? அவர்தான் அதிர்ஷ்டத்தைத் துரத்திப் பிடித்தாரோ? அல்லது அதிர்ஷ்டந்தான் அவரைத் துரத்திப் பிடித்ததோ, தெரியவில்லை. அதிர்ஷ்டமும், ஆறுமுகம் பிள்ளையும் இணைந்து விட்டார்கள். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு, இடரென்று குடும்ப சமேதராகத் தோன்றினார் ஆறுமுகம்பிள்ளை. சாதாரண ஆறுமுகம்பிள்ளையாகவா? பத்து லட்சத்துக்கு அதிபதியாகக் காட்சியளித்தார்.

பத்து லட்சமா என்று திகைக்கிறீர்களா? பத்து லட்சந்தான். யுத்த காலத்தில், கிட்டங்கி முதலாளி உயிரை மட்டும் விரும்பியதால் தம் ஊருக்குத் திரும்பி விட்டார். ஆனால் ஆறுமுகம் பிள்ளைக்கு உயிரைவிடப் பணம் பெரிதல்லவா? கிட்டங்கியை முதலாளியின் பெயரால் அவர் நடத்தினார். யுத்தகால லாபத்தையும் தம் பெயரிலேயே வரவு வைத்துக் கொண்டார். யுத்தம் முடியவும், கிட்டங்கி முதலாளி வாரிசில்லாமல் தமிழ் நாட்டில் இறக்கவும் பொருத்தமாயிருந்தது. கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு தமிழ் நாட்டுக்கு வந்து விட்டார் ஆறுமுகம் பிள்ளை. இது அவருடைய திறமையா, அல்லது சந்தர்ப்பத்தின் சூழ்ச்சியா என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டாம். இப்போதும் ஆறுமுகம் பிள்ளையின் பெயரில் பத்து லட்சத்துக்குச் சொத்து இருக்கிறது.

கிட்டங்கி முதலாளிக்கு வாரிசு என்று எவனாவது இருந்து, சொத்து மீது தாவா செய்வானோ என்று உள்ளூற நடுங்கினார் ஆறுமுகம் பிள்ளை. பிறகு, நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததும், தாமும் பயம் தெளிந்து சுதந்திரமாக நெல்லை மண்ணில் கால் வைத்தார். அவர் சொத்துக்கு உரிமை கொண்டாடி எவனும் வந்து விடவில்லை. அதற்குத் தான் அதிர்ஷ்டம் அவரைச் சுற்றி வளைத்திருக்கிறதே, என்ன பயம்?

"என்னடா! ஏன் அழறே?"

"எங்க அண்ணனுக்குப் பள்ளிக்கூடம் ஞாயிற்றுக்கிழமை லீவு விட்டிருக்கிறாங்களாம்! ஆனால் எனக்கு இல்லே!"



"ஆமாம்! அதற்கு நீ அழுவானேன்?"

"என்னை இன்னும் பள்ளிக்கூடத்திலேயே சேர்க்கலேயே?"

லட்சம், பத்து வந்து என்ன செய்ய! ஆறுமுகம் பிள்ளை ஆறுமுகம் பிள்ளையாகத்தானிருந்தார். அதே நாலுமுழ மல்வேஷ்டி, தோளில் சிட்டித் துண்டு. இடுப்பில் பொடி மட்டை, உடலில் பட்டை பட்டையாக விபூதி. ஆனால் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. இப்போது நடக்க மாட்டார். கார் சவாரி தான். கையில் குடை இருக்காது.

திடீரென்று ஒரு நாள் பொன்னுசாமி பிள்ளையைக் காணவில்லை. 'பீட்'டில் வேறு போலீஸ் நின்றுகொண்டிருந்தார். சில சமயங்களில் இடம் மாற்றலாகிப் போவார். அதுபோல் போயிருக்கிறார் என்று நினைத்தேன். ஆனால் வேலையிலிருந்தே விலகி விட்டார் என்று புதிதாக வந்த போலீஸ் கூறினார். அதிர்ச்சியடைந்தேன். பொடி வாங்கிய பாக்கி, எட்டு ரூபாய் ஆறே முக்காலணா இருந்தது. கடைசியில் அவர் என் தலையிலேயே கையை வைத்து விட்டுச் சென்று விட்டாரே ஆசாமி!

அவருடைய மகன் கலெக்டராகி விட்டாலும். அதன்பிறகு அவர் வேலை செய்துதான் பிழைக்க வேண்டும் என்றில்லை அல்லவா? அவர் எப்படியேனும் போகட்டும். கவலையில்லை. எனக்குத் தர வேண்டிய பாக்கியைத் தராமல் அவர் போய் விட்டாரே!

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, திருநெல்வேலியில் பிரமாதமான திருமணம் ஒன்று நடந்தது. யாருக்கு என்று நினைக்கிறீர்கள்? கொழும்பு ஆறுமுகம் பிள்ளையின் மகள் லலிதாம்பாளுக்கும், பொன்னுசாமி பிள்ளையின் ஏக புத்திரன், கலெக்டர் ராமநாதனுக்கும் திருமணம் நடந்தது. பொன்னுசாமி பிள்ளை போலீஸாக இருந்திருந்தாலென்ன? அவர் மகன் கலெக்டராயிற்றே!

இந்தக் கலியாணத்துக்கு எனக்குத் தான் அழைப்பில்லை. பொன்னுசாமி பிள்ளை என்ன செய்வார்? கொழும்புத் துட்டு செய்யும் வேலையல்லவா அது! பொன்னுசாமி பிள்ளை ஐம்பது ரூபாய்க்குப் பதில், ஐம்பதினாயிரம் கறந்து விட்டார். ஆனால், என்னுடைய எட்டு ரூபாய் ஆறேமுக்காலணாவை எந்தக் கணக்கில் எழுதுவது? கொழும்புக் கதிர்காமம் முருகன் கணக்கில் பற்று எழுத வேண்டியதுதான்!

வியக்கத்தானே வேண்டும்?


சீல்யான் ஸ்டேஷனிலிருந்து ரயில் வண்டி புறப்படவும், ஒரு பெரியவர் அவசரம் அவசரமாக அந்த வண்டியில் வர்து ஏறவும் சரியாக இருந்தது. வண்டியில் ஒரு இடம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்ததும், அவர் தமது ஒரு பக்கத்துச் சட்டைப் பையிலிருந்து கடிகாரம் ஒன்றை எடுத்தார்; மணியைப் பார்த்தார்; பிறகு அதே சட்டைப் பையில் போட்டுக் கொண்டார். உடனே இன்னொரு பையிலிருந்து இன்னொரு கடிகாரத்தை எடுத்தார்; மணி பார்த்தார்; பிறகு மறக்காமல் அதே சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.


அடுத்த நான்கைந்து ஸ்டேஷன்களில் வண்டி நின்றபொழுதும் அவர் முறையே இரண்டு கடிகாரங்களையும் எடுத்தார். மணி பார்த்தார்; மீண்டும் பழையபடியே சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

அவருக்கு எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவருக்கு அவரது இந்தச் செய்கை வியப்பை அளித்தது. இந்த மனிதர் என்ன இப்படிச்செய்கிறார்? ஒருவேளை பைத்தியமா? அல்லது இந்த வயதில்போய் 'ஸ்லேக்' ஷர்ட் தைத்துக் கொண்டதன் பயனாக, 'இரண்டு பைகளுக்கும் வேலை இருக்கவேண்டும். இரண்டு கடிகாரங்கள் அக்குறையைப் போக்கும்' என்று எண்ணிச் செய்கிறாரா? கைக் கடிகாரம் கட்டிக் கொள்வதே நாகரிகக் குறைவாகக் கருதப்படும் இந்த நாட்களில், 'ஸ்லேக்'ஷர்ட்டும் ஆடம்பரமுமாக இருக்கும் இவர், இரண்டு பைகளுக்கும் இரண்டு பைக் கடிகாரங்கள் போட்டுக் கொண்டிருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறதே! ஒருவேளை இவர் ஏதாவது பெரிய விஞ்ஞானியாக இருப்பாரோ? ஏதாவது பரிசோதனை நிகழ்த்திக் கொண்டிருப்பாரோ? இப்படியெல்லாம் நாம் யோசித்துக் கொண்டிருப்பானேன்? அவரையே கேட்டுப் பார்த்து விடுவோமே என்று எண்ணினார். "ஏன் சார், தாங்கள் ஏதாவது விஞ்ஞானப் பரிசோதனை - கிரிசோதனை செய்கிறீர்களா, என்ன?" என்று கேட்டார்.

அப்பெரியவர் மூக்கிலிருந்து தமது கண்ணாடியை மூக்கு மேட்டுக்குக் கீழே தாழ்த்தி, கேள்வி கேட்டவரை உற்று நோக்கினார், அதிசயம் ததும்ப. "சோதனையும் வேதனையும் செய்து கொண்டிருப்பதற்கு நான் யார், ஐயா? விஷயம் என்ன வென்றால், மணி காட்டும் முள், ஒரு கடிகாரத்துக்கு உடைந்துவிட்டது. நிமிஷ முள் இன்னொரு கடிகாரத்துக்கு ஒடிந்து விட்டது. அதனால் இரண்டு கடிகாரங்களையும் சரியான மணி தெரிந்து கொள்வதற்காக மாறி மாறிப் பார்க்கிறேன்!" என்றார்.

பெரியவரின் பேஷான யோசனையைக் கண்டு அவர் மட்டும் என்ன, யாருமே வியக்கத்தானே செய்வார்கள்?





விஷமுள்

சம்பந்தம்

மாலை வேளையில் அலுவலகத்திலிருந்து திரும்பும் பொழுது 'அம்மா' என்று வாய் நிறைய அழைத்துக் கொண்டேதான், உள்ளே, நுழைவான். அது சம்பளத் தினமாயிருந்தால், உள்ளே நுழைந்தும் நுழையாமலிருக்கும் பொழுதே அணு பைசா உள்படப் பணத்தை அப்படியே எடுத்துக் கொண்டுபோய் அம்மாவிடம் கொடுத்து விடுவான்.

அசோகனுடைய அப்பாவும் அப்படியே தான் செய்து கொண்டிருந்தார். அதற்கு என்ன! இவன் 'அம்மா' என்று அழைப்பதற்குப் பதிலாக அவர் 'கமலா!' என்று அழைத்துக் கொண்டே உள்ளே நுழைவார். அவ்வளவுதான் வித்தியாசம். 'என்ன அவசரம்? உள்ளே வந்து சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொண்டு, பிறகு கொடுத்தால்தான் என்னவாம்?' என்று அந்தக் காலத்தில் தன் கணவனிடம் சொன்னதுபோலவேதான், தன் தனயனிடமும் இப்பொழுது கமலாம்பாளுக்குச் சொல்லத் தெரிந்தது.

குடும்பத்தை அப்படியொன்றும் அவத்தரையான நிலையில் விட்டுப் போய்விடவில்லை அசோகனின் அப்பா. சொந்த வீடு இருந்தது. கொஞ்சம் நிலபுலன்களும் உண்டு. அவ்வப்பொழுது அவர் பாங்கியில் போட்டு வந்த பணம் வேறு சற்றுப் பெரும் தொகையாகவே இருந்தது. எல்லாம் இருந்தும் 'அவர்' இல்லையே! ஒவ்வொரு பாரதப் பெண்ணுக்கும் கணவன்தானே எல்லாம்! அப்பொழுது கமலாம்பாளுக்கு இவ்வுலகமே இருண்டுதான் போய் விட்டது. ஆனால் அந்த பாலகன் அசோகன் தாரகையாய் விளங்கினான்!

'இவனை மனுஷனாக்க வேண்டுமே! அப்பா பெயரை எடுக்கும்

கணவனின் மனைவியாயிருந்த கமலாம்பாள், அசோகனின் அம்மாவானாள். அவள் கணவன் இறந்து விளையாட்டாய்ப் பதினாறு வருஷங்கள் ஓடியே போய் விட்டன. அப்பொழுது அசோகனுக்கு நாலு வயது இருக்கும். அப்பாவின் முகம் அவனுக்கு எங்கே சரியாய்த் தெரிந்திருக்கப் போகிறது!

ஆனால் கமலாம்பாளோ தன் ஒரே மகனின் ஒவ்வொரு அசைவிலும் தன் கணவனையல்லவா கண்டு வந்தாள்? அதோடு மட்டுமா? சில சமயங்களில், ஏன், அநேக தடவைகளில் அவன் நடந்து கொண்ட விதம்கூடக் கமலாம்பாளைத் திடுக்கிடச் செய்ததுண்டு.

படி செய்ய வேண்டுமே? அம்மா வளர்த்த பிள்ளை என்ற அவச்சொல் ஏற்பட்டு விடக் கூடாதே!' என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினாள் கமலாம்பாள்.

"இனிமேல் என்ன செய்யப் போகிறாய்? என்னோடுதான் வந்து தங்கி விடேன்!" என்றான் அவள் அண்ணன். "என் தலைக் குயர்ந்த பிள்ளைகளுக்கிடையில், நான் ஒரு குறையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறேன். அங்கே உனக்கு இடமில்லாமல் போகுமா? ஒன்றும் யோசிக்காதே. குழந்தையை அழைத்துக் கொண்டு இப்பொழுதே என்னுடன் புறப்பட்டு விடு" என்று மிகுந்த வாஞ்சையுடன் பேசி வழிகாட்டினாள் கமலாம்பாளுடைய வயது முதிர்ந்த அக்காள். இவைகளை யெல்லாம் கேட்டு, ஆயிரங்கோடி எண்ணங்கள் எழுந்து ஆர்ப்பரித்தன கமலாம்பாளின் மனத்தில். அவரவருக்கு எவ்விதமான பதிலும் சொல்லாமல்—சொல்லத் தெரியாமல்—இரண்டொரு இரவுகள் சரியான உறக்கம்கூட இல்லாமல் கழித்தாள் கமலாம்பாள்.

கமலாம்பாளுக்கு வீட்டில் உதவியாயிருந்தவள் சாதாரணச் சமையற்கார அம்மா மாத்திரமல்ல; அவளுக்குத் தூர உறவும்கூட. வயதில் சற்றுச் சிறியவளாயிருந்தாலும், உலக அனுபவம் அதிகம் உண்டு. "உங்கள் மன உளைச்சல் தெரிகிறது, அம்மா. ஆரம்பத்தில் இவர்களெல்லாம் இப்படிச் சொன்னாலும் போகப் போக உங்களைப் பாரமாக நினைக்கலாம் அல்லவா? அதோடு அசோகனையும் எப்படி நடத்துவார்களோ? 'அண்ணா' இல்லாத குறைதானே? நாம் இப்படியே இருந்து விட்டுப் போவோமே! உங்கள் மேல் அவ்வளவு அக்கறையுள்ளவர்களா யிருந்தால் அடிக்கடி அவர்கள் வந்து பார்த்துக் கொண்டு போகட்டுமே!" என்று தனிமையில் அவளுக்கு யோசனை கூறினாள்.


அவள் சொன்னது 'சரி'யென்றே பட்டது கமலாம்பாளுக்கு. உடனே "ஒன்றும் வேண்டாம், நான் இப்படியே இருந்து விட்டுப் போகிறேன்" என்று அவரவர்களுக்குச் சொல்லியனுப்பி விட்டாள்.

அசோகன் வளர்ந்தான். அழகாக வளர்ந்தான். கமலாம்பாளோ அளவில்லாத அன்பைக் கொட்டி வளர்த்தாள். அசோகனுக்கு இலேசாய் உடம்புக்கு வந்து விட்டாலும் சரி, கமலாம்பாள் அப்படியே துடித்துப் போவாள். "தேவி! அழகைக் கொடுத்தாய் அறிவைக் கொடுத்தாய்; ஐசுவரியத்தைக் கொடுத்தாய்; அனைத்தையும் தாராளமாய்க் கொடுத்து விட்டு இப்படி என் உயிரின் உயிரை வதைத் தெடுக்கிறாயே? கருணையில்லையா?" என்று தேவியின் படத்தின் முன் அடிக்கடி விழுந்து அழுவாள். அசோகன் ஆடி ஓடிச் சிரித்துக் கொண்டிருந்தால்தான் அம்மாவின் முகம் மலர்ந்திருக்கும்.

உற்ற வயதில் அசோகனைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். அவனும் நன்றாய்ப் படித்தான். வீதியின் கோடியில் அசோகன் தன் பள்ளித் தோழர்களிடம் சிரித்துப் பேசிக் கொண்டு வரும்பொழுதே, உள்ளிருக்கும் கமலாம்பாளுக்கு நன்றாய்த் தெரிந்து விடும். அசோகனுடைய குரல்தான் அவன் அப்பாவினுடையதுபோல் அவ்வளவு கணீரென்று ஒலித்ததே!

படிப்பிலும் மிகுந்த கெட்டிக்காரன் அசோகன். ஒவ்வொரு வகுப்பிலும் அவன் தான் முதல். ஆண்டு தவறாமல் பரிசு வாங்கி வந்தான். ஒவ்வொரு பரிசையும் தவறாது தன் தாயிடம் கொடுத்து ஆசி பெறுவான். விளையாட்டை மாத்திரம் விட்டு வைத்தானா என்ன? பத்தாவது வகுப்பு புகுவதற்குள் அவனுக்குக் 'கிரிக்கெட் அசோகன்' என்ற பெயர் கூட வந்து விட்டது பள்ளியில். அவ்வப்பொழுது தங்கப் பதக்கமும் வெள்ளிக் கோப்பையுமாகப் பரிசு பெற்றுவரத் தவறுவதேயில்லை. கமலாம்பாளுக்குத்தான் எத்தனை சந்தோஷம்! அத்தனையையும் வாங்கி, அந்தக் காலத்தில் தன் கணவன் பரிசு பெற்று வரிசையாய் வைத்திருந்த வெள்ளிக் கோப்பைகளோடு வைத்து அழகு பார்ப்பாள்.

கலாசாலைப் படிப்பைக் கண்ணியமாய் முடித்துக் கொண்டு விட்டான் அசோகன். சீக்கிரத்திலேயே அவன் அப்பா வேலை பார்த்து வந்த 'செக்ரடேரியட்' டிலேயே அவனுக்கும் வேலை கிடைத்து விட்டது. 'இது என்ன ஒவ்வொன்றும் இப்படி நடந்து கொண்டு வருகிறதே!' என்று கமலாம்பாள் அதி ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள். 'எங்கே தன் ஒரே மகன்மேல் ஊராருடைய பொல்



லாத 'கண்' விழுந்துவிடப் போகிறதோ என்று அஞ்சவும் செய்தாள். இதை மனத்தில் கொண்டுதான், 'இந்த வழியாகப் போய் அந்த வழியாக வா. அப்படிச் செய்; இப்படிச் செய்' என்றெல்லாம் தன் மகனுக்கு அன்புக் கட்டளை இட்டு வந்தாள். ஆனால் அந்தப் பொல்லாத நாலு பேரோ 'இப்பேர்ப்பட்ட பிள்ளையைப் பெற்றிருக்கிறாளே!' என்று கமலாம்பாள் மேலேயே 'கண்ணை'ப் போட்டு விட்டார்கள்.

சாதாரணத் தலைவலி என்று படுத்தவளுக்குச் சுரமே கண்டு விட்டது. அசோகன் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு அம்மாவின் பக்கத்திலேயே இருந்து சிசுருஷை செய்தான். சற்றுக் குணமானதும், ''ஏண்டா குழந்தை! அன்றிலிருந்து ஆபீசுக்கே போக வில்லையாமே, ஏன்? சமையற்கார அம்மாள் என்னைக் கவனித்துக் கொள்ளும் பொழுது நீ ஏன் வேறு லீவு போட்டு விட்டாய்? சரி! சரி! இன்றைக்காவது ஆபீசுக்குப் புறப்படு'' என்று அன்போடு கடிந்து கொண்டாள் கமலாம்பாள்.

''நல்ல வேடிக்கை. இந்த நிலையிலே உன்னை விட்டு விட்டு, நான் ஆபீசுக்கு எப்படி அம்மா போவேன்? அப்படியே போனாலும் அங்கே உடலும் இங்கு உயிருமாகவல்லவா இருக்க வேண்டியிருக்கும்! அப்படி என்றால் ஆகாது, அம்மா!'' என்று கண்டித்துச் சொல்லி விட்டான் அசோகன். அவனுடைய அன்பு, தாயுள்ளத்தை அப்படியே நெகிழ வைத்து விட்டது. அவன் அப்பாவும் இப்படித்தான். கமலாம்பாளுக்குச் சாதாரணத் தலைவலி என்றாலே போதும், உடனே அவர் லீவு போட்டு விட்டு வீட்டில் தங்கி விடுவார்.

நாட்கள் நகர்ந்தன. அசோகனுக்குத் திருமண ஏற்பாடு செய்தாள் கமலாம்பாள். பெண் பார்க்கும் படலம் வந்தபொழுது, ''அலுவலகத்தில் அநேக வேலைகள் கிடக்கின்றன., இந்தச் சமயத்தில் லீவு கிடைக்காது. மாமாவையும் அழைத்துக் கொண்டு நீயே போய்ப் பார்த்து விட்டு வா. அம்மா, எனக்கு ஏற்ற பெண்ணைப் பார்க்க உனக்குத் தெரியாதா, என்ன!'' என்று கூறி அசோகன் அவளை அனுப்பி வைத்தான்.

அந்தக் காலத்தில் 'அவரும்' இப்படிச் சொன்னதாகத்தானே சொன்னார்! தன் கணவனை நினைத்துக் கொண்டாள் கமலாம்பாள்.

ஒருவாறு பெண் பார்த்து முடிந்து அசோகனுக்குத் திருமணம் நடந்தேறியது.


'இந்தக் காட்சியைக் காண அவர் இல்லாமல் போய்விட்டாரே' என்னும் நினைவு அவள் மனத்தைக் குமைக்கும்; ஆயினும் அடங்கா மகிழ்ச்சி அவள் உள்ளத்தை நிறைக்கும். ஆனால், அந்த மகிழ்ச்சி நெடுநாட்கள் நீடிக்கவில்லை. காரணம் 'அம்மா' என்று வாய் நிறைய அழைத்துக் கொண்டு உள்ளே நுழையும் அசோகன் இப்பொழுதெல்லாம் 'விமலா!' என்று குழைந்த வண்ணம் நுழையலானான். இது ஒன்றே போதாதா, நைந்துபோன தாயுள்ளத்தைக் கிளற?


வீட்டில் எது வேண்டுமானாலும் விமலாவைத்தான் கேட்டான் அசோகன். எத்தனையோ சமயங்களில் அசோகன் குறிப்பறிந்து தேவைப்படுவதைக் கமலாம்பாள் எடுத்துப் போவதற்குள், விமலா முந்திக் கொண்டிருக்கிறாள். பிறகு ஏமாற்றம்தானே! இம்மாதிரி கமலாம்பாளின் மனம் சகல விதத்திலும் சங்கடப்பட்டது. அவள் உவகை மறைந்தது; உடல் தளர்ந்தது.


அந்த மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டு வந்த அசோகன் அம்மாவிடம் போகாமல் நேரே விமலாவிடம் போனான். அவளிடம் கொடுத்து அதை உள்ளே வைக்கச் சொன்னான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த கமலாம்பாளின் மனம் அப்படியே விண்டது.

அன்று இரவு வேண்டுமென்ற ஆகாரம் எதுவும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள் கமலாம்பாள். அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. சிந்தனை நீண்டுகொண்டே இருந்தது பிற்பகல் நிழலைப் போல. 'நம் ஒரே பையனை எப்படி எப்படியோ அருமையாக வளர்த்தோமே! இப்படி அடியோடு மாறிப் போவான் என்று கனவில்கூட எண்ணவில்லையே! நேற்று வந்த விமலா அவன்மீது என்ன மாயப் பொடி போட்டு விட்டாள்?' அவள் உள்ளம் நெளிந்து புழுங்கிக் கொண்டிருந்தது.

விமலா தன் மாமியிடத்தில் எத்தனையோ பட்சமாகத் தான் இருந்தாள். அவளுக்கு







வேண்டிய பணிவிடைகளைக் கூட மிக்க அன்புடனே தான் செய்து வந்தாள். ஆனுல் கமலாம்பாள் என்னவோ அவளை மீதும் சிடுசிடுவென்றே இருந்தாள்.

அப்பொழுது விமலா தாயகம் சென்றிருந்தாள். 'இப்பொழுது எப்படியோ ?" என்று அசோகனை மோப்பம் பிடித்துப் பார்த்தாள் கமலாம்பாள்.

ஆபீசுக்கு வழக்கத்தை விடச் சற்று முன்னதாகவே புறப்பட்டுக் கொண்டிருந்தான். அது போல் ஆபீஸிலிருந்து திரும்பும் பொழுதும் வழக்கத்தைவிட வெகுநேரம் கழித்தே வீடு திரும்பிக் கொண்டிருந்தான். "ஏன் இப்பொழுதெல்லாம் ஆபீஸிலிருந்து திரும்ப ரொம்ப நாழிகை ஆகி விடுகிறது?" என்று ஒருநாள் கமலாம்பாள் கேட்டாள்.

"வீட்டில் விமலா கூடத்தான் இல்லையே என்று அப்படியே பூங்கா பக்கம் சென்று சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டான்.

அந்த வார்த்தைகள் அவள் செவி வழியே சென்று உள்ளத்திலேயே விஷமுள் தைத்தது போல் பதிந்து விட்டது. அந்த முள்ளின் விஷம் உள்ளத்தில் புரையோடி வாழ்வைப் பாழ்படுத்தி உயிரையே பலிகொள்ளும் வேதனைக்கு உள்ளாக்கியது.

அசோகனின் அவசரக் கடிதத்தைக் கண்டுவிட்டு, " 'உடனே புறப்பட்டு வந்து விடுவேன். ஆனுல் என்னேடு துணை வருவதற்கு இங்கு யாருக்கும் சௌகரியப்படவில்லை. ஆகையினுல் நீங்களே லீவு எடுத்துக் கொண்டு வந்து அழைத்துப் போனுல் தேவலை" என்று எழுதியிருந்தாள் விமலா. உடனே தன் மேலதிகாரியை நேரிலேயே பார்த்து இரண்டு நாட்களுக்கு அவசர லீவு எடுத்துக் கொண்டு சந்தோஷமாக வீடு திரும்பினுன் அசோகன்.

கமலாம்பாளோ தலைவலி, சுரம் என்று படுத்துக் கிடந்தாள். அதை அலட்சியமாக லட்சியம் செய்யாதவன் போல், விமலாவை அழைத்து வரப் புறப்பட்டு விட்டான்.

அன்று இரவு மூன்றும் ஜாமத்தில் கண் விழித்த கமலாம்பாளுக்கு அதன் பிறகு தூக்கமே வரவில்லை. மனத்தில் கவலை மேகங்கள் வந்து கவிழ்ந்து கொண்டன. "நம் பையன் இப்படி மாறிப் போவானு! விமலா வந்து கெடுத்து விட்டாளே !" என்று அரற்றினுள்.

அரவம் கேட்டுக் கண் விழித்தாள் சமையற்காரம்மாள். "என் அம்மா ! உடம்புக்கு ஒன்னுமில்லையே!" என்றுள். "உம், என் உடம்புக்கு என்ன கேடு!" என்று பெருமூச்சு விட்டாள்.

"உண்மையாகவே உங்கள் உடம்புக்கு ஒன்னுமில்லையம்மா, நானும் கவனித்துக் கொண்டுதானே வருகிறேன். நீங்கள் ஏதேதோ எண்ணி மனத்தைப் புண்ணக்கிக் கொள்வதாகத் தெரிகிறது. நானும் குழந்தை குட்டிகள் பெற்றவள்தான். பிழைப்புக்காகக் கல்கத்தாவில் குடியேறியிருக்கும் என் மகன் வருஷத்துக்கொரு தடவை கடுதாசி போடுகிறானு இல்லையோ ! அதற்காக நான் வருத்தப்பட்டுக் கொண்டா இருக்கிறேன்? கலியாணமாகிற வரையும் நம்ம பையன் தான். கலியாணமான பிறகு அவன் புதிதாய்

வருபவளுடைய கணவனுகி விடுகிருன் அல்லவா! அதன் பிறகு அவன் அன்பெல்லாம் தன் மனைவியின்மேல்தான் பாயும். உலகத்திலே இது சாதாரணம்தான். அம்மா! அதற்காக உங்களை ஒன்றும் மறந்துவிட மாட்டான். இதையெல்லாம் நினைத்துப் பாராமல் நீங்கள் மனத்தைப் புண்ணுக்கிக் கொண்டால் எப்படி? அது நியாயமா? உங்கள் கணவர்கூடத்தான் உங்கள் மேலே பிரியமா யிருந்திருப்பார். அதற்காக உங்கள் மாமியார் வருத்தப் படுவதா யிருந்தால் உங்களுக்கு எப்படியிருக்கும்? உங்கள் சிடுசிடுப்புத்தனம் இப்படி நீண்டு கொண்டே போனுல், குழந்தைகள் மனம் வெறுத்துப் போய் விடும் அம்மா. உங்கள் நடத்தையை அசோகன் ஒன்றும் கவனிக்கவில்லை என்று நினைக்காதீர்கள்! தனிமையில் அவர்கள் இருவரும் பேசி வருத்தப்படுவது எனக்குத் தெரியும்!''

என்று நில்லாமல் விஸ்தாரமாகப் பேசி விட்டாள் சமையற்கார அம்மாள். அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள உண்மை விளங்கியது கமலாம்பாளுக்கு.

'ஆம்! இனி நான் காய்ந்து போன இலைச் சருகு போலத் தானே? நானும் வெகு சீக்கிரத்தில் போய் விட வேண்டியது தானே? அப்பொழுது அவனைக் கவனித்துக் கொள்வது யார்? அவன் மனைவிதானே? வாழை குலை தள்ளிய பிறகு அது தன்னைத்தானே நிர்மூலம் செய்து கொள்கிறது? அது போல்தானே அன்னையும். வாழை தன் கன்று தனக்காகக் கண்ணீர் வடிக்க வில்லையே என்று நினைக்கிறதா? பிரதிபலன் பார்த்தா அவன் மீது அளவற்ற அன்பைச் செலுத்தினேம்? அப்படியானுல் அது அன்பாகுமா?'

அவள் உள்ளத்தில் ஞானோதயம் பிறந்தது.

அதற்குள் இலேசாய் விடியத் தொடங்கியது. வாசலில் 'ஜல்ஜல்' என்று வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்கவே அவசரமாய் எழுந்து சென்று கதவைத் திறந்தாள் கமலாம்பாள். வண்டியிலிருந்து அசோகனும் விமலாவும் இறங்கினுர்கள். அவ்விருவரும் அப்பொழுது தான் திருமணக் கோலத்துடன் வண்டியிலிருந்து இறங்குவதாகத் தோன்றியது கமலாம்பாளுக்கு. ''வா அம்மா, விமலா! வா அப்பா, அசோகா! வண்டி இன்றைக்குச் சரியான நேரத்துக்கு வந்து விட்டாற்போலிருக்கிறதே! என்று வாய் நிறையப் பேசி வரவேற்ருள் கமலாம்பாள்.

''உங்களுக்கு உடம்பு சரியில்லையாமே! தேவலையா, அம்மா?'' என்று ஆதரவோடு கேட்டாள் விமலா.

''உம் எனக்கு என்ன? சாதாரணத் தலை வலி. அப்பொழுதே சரியாகி விட்டதே! சரி சரி. வண்டியில் எங்கே தூங்கியிருக்கப் போகிறீர்கள்? இன்னும் விடிவதற்கு வெகு நேரமிருக்கிறது. போய்ச் சற்றுக் கண் அயருங்கள். ஒரு நாழிகை கழித்து எழுந்திருக்கலாம்'' என்று மனம் விட்டுப் பேசினுள் கமலாம்பாள். கலங்கிய நீர் தெளியும்போது, முதலில் இருந்ததைவிடச் சுத்தமான நீராகத் தெளிவது போல் அவளுடைய மனம் தூய்மையாகத் தெளிந்துவிட்டது. அன்றையிலிருந்து சாதாரண அம்மாவாக இருந்த கமலாம்பாள் 'அருமை அம்மாவாக' மாறி விட்டாள்!

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

66. மன்னிக்கவும்!

“எக்ஸ்க்யூஸ்மி — [மன்னிக்கவும்] ஒரு விஷயம்...”

“என்ன ஐயா ஒரு விஷயம்? விஷயத்துக்குக் கூடவா பஞ்சம்? ஒன்றென்ன... ஒன்பது விஷயமே சொல்லுமே!”

“ஓ! தாங்க்யூ [நன்றிகள்]! ஹிஹிஹி”

“இந்த ‘தாங்க்யூ — எக்ஸ்க்யூஸ்மி!’ என்பது போன்ற சொற்களைக் கேட்கவே எனக்குப் பிடிப்பதில்லை...”

“விட்டுத் தள்ளுங்கோ. இந்தக் காதாலே வாங்குங்க. அந்தக் காதாலே விட்டுடுங்கோ...”

உண்மையான விஷயம். விலை கொடுத்து ஒரு பண்டத்தை வாங்குகிறோம். அல்லது பண்டம் மாற்றும் முறையில் ஒன்றைக் கொடுத்து, இன்னொன்றை வாங்குகிறோம். ஒரு ‘பிஸினஸ்’ பூர்த்தியாகிறது. அதைப் பற்றிய சிந்தனை, வியாபாரம் சம்பந்தப்பட்ட இருவருக்குமே பிறகு இருப்பதில்லை. இது நடைமுறையில் காணும் விஷயம். ஒருவன் செய்த உதவிக்கு நன்றி செலுத்துங்கால் ‘தாங்க்யூ’ என்றோ ‘தாங்க்யூ வெரிமச்’ என்றோ சொல்லி விட்டு—அதோடு தனது நன்றிக் கடன் முழுவதும் மேற்சொன்ன வியாபார—பண்டம் மாற்று முறையில் முற்றுப் பெற்றதாக எண்ணி, பின்னர் அவ்வுதவி—நன்றிக் கடன்களைப் பற்றிய நினைவே இல்லாமல் நிம்மதி பெறுவது ஒரு சாராரின் மனப்போக்கு. கீழ் நாட்டினரான நமது பண்பின் வழி இதற்கு முற்றும் மாறானது. ‘தாங்க்யூ’ என்று சொல்லாமலுமிருந்து விடலாம். ஆனால் நன்றிக் கடனை மட்டும் உயிர் வாழும் நாள் வரை மறப்பதே இல்லை.

“கப்பனின் அப்பாவுக்கும் என் தகப்பனாருக்கும் நெருங்கிய சிநேகம். கப்பனின் அப்பா ஒரு சமயம் என் தகப்பனாருக்கு ஒரு பேருதவி செய்திருக்கிறாராம். என் தகப்பனார் இதை அடிக்கடி சொல்லுவார். என்ன உபகாரம் என்று சொன்னதில்லை. ஆனால் அந்த உதவிக்காக ‘தாம் ஏழேழு தலைமுறைகளுக்குக் கடன் பட்டவராகிறோம்’ என்று என் தகப்பனார் எத்தனையோ தரம் சொல்லி இருக்கிறார். இன்று இந்த கப்பன் எனக்கு எவ்வளவோ தொல்லைகள் கொடுக்கிறான். ஆனாலும் நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. ஏன்? என் தந்தை சொன்னபடி நாங்கள் ஒரு நன்றிக் கடன் பட்டிருப்பதால் தான்.”

இது போன்ற சம்பவங்களைக் கீழ் நாட்டினரான நமது பண்பில் தான் காண முடியும். ‘தாங்க்யூ’ போன்ற அர்த்தமற்ற, இதயத்துக்குச் சம்பந்தமில்லாத சொற்கள் நமது பழக்க வழக்கங்களில் இல்லை. அவசியமில்லாத போது ஒரு ‘எக்ஸ்க்யூஸ்மி’யைப் போட்டு, அர்த்தமற்ற பிதற்றலைப் பேசிவிட்டு, ‘ஹிஹி’ என்று இளிக்கும் அசடுகளைக் காண்பது இக்காலத்தில் சர்வ சாதாரணம். ஆனால் உண்மையிலேயே — மன்னிப்புக் கோருகிறேன் நான்.

“யாரிடம் மன்னிப்பு? எதற்காக...?”

“வாசகர்கள் எல்லோரிடமும். முக்கியமாக லால்குடி சகோதரியிடம்.”

தொடர்ந்து எழுத வேண்டிய விஷயத்தை விட்டு வேறு விஷயத்தை எழுதப் புகுவதற்காகப் பொதுவாக நேயர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். லால்குடி சகோதரியிடம் மன்னிப்பு கோருவது எதற்குத் தெரியுமா? அவர் சொல்வதையே கேளுங்கள்:

“......நான் தங்கள் ‘நாட்டு வைத்தியம்’ கட்டுரையை முதல் அத்தியாயத்திலிருந்து இதுவரையில் படித்து வருகிறேன். அதில் 15-6-58ல் எழுதிய தொண்டை உபத்திரவத்துக்கான சில மருந்துகளில் ஒரு கஷாயத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு வாரமாய்ச் சாப்பிட்டு வருகிறேன். ஆடாதோடை இலை, தாளிசபத்ரி, சித்தரத்தை, திப்பிலி, அதிமதுரம், தேன் ஆகிய சாமான்களினால் தயாரிக்கப்பட்ட கஷாயம். எனக்குத் தொண்டையில் சுமார் மூன்று வருஷ காலமாய்க் கபம், கோழை, இருமல் ஏற்பட்டு மாதம் ஒரு முறை ஜுரம் வருகிறது. மேற்சொன்ன கஷாயம் சாப்பிட்டதில் கோழை, கபம், இருமல் மூன்றுமே நீங்கிச் சௌகரியமாயிருக்கிறது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கஷாயத்தைத் தொடர்ந்தும் சாப்பிட்டுவருகிறேன். திங்க, 22-6-58 ‘கல்கி’யில் கட்டுரையின் கடைசியில் தஞ்சை அரண்மனை முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேஹியமும் கூஷ்மாண்ட ரஸாயனமும் சாப்பிட்டு வரும்படியும் அதைச் செய்யும் முறைகளை முதலிலேயே தெரிவித்தாயிற்று என்றும் எழுதியிருக்கிறீர்கள்.

நான் தொடர்ந்து, தவறாமல் ‘கல்கி’ வாங்குகிறேன். ‘கல்கி’யிலிருந்து வைத்தியக் கட்டுரைகளை எடுத்துப் பத்திரப்படுத்தியும் இருக்கிறேன். முதலில் எடுத்து வைத்த கட்டுரைகளைத் திருப்பியும் படித்துப் பார்த்தேன். ஆனால் இது வரையில் அச்வகாந்தா லேஹிய முறையும், கூஷ்மாண்ட ரஸாயனம் செய்யும் முறையும் வெளிவரவில்லை......”

நானும் என் கைவசமுள்ள ‘நாட்டு வைத்தியக் கட்டுரைகளின் தொகுப்

யைப் புரட்டிப் பார்த்தேன். வெளியாகி யுள்ள விஷயங்களின் அகராதிச் 'சுட்டி' களையும் பார்த்தேன். மேற்சொன்ன மருந்துகளைப் பற்றி இரண்டு சந்தர்ப்பங் களில் பெயரளவில் பிரஸ்தாபித்துள் ளனேயொழிய, அவற்றைச் செய்யும் முறையை விளக்கவில்லை.

அச்வகந்தாலேஹியம் :—இதில் எனக் குத் தெரிந்து மூன்று முறைகள் இருக் கின்றன. அவற்றுள் நான் அடிக்கடி தெரிவிப்பது கீழ்க்கண்ட முறை.

சீமை அமுக்கிராங்கிழங்கு, நிலப் பூசனிக் கிழங்கு, நன்னாரி வேர்ப்பட்டை, பறங்கிச் சக்கை, சீரகம் இவற்றைத் தனித் தனி இடித்துச் சலித்து எடுத்த நுண் பொடி வகைக்கு 2 பலம் (6 தோலா.) இத்துடன் ஏலரிசியை இடித் துச் சலித்த நுண் பொடி 1 தோலா. இவற்றை ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். மொத்தம் சூர்ணம் 31 தோலாக்கள் இருக்குமில்லையா ?

சுத்தம் பண்ணி எடுத்த விதையில்லாத அல்லது விதைகளைப் போக்கிய திராக்ஷைப் பழம் 5 தோலா. இதை 5 பலம் நெய்யில் வறுத்து எடுத்துக் கொள்ளவும். வறுத்தபின், நெய்யை வேறுபடுத்தித் திராக்ஷையை மட்டும் அம்மியில் இட்டு ஜலம் விடாமல் அரைத் துக்கொள்ளவும். இருபது பலம் அல்லது 60 தோலா சீனு கற்கண்டைத் தேவை யான ஜலத்தில் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். பிறகு இதைக் கம்பிப் பாகாகக் காய்ச்சி இறக்கி — இறுத்து வைத்த நெய்யையும், அரைத்து வைத்த திராக்ஷையையும் இதில் இட்டுக் கலக்கிக் கொள்ளவும். பிறகு பொடித்து வைத்த சூர்ணம் 31 தோலாவையும் இதில் தூவி, கிளறிக் கிண்டி வைத்துக் கொள் ளவும். ஆறின பிறகு, இது ஜலம்தெளித் துப் பிசிரிவைத்த தவிடு போலிருக்கும். இத்துடன் 10 பலம் — 30 தோலா நல்ல தேனையும் சேர்த்து லேகியமாக்கி வைத் துக் கொள்ளவும். இதுதான் அச்வ கந்தா லேஹியம்.

கூஷ்மாண்ட ரஸாயனம்:—நல்ல முற் றிப் பழுத்த கலியாண [சாம்பல்] பூசனிக்காயின் மேல் ஓட்டையும் உள்ளே இருக்கும் விதைக் குடல்களையும் களைந்து எடுத்துக் கொள்ளவும். இதைக் குழம்புத்[சாம்பாருக்குத்]தான் அளவில் நறுக்கி 100 பலம் நிறுத்து எடுத்துச் சிறிது ஜலத்துடன் வேக விடவும். தானுகவே நிரம்ப ஜலம் விட்டுக் கொள்ளுமானதால் ஆரம்பத்தில் அதிக ஜலம் வைக்க வேண்டாம்.

நன்ருய் ஆறின பிறகு பூசனிப் பத்தை களை மட்டும் எடுத்து ஆட்டுரலில் விட்டு அரைத்து எடுத்து, துணியிலிட்டுச் சத் தைத் தனியாக வடிகட்டிப் பிழிந்து வேறுபடுத்தி வைத்துக் கொள்ளவும். பூசனி பத்தையின் அரைப்புத் திப்பியை 15 பலம் நெய்யில் பொன் நிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். வடி கட்டித் தனியே எடுத்து வைத்த மேற் சொன்ன ரஸத்தில் 100 பலம் சீனு கற்கண்டைக் கரைத்துக் கம்பிப் பாகாகக் காய்ச்சிக் கொள்ளவும். இதில் வறுத்து எடுத்த பூசனியின் அரைப்பை யும்—அத்துடன் இருக்கும் நெய்யையும் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும். பிறகு தனித்தனியாக இடித்துச் சலித்த நுண் பொடியாகச் சுக்கு 2 பலம், திப்பிலி 2 பலம், ஜீரகம் 2 பலம், பச்சிலை, ஏலரிசி, லவங்கப் பட்டை, தனியா, மிளகு ஆகி யவை வகைக்கு அரைப் பலம் என எடுத்து மொத்தச் சூர்ணம் பன்னிரண் டரைப் பலத்தையும் மேற்சொன்ன பாகில் சிறுகச் சிறுகத் தூவிக் கிளறிக் கிண்டி வைத்துக் கொள்ளவும். இது தான் கூஷ்மாண்ட ரஸாயனம்.

ஸ்ரீரங்கம் சகோதரி கோவையில் படிக் கும் தனது சகோதரனின் மஞ்சக் காமா லைக்குச் சிகிச்சை கேட்டிருந்தாள். ஊசிகள் முதலியவை பலன் அளிக்க வில்லையாம்.

கோவை இலையை அரைத்து எடுத்த கல்கத்தில் நெல்லிக்காய் அளவு சிறிது தயிரில் கலக்கித் தினம் காலையில் 3—5 நாட்கள் கொடுத்துப் பிறகு குண குணத்தை எழுதத் தெரிவித்தேன். கட்ட புளி, வறுத்த உப்பு சேர்த்து— கொழுப்புச் சத்து இல்லாத ஆகாரத் தைச் சாப்பிடலாம். இது ஒரு புதிய மருந்து. ஆராய்ச்சி மனமுள்ளவர் தமது ஆராய்ச்சியைத் தொடங்கலாம். கீழா நெல்லி, கரிசலாங்கண்ணிகளின் அரைப் புக் கல்கத்தை உபயோகிப்பதும், உப்பு புளி நீக்கிய பத்தியம் இருப்பதும் பய னுள்ள சிகிச்சைகள். அவ்விதமே கடுக ரோஹிணியின் சூர்ணத்தை வெல்லத் துடனே— கடுகரோகிணியின் கஷாயத் தைக் கொடுப்பதும் நல்ல பலனை அளிப்பவையாகும். **(தொடரும்)**

''வேலைக்காரர்களுக்கு நீங்க கொடுக்காத தினுலே அவர்களுக்கு நீங்க கொடுத்ததாக நாலணுக் காக கொடுத் தேன் !''

''என்ன மனுஷன் ஐயா நீங்க ! ஒரு ரூபா யாகக் கொடுக்கக் கூடாது ! என்னைக் கருமின்னு அவங்க நினைச்சுக்கிடுவாங்களே !''





ஊருக்கு விருந்து

துறைவன்

இப்பணங் குறிச்சியில் நள்ளிரவு வழக்கம்போல், எட்டு மணிக்கே ஆரம்பித்து விட்டது. பொங்கி வழியும் நிலா வெள்ளத்தின் ஓசைபோல, மரங்களில் இலைகள் சல சலவென்று அசைந்து கொண்டிருந்தன. அந்த இலை அசையும் ஒலியில் எங்கோ ஒரு சிறு மாறுதல் தட்டுப்பட்டது. கருப்பண்ணக் கிழவனுக்குத் தூக்கம் கலைந்து போயிற்று. இருட்டுச் சாவடிக்குள்ளிருந்து "யாரடா அங்கே?" என்று அதட்டலாகக் குரல் எழுப்பினான். தொழுவத்தில் மாடுகள் பெருமூச்சு விட்டன. "ஒருத்தருமில்லை" என்று தனக்குத்தானே முனகிக் கொண்டே போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டான்கருப்பண்ணன்.

திண்ணையில் படுத்திருந்த முத்துசாமி மெதுவாக எழுந்து அரவமில்லாமல் மாட்டுத் தொழுவத்தைத் தாண்டி, கொல்லைப் பக்கமாக அடிமேல் அடியெடுத்து வைத்தான். மாட்டுக்கு வைக்கோல் அள்ளிக் கொண்டு எதிரே வந்தாள் பேராச்சி.

"யாரு அத்தானா? இன்னும் தூங்கலையா, நீ?" என்று ஒரு பொய்க் கேள்வி போட்டாள் அந்த நிலவுக் கன்னிகை.

"தூங்கி ஒரு வாரத்துக்கு மேலாச்சு, பேராச்சி! ஆனி மாசம் பிறந்தது முதலே, தூக்கம் 'லீவு' வாங்கிக்கிட்டுப் போயிட்டுது" என்றான் முத்துசாமி.

பேராச்சி சத்தமில்லாமல் சிரித்தாள். அவள் முத்துச் சிரிப்பின் ஒளியால், நிலா வெளிச்சம் இன்னும் அதிகமாகப் பிரகாசித்ததை உணர்ந்தான் முத்துசாமி.

"நீ சும்மா வாயைப் பொத்திக்கிட்டு இருந்தால், ஒன்னும் நடக்காது. எங்க ஐயாவைக் கேளேன், தைரியமாக" என்றாள் பேராச்சி.

முத்துசாமிக்கு அந்தத் தைரியம் இன்னும் வரவில்லை. கருப்பண்ணக் கிழவனின் கையில் அடி, உதைபட்டு வளர்ந்தவன் அவன். அவரிடம் போய் நிமிர்ந்து நின்று, 'உன்னுடைய மகளை எப்போது ஐயா எனக்குக் கல்யாணம் கட்டித் தரப் போகிறாய்' என்று கேட்க முடியுமா?

"ஐயாவைக் கேட்கிறதா? அது நம்மாலே முடியாது, பேராச்சி!"

"என் அண்ணனையாவது கேட்டியா?"

"நூறு தரம் கேட்டாச்சு; இந்த வருஷம் நிச்சயமாக நடத்திவிடலாம் என்றாரு. காதுக்குக் கம்மலும் கைக்கு வளையலும் செய்து போடப் போகிறாராம். போட்டதும் கல்யாணந்தான். 'இறைத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போயிடும்' அப்படிங்கிறாரு."

"அப்படியா சொன்னாரு எங்க அண்ணன்? கம்மலும் வளையலுந்தான் எனக்கு அவர் போன மாசமே செய்து போட்டுட்டாரே!" என்று ஆச்சரியப் பட்டாள் பேராச்சி.

"ஒங்க ஐயாவும் அண்ணனும் தட்டிக் கழிக்கிறதைப் பார்த்தால், வேறே எங்காச்சும் மாப்பிள்ளை தேடற மாதிரியில்லே எனக்குத் தோணுது!"

"அதெல்லாம் ஒரு புண்ணாக்கும் இல்லே. நீ ஒண்ணு" என்றாள் பேராச்சி.

முத்துசாமி பெருமூச்சு விட்டான். பேராச்சியின் நிலவு பொழியும் முகத்தைப் பார்த்தான். "என்னை ஏமாத்திடாதே, பேராச்சி!" என்று சொல்லிக் கொண்டே அவள் கைகளிரண்டையும் பிடித்துக் கொண்டான். பேராச்சிக்கு நிலவில் மிதப்பது போலிருந்தது.

"அத்தான்! மாடு திங்கிற இந்த வைக்கோல் மேலே ஆணையிட்டுச் சொல்றேன். நான் உன்னைத் தவிர வேறே யாருக்கும் கழுத்தை நீட்ட மாட்டேன். போதுமா?" என்றாள்.

முத்துசாமிக்கு உடம்பு புல்லரித்தது.

"யாருடா அங்கே?" என்ற கருப்பண்ணக் கிழவனின் அதட்டல் குரல் சாவடியிலிருந்து கிளம்பியது.

பற்றியிருந்த கைகள் விடுபட்டன.

முத்துசாமி மெதுவாகத் திண்ணையை நோக்கி நழுவினான்.

* * *

வேலங்குளம் இப்பணங்குறிச்சியிலிருந்து ஏழு மைல். அந்தக் கிராமத்தில் தான் முத்துசாமி ஆரம்பப்பள்ளி ஆசிரியராக வேலை பார்த்து வந்தான். அதே கிராமத்தில் பெரிய பண்ணையார் வீட்டில் கருப்பண்ணக் கிழவனின் மகன் மாசானமும் ஊழியம் செய்து வந்தான். கருப்பண்ணக் கிழவனுக்குக் கண்ணில் பூ விழுந்து இரண்டு வருஷங்களாக வீட்டில் முடங்கி விட்டான். பரம்பரை பாத்தியதையாக அவனுடைய வேலை மகனுக்குக் கிடைத்தது மாசானத்துக்குக் கல்யாணம் ஆகி, மருமகள் காளியம்மை வீட்டுக்கு வந்து விட்டாள். கருப்பண்ணனுக்கு இனி வாழ்க்கையில்

ஒரே ஒரு கவலைதான். தான் அடித்து உதைத்து ஆளாக்கிய முத்துசாமிப் பயலுக்குத் தன் மகள் பேராச்சியை முடிச்சுப் போட்டு விட்டால், எல்லாம் தீர்ந்து விடும். போன தை மாசமே கல்யாணம் நடந்திருக்க வேண்டியது. பாறையடி வயலில் பூச்சி விழுந்து, மாருல் அரைவாசிக்கு மேல் காலியாகி விட்டது. என்னவோ, இந்த வருஷத்துக்கு மாருலே விற்ருல்; ஊருக்கு ஒரு சோறு போட்டுப் பேராச்சியின் கல்யாணத்தை நடத்தி விடலாம் என்று கணக்குப் போட்டான் கருப்பண்ணைக் கிழவன்.

மகன் மாசானத்துக்கு எரிச்சல் வந்தது. "ஊருக்கு யார் சோறுபோடருங்க, இந்த அகவிலை |காலத்திலே! கையிலே இருக்கிற நூறு ரூபாய் போதும். முத்தாரம்மன் கோயிலிலே பேராச்சிக்குத்



தாலியைக் கட்டிடலாம். நான் சொன்னால், கேட்டால்தானே?" என்று தன் கட்சியைப் பேசினன் மாசானம்.

கருப்பண்ணைக் கிழவனுக்கு இந்தப் பேச்சு அவமானமாக இருந்தது. "எல்லாம் எனக்குத் தெரியுமுடா. கண்ணு தான் குருடாப்போச்சுன்னு, கண்ணியம், மானம், மரியாதை எல்லாம் அவிஞ்சு போயிடுச்சுன்னு பாத்தியா? ஊருக்கு விருந்துச் சோறு போட்டுத்தான் பேராச்சிக்குக் கல்யாணம். கையிலே காசு குறைஞ்சிட்டா, காலங்காலமா வந்த வழக்கத்தை மாத்திட முடியுமா?" என்று கோபக் குரலில் பேசினன் கருப்பண்ணைக் கிழவன்.

மாசானத்துக்குச் சிரிப்பு வந்தது. அவன் வேலை பார்த்து வந்த பண்ணை யார் வீடு பசையுள்ள இடந்தான். இருந்தாலும், கல்யாணம் என்று வந்தால், முத்தாரம்மன் கோயிலில்தான் நடத்தினர்கள். ஊர்ச் சாப்பாடு கிடையாது. சாயங்காலத்திலே, கொஞ்சம் பூந்தி, இரண்டு பஜ்ஜி, அரைக் கப் காப்பி-அவ்வளவுதான். பெரிய பண்ணையே ஊர்ச் சாப்பாடு போடத் தயங்கும்பொழுது, நமக்கு என்னத்துக்கு இந்தப் பிடிவாதம்? பேராச்சிக்கும் வயது ஏறிக் கொண்டே போகிறது. முத்துசாமியும் அவசரப்படுத்துகிருன்.

"டேய் மாசானம்! முத்துசாமி கிட்டே தெளிவாகச் சொல்லிப்பிடு. அவன் ஆத்திரத்துக்கு, நாம் கல்யாணம் செய்து வைக்க முடியாது. வேணுமானல், வேறே இடத்திலே பெண் பார்த்துக்கிடட்டும். பாறையடி மாருல் உருப்படியா வீடு வந்து சேர்ந்தப்புறந்தான் கல்யாணம். ஆமா, சொல்லிப்பிடு" என்று இரைந்தான் கிழவன்.

கண் மங்கிச் சாவடியில் முடங்கி விட்ட தகப்பனிடம் மாசானம் அதற்கு மேல் ஒன்றுமே பேச முடியவில்லை.

• • •

நகரத்துக்குப் போய்விட்டு மாசானம் இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வந்தான். பெண்சாதி காளியம்மை அவனுக்கு வெண்கலக் கும்பாவில் சோறு போட்டு வைத்தாள். கீரைக் குழம்பும் அவனுக்கு வந்தது.

"அப்பாரு தூங்கிட்டாரு போலிருக்குது" என்ருன் மாசானம்.

"ஆமா; சோறு வேண்டாம்னு சொல்லிட்டாங்க" என்ருள் காளியம்மை.

"தங்கச்சி எங்கே?"

"அடுத்த வீட்டுலே, தாயம் விளையாடிக்கிட்டிருக்கிரு!"

"சரி, காளியம்மை! ஒங்கிட்டே இருக்கிற சிறுவாட்டுப் பணத்திலே ஒரு அஞ்சு ரூபா தருவியா?" என்று மெதுவாகக் கேட்டான் மாசானம்.

காளியம்மைக்கு ஒரே ஆச்சரியம். அவள் சிறுவாட்டுப் பணம் சேர்த்து வைத்திருக்கிற ரகசியம் அவனுக்கு எப்படித் தெரிந்தது? அதிலும், வள்ளிசாக ஐந்து ரூபாய்தான் சேர்ந்திருக்கிறது என்ற விவரம் கூடத் தெரிந்து போய் விட்டதே; காளியம்மை இனி மறைத்துப் பிரயோசனமில்லை.

"கடனுகக் கேட்கிறீர்களா? திருப்பித் தருவீங்களா இல்லை...?"

"கைமாத்துத்தான்" என்றான் மாசானம் சிரித்துக் கொண்டே.

"இப்போ என்ன செலவாம்?" என்று கேட்டாள் காளியம்மை. அவள் குரலில் செல்வம் பறி போன துக்கம் நிறைந்திருந்தது.

"ஒரு முக்கியமான காரியம்" என்றான் மாசானம். "நூறு ரூபாய் வேண்டியிருந்தது. கீரைக் குழம்பும் கஞ்சியுமாகச் சாப்பிட்டுத் தொண்ணூத்தஞ்சு ரூபாய் சேர்த்துட்டேன். ஒன்றோட அஞ்சு ரூபாயும் சேர்த்தால், நூறு ரூபாய் நிறைஞ்சு போச்சு" என்றான் மாசானம் திருப்தியோடு.

* * *

"அங்கிங் கெனாதபடி
எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்த தெது"

என்று பாட்டுச் சத்தம் கேட்டது. சாவடியில் கருப்பண்ணக் கிழவன் எழுந்து உட்கார்ந்தான். "திருவோட்டுச்சாமி இப்படி உட்காரட்டும்" என்று வணக்கமாய் வேண்டிக் கொண்டான்.

திருவோட்டுச் சாமியாரிடம், கருப்பண்ணனுக்கு அளவு கடந்த நம்பிக்கை. சாமியார் வாக்குக் கொடுத்துவிட்டால், அது நிச்சயம் பலிக்கும் என்பது கிழவன் அநுபவத்தில் கண்ட உண்மை.

"சாமி! என் கையைப் பார்த்து, இன்னும் எத்தினி வருசம் இந்தப் பூலோகத்திலே இருப்பு உண்டுங்கிறதைச் சொல்லுங்க" என்று கருப்பண்ணன் வலது கையை நீட்டினான்.

சாமியார் கையைப் பார்த்தார்.


"கருப்பண்ணா! உனக்கு இருக்குது இன்னும் இருபது வருசம். ஒண்ணும் கவலைப்படாதே; ஆமாம், இந்த வருஷம், வீட்டிலே ஏதோ மங்கள காரியம் நடந்தாகணுமே; ரேகை தெளிவாகச் சொல்லுதே, அப்பா!"

கருப்பண்ணனுக்கு சந்தோஷம். "சாமி! பேராச்சிக்குக் கல்யாணம் நடக்கணும். ஒரு நூறு ரூபாய் இல்லாமல் தவிச்சுக்கிட்டிருக்கிறேன். இந்த வருஷம் பாறையடி வயலிலே நல்லா விளைஞ்சதுன்னா, தை மாசமாவது பேராச்சியின் கல்யாணத்தை முடிச்சுப்புடலாம்."

"தை மாசம் வரைக்கும் பொறுக்காது, கருப்பண்ணா! பேராச்சிக்கு இன்னும் பத்து நாளைக்குள்ளே கல்யாணம் நடக்கப்போவுது. அது நீ நிறுத்தினாலும் நில்லாது, நான் நிறுத்தினாலும் நில்லாது. ரேகை சொல்லுதப்பா."

கருப்பண்ணக் கிழவனுக்குப் பல சந்தேகங்கள் உண்டாக ஆரம்பித்தன.

'மாசானமும் முத்துசாமியும் சேர்ந்து ஏதேனும் சூழ்ச்சியில் இறங்கி விட்டார்களோ?' என்று பயந்தான். காலம் அவ்வளவு தூரம் கெட்டுப் போய் விட்டது என்பதை அவனால் நம்ப முடியவில்லை. 'என்னைத் தள்ளி வைத்து, இந்தச் சின்னப் பயல்கள் என்ன செய்து





MARIANNE COOK
in Universal-International's
"INTERLUDE"

MAX FACTOR
HOLLYWOOD

Cleansing Cold Cream

A luxuriously soft, smooth cleansing cold cream especially developed for the proper removal of make-up and a soothingly thorough cleansing of the skin.



Rs. 5.25

Available at all Leading Cosmetic and General Stores

Sole Agents in India:

ORIENT COSMETIC PRIVATE LIMITED
MADRAS • BOMBAY • CALCUTTA

ஹெடன்ஸா



மூல நோய்க்கு

எங்கும் கிடைக்கும்

பர்மாவுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் !

சுந்தரம் அண்டு கம்பெனி
358, மொகல் தெரு, ரங்கூன்

ஹோமியோபதி

வைத்தியத்தைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ உங்கள் வீட்டி லிருந்து கொண்டே படித்து டாக்டராகப் பணியாற்றலாம்.

விவரங்களுக்கு உடனே எழுதுங்கள்

தமிழ்நாட்டின் தலைமையான ஹோமியோபதி ஸ்தாபனம்

தி ஹோமியோபதி ஹவுஸ்

N.K. 77, ராமகிருஷ்ண மடம் ரோடு
மதராஸ் - 28


விடுவார்கள், பார்த்து விடுகி றேன் ஒரு கை!'' என்று ஆத்திரம் கொண்டான் அந்தக் கண்ணிழந்த கிழவன்.

* * *

அடுத்த ஞாயிற்றுக் கிழமை வந்தது. ஆனால் முத்துசாமி வழக்கம் போல் திப்பணங் குறிச்சிக்கு வர வில்லை. கிழவன் மாசானத்தைக் கூப்பிட்டான். "முத்து சாமி ஏன் வரலே?''

மாசானம் பதில் சொன்னான். உண்மையைக் கிழவ னிடம் சொல்லி என்ன பிரயோசனம்?

''சிநேகிதப் பிள்ளைகளோட, எங்கேயோ மலங்காடு சுத்திப் பார்க்கப் போகிறதாகச் சொல்லிக்கிட்டிருந்தான். அது தான் அவன் வரலே போலிருக்குது'' என்று மழுப்பினான்.



வருமான வரி கமிஷனர் திரு வி. எஸ். கே. துரைசாமி நாடார் அவர்களின் குமாரர் திரு ஆனந்தராஜனுக்கும் திரு வி. ஏ. எம். சிதம்பர நாடார் அவர்களின் குமாரி சௌ. இன்மைக்கும் சமீபத்தில் விருதுநகரில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

''பேராச்சி எங்கே? அவள் சத்தத்தையே காணோம்?'' என்று கருப்பண்ணக் கிழவன் விசாரித்தான்.

''தோட்டத்திலே நிற்கிற பேராச்சி! கூப்பிடட்டுமா?'' என்றான் மாசானம்.

கிழவனுக்கு மனசு சமாதானமாயிற்று. ஆனால் முத்துசாமி, வீட்டுக்கு வராததைப் பற்றி என்னென்னவோ எண்ணங்கள் தலைதூக்கின.

* * *

மறுநாள்காலை ஒன்பது மணிக்கு ஒரு வாடகை மோட்டார் திப்பணங்குறிச்சிக்குள் நுழைந்தது. மோட்டாரின் 'பூம் பூம்' சத்தம் கேட்டு, வீட்டுக்குள்ளிருந்த ஆண் பெண் குழந்தைகள் அடங்கலும் வெளியே ஓடி வந்தார்கள். கார் மெதுவாக, குண்டு குழிகளில் தூக்கிப் போட்டுக் கொண்டு கருப்பண்ணக் கிழவன் வீட்டு வாசலில் வந்து நின்றது. ஓடோடியும் வந்த கிராமக் குழந்தைகள் காரைச் சூழ்ந்து நின்று கூச்சல் போட்டார்கள்.

''என்ன சத்தம்?'' என்று திடுக்கிட்டான் கருப்பண்ணக் கிழவன்.

காளியம்மையும் பேராச்சியும் வெளியே வந்து திப்பணங்குறிச்சிக்குள் மோட்டார் வந்து நிற்கும் அதிசயத்தைப் பார்த்தார்கள். அதிலும், மாசானம், காருக்குள்ளிருந்து வெளியே இறங்கிய பொழுது, காளியம்மைக்கு ஆச்சரியம் அளவு கடந்து போயிற்று.

''என்னடா, மாசானம்?'' என்று கேட்டான் கிழவன்.

''மோட்டார் கொண்டு வந்திருக்கிறேன், ஐயா, ஏறுங்க. டவுனுக்குப் போகலாம்'' என்றான் மாசானம்.

''டவுனுக்கா? எதுக்குடா தம்பி?''

''கண் ஆஸ்பத்திரிக்குத்தான். ஓங்களுக்குக் கண் ஆபரேஷன் பண்ணறதுக்கு. எல்லா ஏற்பாடும் செய்தாச்சு.''

கருப்பண்ணக் கிழவனுக்கு இந்தத் திடீர் நிகழ்ச்சி ஒன்றும் புரியவில்லை. இழந்த கண் பார்வை, அந்தக் கணமே திரும்பக் கிடைத்து விட்டது போல் ஒரு சந்தோஷ மயக்கம் பிறந்தது அவனுக்கு.

மாசானம் பக்கத்தில் வந்தான். ''புறப்படுங்க, டாக்டரு காத்துக்கிட்டிருப்பாரு'' என்று துரிதப்படுத்தினான்.


''மாசானம்! எல்லாம் சரி, ஆபரேஷனுக்கு ரூபாய் ஏது ஒங்கிட்டே? நூறு ரூபாய்க்குக் குறையாமல் அதற்கு வேணுமே தம்பி?''

''எல்லாம் இருக்குது, ஐயா!''

''கடன் ஏதாச்சும் வாங்கிட்டியா?''

''இல்லே, ஐயா! கைப்பணந்தான். சிறுகச் சிறுகச் சேர்த்து வைச்சிருந்தேன். புறப்படுங்க. மோட்டார்காரரு கோவிச்சுக்கிடுவாரு'' என்றான் மாசானம்.

கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த தன் குழந்தைகளில், மாசானத்தை நினைத்துப் பெருமைப்பட்டான் கிழவன். கண் மாத்திரம் திறந்து விட்டால், பேராச்சியின் கல்யாணத்தையும் கண் குளிரப் பார்க்கலாமல்லவா என்ற நினைவு தாங்க முடியாத ஆனந்தத்தை ஊட்டியது. ஆனால் மறு கணமே,



தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்கு ஜூன் 27-ந்தேதி கோடி அர்ச்சனை பூர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. அவ் விழாவின்போது சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்களுக்குத் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் "நல்லறங் காவலர்" என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

ரூபாய் வந்து எதிரே நின்றது! ஒன்றுக்கும் உதவாத கிழவன் கண்களைச் சரிப்படுத்துவதற்கு, நூறு ரூபாயை வீணாக்குவதா? ஒன்றா இரண்டா, பத்தா? நூறு ரூபாய் ஆச்சே!

கிழவன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான்; திடீரென்று அவன் கண்களிலிருந்து கண்ணீர் மளமள வென்று பொங்க ஆரம்பித்தது.

மாசானம் பதறிப் போனான். ஏன் கிழவர் இப்படிக் கண்ணீர் வடிக்கிறார்?

இரண்டொரு நிமிஷங்களில், கருப்பண்ணக் கிழவனுக்குத் தன் உணர்வு வந்தது. மகனைக் கூப்பிட்டுச் சொன்னான்.

"மாசானம்! மோட்டாரைப் போகச் சொல்லிவிட்டு வா. எனக்கு ஆபரேசன் வேண்டாம்" என்று கிழவன் குரல் உறுதியோடும் தீர்மானத்தோடும் ஒலித்தது.

"என்ன ஐயா சொல்றீங்க?"

"ஆமாம் தம்பி. அடுத்த வியாழக் கிழமை நம்ம பேராச்சிக்குக் கல்யாணம். முத்துசாமியைத் தேடிப் போய்ச் சொல்லிட்டு வந்துடு. ஒங்கையிலே இருக்கிற நூறு ரூபாயை வச்சு, ஊருக்குச் சோறு போட்டுடலாம். ம்...புறப்படு, தம்பி!"

"ஐயா, இது என்ன பேச்சு! இப்ப கண் ஆபரேசன்தான் முக்கியம். இந்த வருஷம் பாறையடி வயல் நல்லா விளைஞ்சிடும். வர்ற தை மாசம் பேராச்சி கல்யாணத்தை முடிச்சிட்டாப் போவுது. இப்போ என்ன அவசரம்?"

கிழவனுக்கு ஆத்திரம் வந்தது.

"நான் சொல்றதைக் கேளுடா, மாசானம்! இழந்து போன கண்ணைப் பத்தி அப்புறம் கவனிச்சுக் கிடலாம். நல்லா இருக்கிற கண்ணு நீயும், பேராச்சியுந் தான் எனக்கு. நீங்க சந்தோஷமாக இருந்தால், அதுவே என் கண்ணுக்கு வெளிச்சம் வந்த மாதிரிதான்."

கிழவனின் இந்த வார்த்தைகளைக் கேட்டு நெஞ்சு உருகிப் போனான் மாசானம். அவன் மடியில் வைத்திருந்த நூறு ரூபாய், நூறாயிரம் ரூபாயாகப் பொங்கிப் பெருகியது.

அடுத்த வியாழக்கிழமை விடியற்காலையில் திருவளர்செல்வன் முத்துசாமிக்கும் திருவளர்செல்வி பேராச்சிக்கும் திருமணம் இனிது நடந்தேறியது. திப்பணங்குறிச்சியிலுள்ள நூறு வீட்டு ஜனங்களும், கருப்பண்ணக் கிழவன் வீட்டு முற்றத்திலும் சாவடியிலும் கூடத்திலும் வரிசை வரிசையாக உட்கார்ந்து வயிறாரச் சாப்பிட்டார்கள். சேரைக்காரி வெள்ளையம்மாள் பந்தியில் உட்கார்ந்திருந்தாள். திருவோட்டுச் சாமியார் முழு மூச்சோடு கல்யாண விருந்தை ஒரு கை பார்த்தார். குழந்தைகள் எச்சில் கையை உயர்த்தி, "பாயசம் இங்கே!" என்று கூச்சலிட்டார்கள். மாசானமும் காளியம்மையும் "அங்கே ரசம்" "இங்கே சாம்பார்" என்று தொண்டை கட்டிய குரலில் பரிமாறுபவர்களுக்குக் கட்டளை இட்டுக் கொண்டிருந்தனர்.

எல்லாம் காதில் விழுந்தது. சாவடி மூலையில் குந்தியிருந்த கருப்பண்ணக் கிழவனுக்கு! ஊரார் வயிறு நன்றாக வாழ்த்தும் என்று மகிழ்ச்சியோடு நினைத்தான் அந்தப் பழங்கால மனிதன்.

அப்போது அவன் கண்களில் விழுந்திருந்த பூ கரைந்து மெல்ல வெளிச்சம் உதயமாகிக் கொண்டிருந்தது.

கோத்ரெஜின்

நங்கூரம் ⚓ மார்க்


புதிய தயாரிப்பு

நவ்-தால்

நவீன பித்தளை பாட்லாக்

60 ஆண்டுகளாக பலவித ரகமான சிறந்த பூட்டுகள் தயாரித்த முதிர்ந்த அனுபவத்தைக்கொண்டு, கோத்ரெஜ் நவ்-தால் பாட்லாக் தயாரிக்கப்பட்டது. அது உறுதியாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். சிறந்த முறையில் அதில் அமைக்கப்பட்டுள்ள இயந்திர நுணுக்கங்கள், இதர சாவிகள் திறப்பதற்கு இடம் கொடுப்பதில்லை— நவ்-தால் பாட்லாக்கை அதற்கென்றே தயாரிக்கப்பட்ட சாவிதான் திறக்கும்.

- ★ பித்தளை லீவர்களும் கவசமும்
- ★ உறுதியான தயாரிப்பு
- ★ ஆணியால் இறுக்கப்படாதது கச்சிதமாக மெஷினால் இணைக்கப் பட்ட உறுதியான ஜாயின்ட்டுகள்
- ★ துருவைத் தடுக்கும் காட்மியம் கோட்டிங் கொடுக்கப்பட்ட வளையம்



7 லீவர்கள்
சைஸ் : $2\frac{1}{2}$''
ரூ. 8.50 ந. பை. தான்



கோத்ரெஜ் ஷோரூம்களிலும், ஸ்டாக்கிஸ்ட்களிடமும், இரும்பு சாமான் கடைகளிலும் கிடைக்கும் . . .

பாதுகாப்பு இஞ்சினீரிங்கில் முதன்மையானவர்கள்

தமிழ் கூறும் நல்லுலகம்

சங்கத் தேர்தல்

தென்னிந்தியக் கழகம் ரூர்க்கியில் 1957 ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப் பட்டது. தென்னிந்தியக் கலையைப் பரப்புவ தற்கும், தென்னிந்தியர்கள் ஒன்று கூடித் தமிழ் வருஷ பிறப்பு, ஸ்ரீராமநவமி இன்னும் சில முக்கிய நாட்களைக் கொண்டாடுவதற் கும் இந்தக் கழகத்தை ஏற்படுத்தினார்கள்.

தென்னிந்தியக் கழகத்தின் 1958-59 வரு ஷத்துத் தேர்தல் 22-6-58 அன்று நடத்தப் பட்டது. தேர்தலில் ஸர் ஹெரால்ட் வில்லியம்ஸ் ஆதரவாளராகவும், புரொபஸர் சேஷாத்திரி தலைவராகவும், திரு என். ஜெய ராமன் காரியதரிசியாகவும், திரு ஜார்ஜ் உதவிக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். நிர்வாகக் குழுவினர் தென்னிந்தி யக் கழகத்தை, தங்கள் சலியா உழைப்பினால் வளரச்செய்து, வடநாட்டாருடன் ஒன்றுகூடி,



ஹைதராபாத் பாரதி சங்கக் கலைவிழா துவக்கம்

அவர்கள் ஆதரவைப் பெற்றுத் தென்னிந்தி யக் கலையைப் பரப்ப வாழ்த்துகிறோம்.

புதுமைப்பித்தன் நினைவு விழா

கொழும்பு பாரதி இளைஞர் சங்கத்தார் சமீபத்தில் புதுமைப்பித்தன் அவர்களின் பத்தாவது நினைவு நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

சங்கத் தலைவர் நயமணி திரு கல்கிதாசனார் தலைமை வகித்துப் பேசும்போது, சிறு கதை களின் இலட்சிய மரபைத் தமிழகத்துக்கு வழங்கிச் சென்ற மேதை புதுமைப்பித்தன் என்று கூறினார்.

பல பேரன்பர்கள் புதுமைப்பித்தனுடைய மேதா விலாசத்தையும் இயல்புகளைப் பற்றி யும் பேசினார்கள்.

பின், இலங்கையில் ஏற்பட்டுள்ள அவசர கால நெருக்கடியின் காரணமாக, பாரதி இளைஞர் சங்கத்தைத் தொடர்ந்து கொழும் பில் நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதால், சங்கத்தைத் தமிழகத்தில், திருநெல்வேலியில் தொடர்ந்து அலுவல்களை நடத்துவதென்று நிர்மானிக்கப்பட்டு, அதற்கான வற்றைக் கவனிக்க ஏழு பேர்கள் கொண்ட செயல் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டது.

கலைவிழா

ஆந்திரத் தலை நகரில் தென்னிந்திய மக்கள் நிறையப்பேர் வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் காலத்தை வீணாகக் கழிக்காமல், தமிழ் இலக்கியம், நாடகம், இசை முதலிய கலைகளில் கவனம் செலுத்தி அவற்றை வளர்ப் பதில் ஈடுபட்டு வருகிறார்கள். அத்துடன் நின்றுவிடாமல், தமிழ் நாட்டுப் புயல் நிவா ரணத்துக்கு நிதி சேகரித்து அனுப்பி, பொதுப் பணியிலும் பங்கு எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். மேலும், அமரகவி பாரதியாரின் பெயரில் சங்கம் துவக்கி ஹைதராபாத்தில் தமிழ் முழக்கம் செய்து வருகிறார்கள்.

ஜூன் 28, 29 தேதி களில் ஹைதராபாத் பாரதி சங்கம் 'கலை விழா'வைச் சிறப்பாகக் கொண்டாடியது. ஜனாதி பதி பாபு ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் விழா வைத் துவக்கி வைத் தார்கள்.


எல்லாவற்றுக்கும் சிக ரம் வைத்தது போல், தமிழின் மூன்றாவது அங்கமான நாடகத்தை வளர்க்கும் நோக்கத் துடன் ஓரங்க நாடகமும் முழுநேர நாடகமும் வெற்றிகரமாக நடத்தி யிருக்கிறார்கள். இவ் வாண்டு அமரர் தேவன் எழுதிய மைதிலி நாடகம் சங்க அங்கத்தினர்களால் நிகழ்த்தப் பெற்றது. இரண்டாம் நாள் விழாவுக்கு இந்திய விஞ்ஞானி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார். கோவை வைஸ்-ஜட்ஜ் திரு எஸ். மகராஜன் தமிழிலே 'சொல்லினும் செய்த தவம்' பற்றி விவரித் தார். விழாவுக்கு ஆந்திர கவர்னர் ஸ்ரீபவச்சார் விஜயம் செய்திருந்தார். சங்கத்தின் உப தலைவர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி அவர்கள் வாழ்த்துச் செய்திகளை வாசித்தார்.

இரண்டு நாட்களும் ஏராளமான தமிழ் அன்பர்களும், இரட்டை நகரப் பிரமுகர் களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவை ஒட்டி அழகிய 'கலைவிழா மலர்' ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தக் கலை மலரில் பிரபல எழுத்தாளர் களும், அறிஞர்களும் கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள். பக்கத்துக்குப் பக்கம் அழகிய வர்ணச் சித்திரங்கள் மலரின் அழகுக்கு அழகு செய்கின்றன.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


ROSE
புதுமை!
விஞ்ஞேலியா
ரோஸ் டாய்லெட்
பவுடர்
ரூபா 1
ரோஜா மணமுள்ள அழகுசாதனப் பவுடர்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

